மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

முதல் வால்யூம் • பஹுதான்ய வருஷம் பங்குனிப் பகுதி.

15—3—1939.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

கவிதா விமர்சம்

1 பெரிய திருக்குன்றம் சுப்பராமய்யர் மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் 137
2 கண்ணை மறைத்த காதல் ... வாதூலன் 141
3 காட்டுக் கச்சேரி ... சக்திதாசன் சுப்பிரமணியன் 145
4 கவி பாரதியாரின் பெருமை ... P. கோதண்டராமன், M.A., B.L., ... 147

புதுக் கற்பனைகள்

1 நாடகாவதாரம் ... விசாரதன் 149
2 பிரம்மசாரியின் மனைவியர் ... கை. சு. வேங்கடராம சாஸ்திரி ... 153
3 சிற்றன்னையின் புதுப்பிறவி ... வில்லன் 156
4 பேதைமை ... ... ரா. ஸ்ரீ. தேசிகன், M. A. 160
5 சுகப்ரஹ்மம் ... . கௌண்டின்யன் 161
6 காம தஹனம் ... ... டாக்டர் வே. ராகவன். M.A., Ph.D. ... 163

மொழிபெயர்ப்புப் பகுதி

1 கதைக் கடல் ... ... டாக்டர். வே. ராகவன் M.A., Ph.D. ... 172
2 கடோத்கசன் தூது.... .... ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., ... 181

சில்பப் பகுதி

1 இரட்டைத் தெய்வம் ... வம்பன் 187
2 சில்பக் குறிப்புகள் ... டாக்டர் வே. ராகவன் M.A., Ph. D., ... 188

விஷயம்: பக்கம்.

அனுஷ்டானப் பகுதி

1	அந்தி வணக்கம்	கௌசிகன்	190
2	மாசி பங்குனி அனுஷ்டானங்கள்	டாக்டர் வே. ராகவன் M.A., Ph.D., ...	191

நாட்டியப் பகுதி

1	சில அபிநயக் கதைகள் ...	மாயக்கூத்தன்	195

புஸ்தக விமர்சனம்

1	நவமணிமாலை	M. லக்ஷ்மி அம்மாள், M.A., ...	196
2	கமால் அத்தா தருக்: பாலஸ்தீனம்	மும்மொழியாளன்	197
3	நாரத பக்திஸூத்ரம், பஜகோவிந்தம், ஆத்மாநுஸந்தானக் கிரமம்	அகஸ்தியதாஸன்	198

மாதக் குறிப்புகள் 199

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒருபக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறேம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறும் பிரார்த்திக்கிறேம்.

இப்பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணு **6.**

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. **4.**



கவிதா விமர்சம்.

பெரியதிருக்குன்றம் சுப்பராமையர்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தமிழ்நாட்டிலே சென்ற நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற சங்கீத வித்துவான்களில் ஒரே பெயருடைய பலர் இருந்தனர். ஒருவருக்குமேற்பட்ட வைத்தியநாதையர்களும், கிருஷ்ணையர்களும், சுப்பராமையர்களும் சங்கீத தேவதையின் உபாஸனை புரிந்து வந்தனர். சுப்பராமையர்களுள் வைத்தீசுவரன் கோயிலில் இருந்த சுப்பராமையர் ஒருவர்; ஸ்ரீவாஞ்சியம் சுப்பராமையர் வேறு ஒருவர்; பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் மற்றொருவர்.

அவர்களுள் காலத்தால் முந்தியவராகிய பெரியதிருக்குன்றம் சுப்பராமையரென்பவர், கனமார்க்கத்தைத் தமிழ்நாட்டில் முதன்முதலில் அநுபவத்திலே கொணர்ந்துகாட்டிப் புகழ்பெற்ற கனம் கிருஷ்ணையருடைய தமையனார். அவர் சங்கீதத்திலும் ஒருவாறு ஸாஹித்தியத்திலும் ஒருங்கே திறமையுடையவராக இருந்தார்.

பெரியதிருக்குன்றமென்பது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் தாலுகாவில் உள்ள ஒரு கிராமம். அங்கே பரம்பரையாகவே சங்கீத வித்தையில் மேம்பட்டு வந்த குடும்பத்தில் சுப்பராமையர் உதித்தார். அவர் அந்தணர்களுள் அஷ்டஸஹஸ்ரமென்னும் வகுப்பைச் சார்ந்தவர். அவருடைய தந்தையார் இராமசாமி ஐயரென்பவர்.

இராமசாமி ஐயருக்கு ஐந்து குமாரர்களும் ஒரு பெண்ணும் உண்டு. அவர்களுள் மூத்தவரே சுப்பராமையர். அக்குடும்பத்தில் பரம்பரையாக இருந்துவந்த இசைச்செல்வத்தால் பல சிற்றரசர்கள் வழங்கிய பொருட்செல்வமும் பூமியும் கிடைத்தன. அதனால் சுப்பராமையருடைய தந்தையாருக்கு வறுமைப்பிணியின் துன்பம் இல்லை. தம்முடைய நில வருமானங்களை வைத்துக்கொண்டு சங்கீதக் கலையையும் வளர்த்து வாழ்ந்திருந்தார். அக்காலத்தில் கபிஸ்தலத்தில் இருந்த ஸ்ரீமான் முத்

தைய மூப்பனாருக்கும் இராமசாமி ஐயருக்கும் மிக்க நட்பு இருந்து வந்தது. அவ்விரண்டு குடும்பத்தினரும் தொடர்ந்து பலகாலம் நண்பர்களாகவே வாழ்ந்து வந்தனர். இராமசாமி ஐயருக்கு அவ்வப்போது மூப்பனாருடைய உதவி கிடைத்துவந்தது.

இங்ஙனம் வாழ்ந்துவந்த இராமசாமி ஐயருக்குப் புத்திரராகத் தோன்றிய சுப்பராமையர் யாதொரு குறைவுமின்றி வளர்ந்துவந்தார். அவருடைய தந்தையார் அவருக்கு இன்றியமையாத தமிழ்க்கல்வியையும் சங்கீதப்பயிற்சியையும் அளித்தார்.

நாளடைவில் சுப்பராமையருக்குப் பின் தோன்றிய சகோதரர்களுள், சுந்தரையர் கிருஷ்ணையர் என்னும் இருவரும் சுப்பராமையரைப்போலவே ஸங்கீதத்தில் நாட்டமுடையவர்களாக இருந்தனர். அம்மூவருக்கும் சிறந்த சங்கீதப் பயிற்சியை அளித்து, 'அவையகத்து முந்தியிருப்பச்' செய்ய வேண்டுமென்பது தந்தையாருடைய விருப்பம். அதற்குமுன் அடிப்படையாகத் தமிழறிவு அவசிய மென்பதை அவர் உணர்ந்தவராதலின், அரியிலூரில் அக்காலத்தில் வாழ்ந்திருந்த ஸ்ரீ சண்பகமன்னாரென்னும் ஸ்ரீவைஷ்ணவ வித்துவானிடம் தமிழ் பயிலும்படி செய்தனர். சண்பகமன்னார் தமிழிலும் இசையிலும் சிறந்த திறமை வாய்ந்தவர்; பல கீர்த்தனங்களை இயற்றியுள்ளனர்; சமரஸஞானி; மிக்க அடக்கமான குணம் வாய்ந்தவர்.

அவரிடம் தமிழ்பயின்ற காலத்தில் மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாக அதில் ஈடுபட்டவர் சுப்பராமையரே. மற்றவர்களுக்கும் ஓரளவு சிரத்தை இருந்தாலும் சுப்பராமையருக்கு இருந்த ஊக்கம் அவர்களுக்கு உண்டாகவில்லை. சண்பகமன்னாருடைய பழக்கத்தினால் விசேஷ நன்மை யடைந்தவர் சுப்பராமையரே. தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் வேதாந்த சாஸ்திரங்களையும் அப்பெரியாரிடம் சுப்பராமையர் ஊன்றிப் பயின்று வந்தார். அப்பெரியாரைப்போல அடக்கமாக வாழவேண்டுமென்ற கருத்து அவருக்கு உண்டாயிற்று. இளமையிலேயே ஏற்பட்ட அக்கருத்து அவர் நெஞ்சில் ஊறி அவருடைய வாழ்வில் அவருக்குப் பெருமையை அளித்தது. அவருடைய சகோதரர்கள் தங்கள் சங்கீதப்பயிற்சியினாலும் உண்ண உடுக்கக் குறைவில்லாத குடும்ப நிலை முதலியவற்றாலும் மிகவும் திருப்தியடைந்தனர்; அத்திருப்தி சில சமயங்களில் பிறருக்கும் புலனாயிற்று. கனம் கிருஷ்ணையர் அந்தத் திருப்தியினால் சிறிது செருக்குடையவராகக்கூடக் காணப்பட்டனர். ஆனால் சுப்பராமையரோ, அடக்கத்திலே சிறந்தவராக விளங்கினார்.

இராமசாமி ஐயர் தம்முடைய குமாரர்களுள் முன்னே கூறிய மூவருக்கும் பின்னும் உயர்ந்த சங்கீதப்பயிற்சி அளிக்க வேண்டுமென்று எண்ணினார். தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்தில் பச்சைமிரியன் ஆதிப்பையரென்பவர் பெரும்புகழ் பெற்ற சங்கீத ஆசிரியராக அக்காலத்தில் விளங்கினார். அவரிடம் தம் குமாரர் மூவரையும் இராமசாமிஐயர் ஒப்பித்தார். மூவரும் சங்கீத வித்தையிலே தேர்ச்சி பெற்றுவந்தனர்.

சுப்பராமையர் சங்கீதத்தோடு தமிழையும் இடைவிடாமல் பயின்றுவந்தார். அவ்வப்போது சில கீர்த்தனங்களையும் செய்யுள்களையும் இயற்றிப் பழகினார். அவருக்கு முருகக் கடவுளிடத்தில் பக்தி அதிகம். அக்கடவுள் விஷயமாக அவ்வப்போது தாம் பாடிய கீர்த்தனங்களைத் தம் குருமூர்த்தியாகிய ஆதிப்பையரிடம் காட்டுவார். அக்கீர்த்தனங்களைக் கேட்டு அம் மகாவித்துவான் அளவற்ற மகிழ்ச்சியடைவார். சங்கீதமும் சாகித்தியமும் ஒன்றனோடு ஒன்று நன்றாக இயைந்து விளங்குவதைப் பாராட்டுவார். அன்றியும் அக்கீர்த்தனங்களில் உள்ள பக்திச்சுவையை உணர்ந்து, "நீ சின்ன ஸ்ரீநிவாஸன்" என்று மனங்குளிர்ந்து கூறி அவரை ஆசிர்வாதஞ் செய்வார்.

"ஸ்ரீநிவாஸன்" என்பவர், சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்திருந்த சங்கீத வித்துவான். அவர் பல அருமையான கீர்த்தனங்களை ஸ்ரீரங்கநாதர் விஷயமாக இயற்றியிருக்கின்றார். அவர் பெரிய

பக்தராதலினல் அவருடைய கீர்த்தனங்களிலே பக்திச்சுவை ததும்பி நிற்கும்; சங்கீத அமைப்புகள் மிகவும் செவ்விய நிலையிலே பொருந்தி விளங்கும்.

இவற்றைப் பச்சை மிரியன் ஆதிப்பையர் நன்கு உணர்ந்தவர். சங்கீதம், சாஹித்தியம் முதலியகலைகள் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்யப்பட்டாலன்றிச் சிறப்புடையன வல்லவென்பது நம் பெரியோர் கொள்கை. நம் நாட்டில் எத்தனையோ கலைஞர்களும் புலவர்களும் வாழ்ந்திருந்தாலும், காலவெள்ளத்தில் அவர்களுடைய சிற்பங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. தெய்வ பக்தியாகிய கனம் அவற்றில் இருந்தால் அவை மாத்திரம் பலகாலம் காலவெள்ளத்தை எதிர்த்துநின்று விளங்குகின்றன. நூற்றுக்கணக்கான வித்துவான்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்து ஆயிரக்கணக்கான சாஹித்தியங்களை இயற்றினர்கள். அவற்றிற் பெரும்பாலன அழிந்துபோயின. அதற்கு முக்கியமான காரணம் வித்தையைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யாமல் ஜமீன்தார்களையும் பிரபுக்களையும் பாடினமையே. ஸ்ரீ தியாகையர் முதலிய மகான்களோ தெய்வபக்தி மணம் கமழும் பாமலர்களை இறைவன் திருவடிகளிலே அணிந்தனர். அதனல் அம்மலர்கள் வாடாமல் விளங்குகின்றன.

தம் கீர்த்தனங்களிலே தெய்வபக்தி நிறைந்திருப்பதை யறிந்து ஆதிப்பையர் பாராட்டியதனல், சுப்பராமையருக்கு மேலும் மேலும் ஊக்கமுண்டாயிற்று. முருகக்கடவுள், அம்பிகை, பரமசிவன், திருமால் முதலியவர்கள் விஷயமாக அவ்வப்போது அவர் செய்த கீர்த்தனங்கள் பல.

தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்து வித்துவான்கள் வரிசையிலே சேரும் சிறப்பை சுப்பராமையரும். சுந்தரையரும் கனம் கிருஷ்ணையரும் பெற்றனர். சரபோஜி அரசர் காலத்தில்சுப்பராமையர் தஞ்சாவூரிலே இருந்துவந்தார். அப்போது பிருஹதீசுவரர்மீது அவர் ஒரு குறவஞ்சி நாடகம் இயற்றினர். இடையிடையே பெரியதிருக்குன்றம் சென்று சிலகாலம் இருந்துவருவார். கபிஸ்தலம் சென்று தம்முடைய குடும்ப நண்பராகிய முத்தையமூப்பனருடன் அளவளாவி வருவார். அம்மூப்பனருடைய அன்பிலே ஈடுபட்டு அக்காலத்தில் சுப்பராமையர் அவர்மீது ஒரு குறவஞ்சிப் பிரபந்தம் இயற்றினர்.

சுப்பராமையருடைய தம்பியாராகிய கனம் கிருஷ்ணையர் திருவிடைமருதூரில் முதலில் இருந்து அப்பால் உடையார்பாளையம் ஸம்ஸ்தான வித்துவாகை விளங்கலாயினர். அக்காலத்தில் சுப்பராமையரும் சுந்தரையரும் தஞ்சையிலே இருந்தனர். அவ்விருவரையும் வித்துவான்கள் முறையே பெரியதுரை, சின்னதுரை என்று அழைப்பது வழக்கம்.

சரபோஜி அரசருக்குப் பின்பு சிவாஜி அரசர் பட்டத்திற்கு வந்தார். சரபோஜி அரசரோடு பழகியதுபோல அவர் குமாரரோடு பழகுதற்குச் சுப்பராமையருக்கு ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆயினும் ஸம்ஸ்தானத்தின் பெருமையை எண்ணி அங்கே இருந்து வந்தார்.

சரபோஜி அரசர்மீது கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் ஒரு குறவஞ்சி நாடகம் இயற்றியிருக்கிறர். அது யாவராலும் பாராட்டப்பெற்றது. சிவாஜி அரசர் மீதும் ஒரு குறவஞ்சி இயற்றவேண்டுமென்று சில நண்பர்கள் சுப்பராமையரிடம் வற்புறுத்திக் கூறினர்கள். அப்படியே அவர் ஒரு குறவஞ்சி இயற்றினர். ஆயினும் அது பிரசித்தமாக வழங்க வில்லை. சில கீர்த்தனங்களை மாத்திரம் நான் இளமையில் கேட்டிருக்கிறேன். பிறகு சில அதிகாரிகளின் விருப்பத்தின்படி சிவாஜிமன்னர் மீது ஐந்து ராகங்களில் பஞ்சரத்தினமாக ஐந்து கீர்த்தனங்களை இயற்றினர். அக்கீர்த்தனங்களைக் கேட்டவர்கள் அவற்றின் அமைப்பைப் பாராட்டினர். சிவாஜி அரசரும் கேட்டு மகிழ்ந்தனர். அதற்குப் பரிசாக ஒரு கிராமம் வழங்கவேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். அதையுணர்ந்த சில பொறுமைக்காரர்கள், "மகாராஜா அவர்கள் தமிழ்ப் பாட்டைக் கேட்கக்கூடாது. கேட்டால் வம்சம் அழிந்துவிடும்" என்று பயமுறுத்தினர்கள். வரவரத் தம்முடைய சுதந்திர நிலையையும் சௌகரியங்களையும் இழந்துவந்த சிவாஜியரசர்

அவர்கள் வார்த்தையை நம்பினார். இயல்பாக அதிர்ஷ்டக் குறைவுள்ள தமக்கு அந்தக் கீர்த்தனங்கள் ஏதேனும் தீன்மையை உண்டாக்கினால் என்செய்வதென்று அஞ்சினார். அவருக்கு உண்மையிலே சங்கீதத்திலும், சங்கீத வித்துவான்களிடத்திலும் அன்பு இருந்தால் அந்தப் பொறாமைக்காரர்களுடைய வார்த்தைகளைச் செவியில் வாங்கியிருக்கமாட்டார். "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல அவர் நிலை பலஹீனமாக இருந்தமையால், அவருக்கு எதைக் கண்டாலும் சந்தேகமும் அச்சமும் உண்டாயின. உண்மையில் வித்தையினிடத்தில் அன்பு இருந்தமையால் எந்த இடையூற்றையும் கவனியாமல் அதை வெளியிட்ட பெருவள்ளல்கள் தமிழ்நாட்டில் இருக்கவில்லையா? 'புகழெனின் உயிரும்' கொடுக்கும் தமிழ்வள்ளல்கள் எத்தனைபேர்! தன் இன்னுயிர் போவதாக இருப்பினும், தமிழினிமையை நுகர்வதற்கு இடையூறு இருத்தல் கூடாதென்று நந்திக்கலம்பகத்தைக் கேட்டுத் தமிழின்பத்திலே உயிரை நீத்த பல்லவமன்னனுடைய வரலாறு கலையின்பத்தை மதிக்கும் அறிஞர்களின் இயல்பை நன்றாக விளக்குகின்றதன்றோ?

சிவாஜி மன்னர் தமக்கு மான்யம் அளிப்பாரென்ற விஷயம் பலர் வாயிலாகச் சுப்பராமையருக்கு எட்டியது. பிறகு அந்த எண்ணம் மாற்றப்பட்டதையும் உணர்ந்தார். 'நமக்குக் கிடைக்க வேண்டிய லாபத்தை இழந்தோமே' என்று அவர் வருந்தவில்லை. 'இத்தகைய இடத்தில் இருப்பதாலன்றோ நமக்கே இழிவு உண்டாவதோடு தெய்வத் தமிழுக்கும் இழுக்கு உண்டாயிற்று. இனி இங்கே இருப்பது தகாது' என்று கருதித் தம் ஊருக்கு உடனே புறப்பட்டுவிட்டார்.

அது முதல் அவர் ஈசுவர பக்தி பண்ணிக்கொண்டு ஸங்கீத ஸாஹித்திய இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்து வந்தார். அவர் தஞ்சை ஸம்ஸ்தானத்தின் தொடர்பை விட்டு விட்டாலும், சங்கீத உலகத்தில் அவருக்கு இருந்த மதிப்புக் குறையவில்லை. சங்கீத வித்துவான்கள் அவருடைய கீர்த்தனங்களைப் பெரிய சபைகளிலெல்லாம் பாடி ஜனங்களை இன்புறுத்தி வந்தனர். ராகபாவங்களை நன்றாக வெளிப் படுத்தும் முறையில் அவருடைய கீர்த்தனங்கள் அமைந்திருப்பதை யறிந்து சங்கீத வித்துவான்கள் மகிழ்ந்தனர். அவருடைய உருப்படிகள் பெரும்பாலும் இலக்கணவழுவின்றி எளிய நடையில் நல்ல பொருளுடையனவாக இருத்தலை யறிந்த தமிழ் வித்துவான்கள் பாராட்டினர்.

அவ்வப்போது தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்து இன்புறுவதும் அவ்வத்தல விஷயமாகக் கீர்த்தனங்களை இயற்றிப் பாடுவதும் சுப்பராமையருக்கு உவப்பைத்தரும் செயல்களாக அமைந்தன. அவருடைய கீர்த்தனங்கள் பெரியனவாகவே இருக்கும். அவற்றில் தலசம்பந்தமான வரலாறுகளைக் காணலாம். 'திருவாரூர் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரவர்கள் வடமொழியில் இயற்றியுள்ள கீர்த்தனங்களைப்போல இவை தமிழில் விளங்குகின்றன' என்று அக்காலத்தில் வித்துவான்கள் பாராட்டினர்.

ஒரு சமயம் சுப்பராமையர் கும்பகோணம் சென்றிருந்தார். அங்கே உபயஸம்ஸ்தான திவானாக விளங்கிய ஸ்ரீவாலீஸ் அப்புராயரென்பவர் வித்துவான்களிடத்தில் அன்புடையவராக விளங்கினார். அவருக்கும் சுப்பராமையருக்கும் பழக்கம் உண்டு. சுப்பராமையர் அப்புராயர் வீட்டிற்குப் போனார். சங்கராபரணத்தைச் சிலகாலம் அடகு வைத்தவராகிய நரசையரென்னும் வித்துவானும் அங்கே ஆஸ்தான வித்துவானாக இருந்தார். அப்புராயர் வீடே ஓர் அரசருடைய மாளிகைபோல விளங்கும். அடிக்கடி விருந்துகளும் ஸங்கீத வினிகைகளும் அங்கே நடைபெறுவதுண்டு. அன்று நரஸையருடைய வினிகை நடைபெற்றது. அப்போது வாலீஸ் அப்புராயர் சுப்பராமையரைப் பார்த்து, "சங்கராபரணத்தில் இப்போது புதிதாக ஒரு கீர்த்தனம் பாடவேண்டும்" என்று கூறினார். அப்புராயர் சுப்பராமையருடைய ஆற்றலை நன்கு உணர்ந்தவர். அதைப்பலரும் அறிய வெளிப்படுத்த வேண்டு

மென்பது அவருடைய அவா. ராயருடைய விருப்பத்தின்படியே சுப்பராமையர் அங்கு அப்போதே அந்த ராயருடைய விஷயமாகவே சங்கராபரண ராகத்தில் திரிகாலமும் அமைத்து ஒரு கீர்த்தனம் பாடினர். 'மிஞ்சுதே விரகம்' என்பது அதன் பல்லவி. நரசையரும் மற்றவர்களும் கேட்டு மகிழ்ந்தார்கள். சுப்பராமையர் ஆடம்பர மின்றி அடங்கியிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றூர்கள்.

சுப்பராமையர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். தூய்மையான ஒழுக்கமுடையவராதலின் அவர் தேகவன்மையோடு விளங்கினர். கனம் கிருஷ்ணையரும் வேறு சில சகோதரர்களும் அவருக்கு முன்பே காலமாயினர்.

அவர் ஒருவர்பின் ஒருவராக மூன்று மனைவியரை மணந்தனர். முதல் தாரத்திற்குச் சுப்பையரென்ற பிள்ளை ஒருவர் பிறந்தார். அவருக்கும் சங்கீதப் பயிற்சி உண்டு. அவரையன்றி மூன்று பெண்களும் பிறந்தனர்.

சுப்பராமையருக்குத் தேங்காய்ப்பாலில் மிகவும் விருப்பம் உண்டாம். தம் முதிய பிராயத்தில் அவருடைய மூன்றாந் தாரத்தினிடம், "தேங்காய் இருக்கிறதா?" என்று கேட்பாராம். அந்தப் பெண்மணி அவர் கருத்தை அறிந்து தேங்காய் இல்லாவிடினும் வருவித்துத் துருவிப் பால்காய்ச்சிக் கற்கண்டு சேர்த்து அவருக்குத் தருவது வழக்கமாம்.

சுப்பராமையருடைய கீர்த்தனங்களை அவர் சகோதரராகிய சுந்தரையருடைய புதல்வியார் தம் எழுபதாவது பிராயத்திலே பாட நான் கேட்டிருக்கிறேன். என் தந்தையாரும் சிறியதந்தையாரும் வேறுபலரும் அவற்றைப் பாடுவார்கள். என் தாயாருடைய தாய்க்குச் சுப்பராமையர் பெரிய பாட்டனாராவார். காலம் மாறிக்கொண்டே வருகின்றது. பழைய சிருஷ்டிகளை நாம் மறந்துவிடுகிறோம். சுப்பராமையருடைய கீர்த்தனங்களை இப்போது பாடுவாரே இல்லை. ஆனாலும், அவருடைய கீர்த்தனங்கள் முத்துசாமி தீக்ஷிதருடைய கீர்த்தனங்களோடு ஒப்ப அறிஞர்களால் மதிக்கப்பெற்ற காலம் ஒன்று இருந்ததென்பதை நினைக்கும்போது, அவர் வரலாற்றையேனும் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம் என்ற ஆசை தோன்றுகின்றது. அந்த ஆசையின் விளைவே இந்தக் கட்டுரை.

கண்ணைமறைத்த காதல்

(ஸ்ரீ வாதூலன் எழுதியது)

பின் பனிக்காலம்! காலை நேரம்! ஒற்றியூரரின் சிரம் சங்கிலியாரால் தொடுக்கப்பெற்ற மகிழமலர் மாலையோடு மிளிர்கின்றது. கண்குளிரக் காதல்கூரச் சுந்தரர் அவ்விறைவன்மீது பல பதிகங்களைப்பாடித் திடீரெனத் திரும்புகிறார். அவ்வளவே! அங்குள்ள அடியார் இருவரை நோக்கி "பங்குனி உத்திரத் திருவிழாவா? நீங்கள் ஆரூருக்குப்போகுபவர்களா?" எனக் கனிவாகக் கேட்கின்றனர் நந்தொண்டர்.

"ஆம்" என்ற எதிரொலியில் அவரது மனக்கண் ஆரூரையே அடைந்ததுபோல் காண்கின்றது. ஆனால் அதே சமயம் அவருடைய உள்ளமும் கலங்குகின்றது. பண்டையச் சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகத் திரைப்படலம்போல் சுந்தரரின் மனக்கண்ணை யடைந்து அவரைத் திகைக்கச் செய்கின்றன. ஆனல் அவருடைய முகம் மட்டில் ஏதோவொரு புதிய அச்சத்தைத் தெரிவிக்கின்றது.

"ஆம்" திருடனுக்குத் திருடப்போன விடத்தில் தேள் கொட்டினுல் போன்று நெஞ்சம் கலங்குகின்றது. ஆண்டவன் தன் அடியாரிடத்து மிகக்கொடியவன். பாவம்! அவர் கண் முன்னிலையில் மகிழமரம் தழைத்து நிற்கின்றது. மன்னுயிர் பிரிந்தாலும் வாழ்க்கையில் மறவா மகிழமரம்! உலகப் பேரின்பமாம் சங்கிலியை மலர்வித்த கற்பகமன்ரே அது?

சிவ ஸ்தலங்களைத் தரிசித்த சுந்தரர் திருவொற்றியூரை யடைந்தார். அங்குக் கன்னிமாடத்திலிருந்து கறைகண்டப்பெருமாளுக்குப் பணியாற்றி வந்த பேரழகி சங்கிலியாரைக் கண்ணுற்றுக் காதல் கொண்டனர். சுந்தரரது வாழ்க்கையிலும், ஏன்? இன்றும் மறவாத அந்த மகிழமரத்தடியே அவர்கள் சந்திப்பிடம். ஒற்றியூரரின் நற்றுணைகொண்டு அம் மகிழ மரத்தடியிலேயே சுந்தரர் சங்கிலியாரைக் கைப்பற்றினர்.

இன்னும் எம்மானையே உலகினருள் ஒருவருக்குத் தொண்டனுகக் காட்டத் திருமாளத்துக்கு ஏவினர் அல்லவா இவ்வாரூரர்? அப்பொழுது இவருடைய பக்திவயப்பட்ட சிவபெருமான் புலையுருக் கொள்ளவில்லையா!. பாவம், இப்பொழுது தொண்டர் விழிக்கும் விழி, பழிக்குப்பழிவாங்கவே அப்பெருமான் தன்னைச் சங்கிலியாம், சங்கிலிகொண்டு பிணித்துவிட்டானே என்று ஸந்தேஹிக்கின்றது. ஆம்; அப்பொழுது அவருக்கு, 'துணையும் அளவும் இல்லாதவன் தன்னருளே, துணையாக்கணையும், கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும், பிணியும் நிகர்த்த கட் சங்கிலிப் பேரமைத்தோளிரண்டும் அணைய,' உற்ற துணையாயிருந்தவர் திருவொற்றியூர்ப் பெருமானன்ரே? அவனருள் இல்லாவிட்டால், அம்புபோன்றும், பளபளப்பான கூரிய நீண்ட வேலாயுதம் போன்றும், கறுத்த மீன்விழியாளை—மானைப்பழித்த மருட்கண்ணமைந்த சங்கிலியாரைக் காதலியாக அணையக்கூடுமா அவர்? எப்பொழுதுமே தனது செய்கைகளுடன் சம்மதித்தக் கருத்தோடு தோன்றும் எண்ணம் போன்ற இறைவன்-சிவபெருமானைப் புகழவுமாட்டாது அவர் பொருமுகின்ருர். என் 'சங்கிலியாரை இனிவிட்டுப் பிரிவதில்லை' என்ற சூளுரை அவரது அறிவிலே கணந்தோறும் தோன்றிக்குழப்புகின்றது. சங்கிலியாரின் மணவிஷயம் பரவையார் அறிந்தால் என்ன ஆகும் என்றே அவர் அஞ்சுகின்ருர். ஒற்றியூரர் தம்பொருட்டுச் சங்கிலியார் மணவிஷயத்தில் எப்பரிசும், தியாகம் புரிந்தமையாலேயே சுந்தரர் அவரை "ஒற்றித்தியாகன்" என அழைத்தார்.

ஆனுல் திருவாரூர்த் தியாகராஜனே! அவரையுமறியாமல் கண்ணீரிடையே அவரது திருவாய் மலர்கின்றது. "ஏழிசையாய் இசைப் பயனுய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்" என்று.

இம்மை வளத்துட்சிறந்த மண், பெண், பொன் இம்மூன்றையும் பெறுவதில், ஸப்தஸ்வரங்களும், அவற்றின் உய்த்துணர்ந்த பொருளாகவும், இனிய அம்ருதமுமான என்னுடைய தோழன், என்று விளிப்பதில் திருவாரூர்ப் பெருமான் தொண்டர்பால் கனிந்த அன்பினன் எனக் குறிக்கின்றது அவர் உள்ளம். "குற்றம் நாடாது குணம் வேண்டுவான் நற்றோழன்" என்ற முறையிலே தன் மீதுள்ள குற்றங்களைப் பாராட்டாமல் தன்னுடன் தோழமை கொண்டவரும் அவ்விறைவன் என்று சுந்தரர் கூறுகையிலேயே-ஏதோ இன்னும் ஓர் பெரிய குற்றம் புரியவேண்டியிருக்கின்றதென்பதை எவ்வளவு நயமாகத் "தோழனுமாய்" என்று தெரிவிக்கின்ருர். திடீரென்று, தோழனுமாய அவ்விசன் மீது பெரும்பழி சுமத்துவதைப் பாருங்கள்.

"யான் செய்யும் துரிசுகளுக் குடனுகி"—ஆம்! ஸுந்தரர் செய்கின்ற, செய்த குற்றங்களுக்கெல்லாம் ஆதிகாரணமாயிருப்பவன் அவ்வாரூர்க்கடவுள்தானும். குற்றவாளியுமன்றி கூட்டாளியுமாயிருந்தமையால், அவரும் ஒரு குற்றவாளிதான் என்று விளம்பரப்படுத்துகின்ருர் தொண்டர். உலகினர் தம்மீது குற்றம் கூறினுல் அவ்விசனுக்கும் அதில் உடங்

தைக்குற்றமுண்டாம். ஆம்! அன்று பரவை என்னும் தேவதாசியைத் தந்த விஷயத்தில் உடந்தையாக இருக்கவில்லையா?

இப்பொழுது அவருடைய கண்கள் கலங்குகின்றன. பங்குனி உத்திரத் திருவிழா! ஆரூர்த்தோழன்-வீதிவிடங்கன் மகிழும் ஓர் நன்னாள்! பரவையின் உள்ளம் களிக்கும் பின்பனிக்காலம் அல்லவா? பண்புமிக்க அவளை இனிப்பிரிந்துத் தோழனையும் இழந்திருக்கத் தம்மைப்போன்ற ஏழை வேறு ஒருவரும் உலகில் இல்லை எனக் கூறுகின்றார். பாவம்! அறிவும் இழந்ததாலன்றோ முற்கூறிய சபதம் செய்ய நேர்ந்தது என்று வேதனைப் படுகின்றார். "மதியில்லா ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே." அறிவில்லாது—குறிக்கோளில்லாது குற்றவாழ்வு நடத்தும் தனக்கு அப்பெருமான் தோழமை என்றும் வேண்டும் என்றே அவர் நெஞ்சம் துடிக்கின்றது. தொண்டரின் வல்வினை திருமணக்கோலமாக வந்துற்றபொழுதுஅங்கு அல்வழக்காடித் தம்மை யாட்கொண்ட ஐயனின் இயல்பைச் சுந்தரர் எங்ஙனம் உணர்ந்து கொள்ளாமலிருக்கக் கூடும்? பாம்பின் கால் பாம்பறியுமன்றோ? சங்கிலியாரை யாதுசெய்வது? குழம்பிய மனதின் வலிகொண்டு தொண்டர் திருவொற்றியூரினின்றும் விரைந்து நடக்கின்றார். எங்கே? திருவாரூரை நோக்கித்தான்.

பசுவைப் பிரிந்த கன்றுபோல விரைந்து வந்த இவர் ஏன் இப்படி இடறி விழுகிறார்? சித்தம் கலங்கிய பித்தரா? இருக்க முடியாது. ஏனெனில் தனது தோழனையே-ஆரூர்ப் பெருமானையே "பித்தா" என்று அன்று அழைத்தவரன்றோ இவர்? பாவம்! நின்று விட்டாரே நடுவழியில்! அந்தோ! அடிக்கடித் தம் கைகளால் இரு கண்களையும் துலக்கித் துலக்கி நோக்குகின்றாரே? ஐயோ! இவரது கண்கள் பார்வையற்று விட்டனவே! கண்ணீர் பெருகுவதைத் தவிர வேறு வழியொன்றையும் காணோமே! திருவொற்றியூர் தாண்டும் எல்லையளவுதான் அவரது விரைவும் ஆர்வமும்! இப்பொழுதோ திருவெண்பாக்க எல்லையிலே கண்களையிழந்தவர் "இவர் தானோ பெருமை மிக்க சுந்தரர் என்ற தொண்டர்" என்னும் படி இடறி விழுந்து தள்ளாடி வருகிறார்.

சாலையோடு சென்ற அடியார்களின் கரத்துணை கொண்டுத் திருவெண்பாக்கத்துத் திருக்கோயிலை நண்ணுகின்றார் ஆரூரர். அவரது துரிசுடைய மனம், தன்னைத் தடுத்தாண்ட இறைவன்பால் கொதிப்படையடைகின்றது. சேவடி சேப்பத் தன்பொருட்டுத் தையல் சங்கிலிபால் பல இரவுகள் தூதுநடந்துபோன அப்பெருமான் இவ்விடரை விளைவிக்கக் கருதுவாரா என்ன? இல்லை! பலதடவைத் தன் முறையைக் கேட்டுக்குறையை நீக்கிய அப்பெருமானிடமே இன்றும் இக்குறைவினைக்கூறி இவ்விடரினின்றும் விடுபடலாம் என்று கோயிலுட் செல்லுகின்றார். அவருடைய கோபமோ எல்லைகடந்துவிட்டது.

"மூன்றுகண் ணுடையா யடியேன்
கண்கோள்வதே கணக்கு வழக்காகில்
ஊன்றுகோ லெனக்காவ தொன்றருளாய்!"

பாருங்கள்! தம்மையாட்கொண்ட பெருமானுக்கு மூன்று கண்களாம்! அல்வழக்காடும் திறமை மிகக்கொண்டவராம் அவர்! ஆகையால், 'அடியேனது கண்ணைக்கொள்வதும் அடிமைச்சீட்டினுள் உள்ளதாயின்-ஆண்டகை அடியானிடம் பெறும் கணக்கு வழக்காயின், உலகவியல்புக்கிணங்கக் கருணையுடன் ஊன்றுவதற்கோர் கோல் கொடுத்தலாகாதோ?' என்று வேண்டும் தொண்டரின் பெருந்தன்மை எத்தகையது? ஆம்! அடிக்கடி குறையிரப்பதால் "அன்புடைய முதலாளியும் என்புபோல் செயலற்று விடுவான்" என்ற கொள்கையைச் சுந்தரர் உலகினர்க்குச் சுட்டுகின்றார். கரும்பு ருசியாயிருக்கிறதென்று வேருடன் பறிக்கலாமா? பின் ஏன் இவ்வளவு கோபம், பணியாளராகிய சுந்தரருக்கு? முதலாளி என்றே இறைவனை அவர் நினைக்கவில்லை. தோழன் குற்றவாளி, என்றே அவர் நிச்சயிப்பதை, நண்பன் இருகண்களும் இழக்கப் பெற்றால் எனக்கு ஒருகண் இழப்பதைப் பற்றி ஆக்ஷேபமில்லையென்று கூறினவன் கதைபோல் என் இருகண்களும் அவிந்திருக்கத்

தோழனுகிய உனக்கோ மூன்றுகண்கள் உள்ளன என்பதில் எவ்வளவு நயம்! முத்தொழிலினும் வல்லவன் என முக்கண் படைத்தானும் இறைவன்.

"இதோ இதைப்பெற்றுக் கொள்ளுங்கள்'' என்ற யாழினுமினிய த்வனியில் சுந்தரர் முகம் பிரகாசமடைகின்றது. ஊன்று கோலுக்காகவல்ல. சங்கிலியாரின் இன்னிசையே அக்குரல். இப்பொழுது தொண்டர் தெய்வச் சோதனையாம் வலைக்குள் நன்கு பிடிபட்டுவிட்டதை உணர்கின்ருர். இனிப் பரவையாரின் முகத்தில் எங்ஙனம் விழிப்பது? "உலகமெல்லாம் ஈன்றவனே வெண்கோயிலிங் கிருந்தாயோ ?''

இவளை மணந்ததும் உன்னுல்தான் என்பதைப் பரவையாரிடம் தெரியப்படுத்த வேண்டுமென்று வேண்டுகின்ருர். உலகைப் படைத்து ஆட்டுவிக்கும் அன்பன் ஆதலின் தன்மீதுள்ளக் குற்றச்சாட்டுக்கு நீரே சாக்ஷி என அறிவிக்கின்ருர். கோலையும் கொடுத்து சொல்லிக் கொள்ளாது விட்டுவந்தக் கோல்வளைச் சங்கிலியாரையும், ஜீவனைத்தொடரும் விதியெனக் கூட்டுவித்தாய் நீ, என்று துணிந்து கூறிச் சாக்ஷியாக நீ இவ்வூரில் உள்ளாயோ? என்று வினவுகின்ருர்.

"உளோம் போகீர் என்ருனே.'' திடீரென்று யாவரும் கேட்ப, "நாம் கோயிலுள் உள்ளோம், போங்கள்'' என்ற உத்தரவை உருப்போட்டுப் பத்துப்பதிகங்களைப்பாடிச் சங்கிலியாரின் கரத்துணை கொண்டுக் கோலூன்றிக் காஞ்சிபுரம் அடைகின்ருர் சுந்தரர்.

ஏகம்பநாதனைப் பாடி இடக்கண்ணைப் பெற்ற சுந்தரர், கடுந்துயரம், வாதனையுமுற்றுத் திருவாரூர் வந்தடைகின்ருர். மக்கள், கண்ணவிந்து துணைகொண்டு கோயிலட்புகும் தொண்டரைக் கண்டு வருந்துகின்றனர். சங்கிலியாரின் சாயல் அவர்கள் யாவருடைய மனதையும் கவருகின்றது. வீதிவிடங்கனின் ஸந்நிதானத்தை யடைந்த சுந்தரர் கூறுவதைக் கேளுங்கள்.

"விற்றுக் கோள்வீர் ஒற்றியல்லேன் விரும்பியாட்பட்டேன்!'' ஏன் தோழனிடம் இவ்வளவு கோபம்? உடந்தைக் குற்றவாளியாகிப முதலாளியை உலகம் ஏத்தித்தொழத் தன்னை மட்டும் உலகினர்க்கு அங்கஹீனனுகக் காட்டிக் கொடுக்கலாமா ஈசன்? "சூளுரை தவறிய சுந்தரர் கண்ணவிந்தார்'' என்ற சொல் அவர் நெஞ்சை உலரச் செய்கின்றது. பாவம்! அந்தச் சபதத்தையும் அவ்வாண்டகை தான் செய்யச்சொன்னுன். இப்பொழுதோ! அதிர்ஷ்டத்துக்கு ஆண்டகை, பழிபாவங்களுக்குப் பணியாளனு? அப்படியாயின் இனி இறைவன்பால் குற்றேவல் புரியத் தம்மால் ஆகாதென்றே அவர் உள்ளம் கருதுகின்றது. தனது அடிமைச்சீட்டு சாதாரணமானது தானும்; ஊர்ச்சபையில் பதிவு செய்யப்படாததாம். அடிமைத் தொழிலில் ஊனமின்றியிருக்க வேறு உடைமையொன்றைக் காட்டி ஒற்றியாகவும் எழுதப்படவில்லையாம். ஆதலின், 'தாங்கள் அச் சீட்டிற் குறித்த அடிமையை விற்றுக்கொள்ளுங்கள்-வேறு ஒருவருக்கு மாற்றிவிடுங்கள்.! எனது பணி தங்கள்பால் ஒற்றிவைத்ததல்ல! யானே வலிய விருப்பங்கொண்டுதான் பணியாளனுகச் சம்மதித்தேன்' என்று கூறுவதோடு அவர் தமது இறைவன்-யஜமானனின் உடைமை யாவும் ஒற்றிவைக்கப்பட்டிருக்கின்றதென்ற உண்மையை உலகினர்க்குச் செவிடுபடச் சாற்றுகின்ருர். உண்மை' 'தொண்டரின் பணிக்காகத் தம்மையே ஒற்றியாகச்செய்து கொண்டானும் இறைவன்' எனும்படி திருவொற்றியூர் தலத்துள்ளனும் இவன்!

தன் கண்ணவியத் தாம் புரிந்த குற்றம் எதுவாயிருக்கக் கூடுமென்று சிந்திக்கிருர் தொண்டர். தம்மை இறைவன் வேருெருவருக்கு அர்ப்பணம் செய்தாலும் கொத்தையானக் கண்ணவிந்த ஆளை உலகினர் கொள்ளுவாரோ! விற்கப்படும் பொருள் விரும்பத்தக்கதாயன்ருே இருக்கவேண்டும்? குற்றம் ஒன்றும் புரியாத தம்மை இறைவன் 'குற்றமொன்றும் செய்ததில்லை கோத்தையாக்கினீர்'!

அத்துடனு? இன்னும் கேளுங்கள். 'ஏற்றுக் கடிகேள் என் கண் கோண்டீர் நீரே பழிபட்டீர்' என எச்சரிக்கின்றார். "ஆம் நான்செய்த குற்றம் தாங்கள் அறிந்திருக்க வேண்டும். அதைக் கூறுங்கள். இல்லாவிடில் என் கண் கொண்ட பழியை உலகம் உள்ள ளவும் உம்மீதுதான் சுமத்தும்" என்று எவ்வளவு வெறுத்த அதிகாரத்துடன் நியாயம் வேண்டுகின்றார்.

அடுத்தகணம் அவர் முகம் பிரகாசிக்கின்றது. அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும். பதிகம் விரும்பிய ஏகம்பன் ஒருகண்ணை ஈந்தனன். மற்றொரு கண்ணையும் ஆரூர்ப் பெருமான் தான் அருளவேண்டும். அவர் அருளாவிட்டால், "மற்றைக் கண்தான், தாரா தொழிந்தால் வாழ்ந்துபோதீரே." மற்றக் கண்ணையும் தந்தருளுங்கள் என்று வேண்டாது, 'என் கண்ணைத் தாராது போவீரேயாகில் நீர் உமது சுற்றத்துடன் வாழ்ந்திருங்கள்'! என நிந்தா ஸ்துதியாகக் கேட்கின்றார். தொண்டரின் துணிவு தான் எத்துணைத்து பாருங்கள்!. ஈசனையே ஆசீர்வதிக்கும் அடியாரின் துணிவு! உண்மைத் தொண்டரின் மஹிமையல்லவா இது. "அழுந்திய அன்பு அழிவதற்கோர் கருவியாம்." "நின்னைக் கொண்டவன் நெற்றிக் கண் படைத்தவரோ" என்ற உலகச்சொல்லும் இன்று அழிந்துவிடுமோ என்ன? பத்துப் பதிகங்களைப்பாடி முடித்ததும் சுந்தரரின் வலக்கண்ணும் பிரகாசத்தை யடைகின்றது.

அவ்வளவே! மக்களின் குழுவினின்றும் "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா!" என்ற சொல் வெளிப்பட்டு எதிரொலி செய்கிறது. பரவையாரும் இவ்வதிசயத்தை கண்டு வியந்து சங்கிலியாருடன் நட்புக் கொள்ளுகிறாள். பங்குனி உத்திரத்திருவிழா. வீதி விடங்கப் பெருமான், பரவையார் பரதமாடத் தொண்டர் பதிகம் பாடச் சங்கிலியார் மகிழத் திருவோலக்கம் வருகின்றார். ஆனல் பெருமையுள்ள தொண்டருக்குக் கண்ணவிந்த குற்றம் யாது? விளங்கவில்லையா? கண்ணைமறந்தது சங்கிலியாரின் காதற்சம்பவம்தான்! வேறொன்றுமில்லை!

காட்டுக் கச்சேரி.

(சக்திதாஸன் சுப்பிரமணியன், உதவியாசிரியர் 'நவசக்தி')

கானகத்தில் ஒரு சங்கீதக்கச்சேரி. எங்கிருந்தோ இனிமையான வேய்ங்குழலோசை கேட்கிறது. அக்குழலின் ஓசை பசுக்கூட்டத்தின் செவியில் புகுகிறது. ஆ! கடித்த அறுகம்புல்லை அசைபோட்டு மென்று தின்னுமல் அப்படியே மெய்ம்மறந்து பசுக் கூட்டங்கள் மந்தை மந்தையாகக் குழலோசை எழுந்திக்கில் வந்து நிற்கின்றன.

அதோ! கன்றுக் குட்டிகள்! பசுவிடம் பாலூட்டிக் கொண்டிருக்கின்றன. வேய்ங்குழலோசை காதில் புகவே அவை பாலூட்டுவதை மறந்து அப்படியே வாயைப்பிளந்து கொண்டு நிற்கின்றன. பசுக்கள் மெய்மறந்து பாலைச் சொரிகின்றன. கன்றுகள் ஊட்டவில்லை. பால் கீழே ஓடுகிறது.

அந்த மான்குட்டிகள்! மயிர்க் கூச்சலெடுத்து அவை ஒன்றுடன் ஒன்று அணைந்து கொண்டு கூடி நிற்கின்றன.

கண்ணுக்கினிய தோகையை விரித்து ஆனந்தமாய் மயிலினங்கள் ஆடுகின்றன. வேய்ங்குழல் ஓசை அவற்றின் காதில் வீழ்ந்தது. அதைக்கேட்டு அவை அப்படியே அயர்கின்றன. விரித்த தோகையை மடக்கவு

மில்லை. அப்படியே ஒன்றுகூடி இசை வரும் திக்கு நோக்கி வந்து நிற்கின்றன. பறவைக் கூட்டங்கள் பறத்த லொழித்தன; பாடுத லொழித்தன; பேசுத லொழித்தன; செவியிலே இசை நிறைந்தது. அவை மதிமயக்கங் கொண்டு உணர்வழிந்து இசைவரும் திசை நோக்கிச் செல்கின்றன.

அங்கே விளையாடிக் கொண்டும் மரங்களில் தழை பறித்துக் கொண்டுமிருந்த மாடு மேய்க்கும் பிள்ளைகள் குழலிசை கேட்டு விரைந்து வந்து நிற்கின்றார்கள்;

இவ்விதமாக யார் ஒருவர் குழலூதுகின்றாரோ அவரைச் சுற்றிக் காட்டுப் பிராணிகள் யாவும் கூடி விட்டன. குழலிசைப் புலவர் மேலும் மேலும் குழலினை யூதுகிறார். அக்குழலிசை கேட்டுக் கேட்டு யாவும் மயங்குகின்றன; உணர்விழக்கின்றன; உவகை பூக்கின்றன.

இவ்விதமான இன்னிசையில் உள்ளம் பறி கொடுத்தமையால் விலங்குகள் தங்கள் பகைமையை மறந்தன. பாம்புக்கும் மயிலுக்கும் பகையல்லவா? சிங்கம் யானைக்குப் பகையன்றோ? புலிக்கும் மானுக்கும் பகையல்லவா?

ஆனால் வேய்ங்குழலின்பம் எல்லா உயிரின் உள்ளத்திலும் சென்று நிரம்ப அவை புரியும் விநோதச் செயலைப் பாருங்கள். பெரிய சர்ப்பம் ஒன்று குழலோசை கேட்டுப் படமெடுத்து நிற்கிறது? அது என்ன செய்கிறது? அந்த வேணு கானத்திலே மயங்கிப் போய் மருண்டு அப்படியே மயில் மீது விழுந்து புரள்கிறது! பாம்பும் மயிலும் இவ்வளவு சிநேகமாயிருப்பதைக் கண்டதுண்டா? இசையிலே மயங்கிக் கிடக்கும் மயிலுக்கும் பாம்பைக் கொத்தவும் தெரியவில்லை. ஏதடா நம் குலவைரியான மயில் மீது புரள்கிறோமே! என்ற எண்ணமும் அந்த சர்ப்பத்துக்கில்லை.

யானை யிருக்கிறதே! அது சொப்பனத்தில் சிங்கத்தைக்கண்டாலும் செத்துப் போமாம். ஆனால் நம்முடைய காட்டில் நடக்கும் சங்கீதக்கச்சேரியில் என்ன நடக்கிறது பாருங்கள்! சிக்கமும் யானையும் குழலின்பத்தில் மயங்கி 'ஆகா ஆகா' என்று உடலசைத்து ஒன்றன் மீது ஒன்று மோதிக் கொள்கின்றன.

மானுக்கும் புலிக்கும் ஜன்மப்பகை. புலியைக் கண்டாலும் புலி உறுமல் கேட்டாலும் மான் விழுந்தடித்து ஓடும். ஆனால் நம் காட்டுக் கச்சேரியில் பாருங்கள்; புல் மேய்ந்து கொண்டிருந்த மான் குழலோசை கேட்டு வாயில் புல்லுடன் ஓடிவந்தது. அந்தப் புல்லை விழுங்கவு மில்லை. பக்கத்தில் புலி நிற்கிறது 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டே. அது சங்கீதம் கேட்கிறது. வேய்ங்குழலின்பத்தில் மெய்மறந்து மான் குட்டி புலியின் வாயருகில் போய் நிற்கிறது! ஐயோ! ஐயோ! அடுத்த நிமிஷம் அந்தப் பாழும் புலி மானைக் கௌவிக் கொள்ளப் போகிறதே! ஆனால் அது தான் இல்லை. என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! விலங்குகள் விஷயம் இவ்வளவிலிருக்கட்டும்; இன்னும் பாருங்கள்.

மரங்கள் இருக்கின்றனவே! அவை அப்படியே ஸ்தம்பித்து நிற்கின்றன. ஓர் இலை கூட அசங்கவில்லை; கிளைகள் ஆடவில்லை. மலையிலிருந்து அருவி வீழ்கிறது; ஓடையாக ஓடுகிறது. இக் குழலிசையில் அவையும் மயங்கின. அருவி நீர் குதூகலித்து ஓடவில்லை.

ஆகாயத்திலே மேகக் கூட்டங்கள் கறுத்துத் திரண்டிருக்கின்றன. அவ்வளவுதான். அவை இடி முழக்கம் செய்யவுமில்லை. மழை பொழியவுமில்லை. ஏன்? இசையிலே மயங்கின. கடல் இருக்கிறதே! அது இசையிலே மயங்கி அலை வீசாமல், ஓசைசெய்யாமல், துள்ளி எழாமல் அமைதியாய் ஒய்ந்து கிடந்ததாம்.

பெரியபுராணத்திலே சேக்கிழார் மேற் கண்ட காட்சியைப் பின்வரும் பாடல்களால் விளக்குகிறார்:—

ஆனிரைகளறுகருந்தி
அசைவிடா தணைந்தயரப்
பானுரை வாய்த்தாய் முலையிற்
பற்று மிளங் கன்றினமுந்
தானுணவு மறந்தொழியத்
தட மருப்பின் விடைக்குலமு
மான் முரலாங் கான்விலங்கு
மயிர்முகிழ்த்து வந்தணைய
ஆடு மயிலினங்களு மங்
கசைவயர்ந்து மருங்கணுக
ஊடு சேவி யிசை நிறைந்த
உள்ள மோடு புள்ளினமு
மாடு படிந்துணர் வொழிய
மருங்கு தொழில் புரிந்தொழுகும்
கூடிய வண் கோவலருங்
குறைவினையின்றுறைநின் றார்

நலிவாரு மெலிவாரும்
உணர் வொன்று நயத்தலினன்
மலிவாய் வேள் ளெயிற்றரவ
மயில் மீது மருண்டு விழுஞ்
சலியாத நிலையரியுந்
தடங்கரியு முடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும்
புல்வாய புல்வாயும்
மருவிய கால் விசைத்தசையா
மரங்கண் மலர்ச்சினைசலியா
கருவரை வீழருவிகளுங்
கான் யாறுங் கலித்தோடா
பெரு முகிலின் குலங்கள் புடை
பெயர் வொழியப் புனல் சோரா
இரு விசும்பினிடை முழங்கா
எழு கடல மிடை கலம்பா!

கவி பாரதியாரின் பெருமை.

(P. கோதண்ட ராமன், M.A., B.L.,)

கவிக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கவி வாழ்க்கையையும் மக்களின் உணர்ச்சிகளையும் பொலிவுடன் பாடுகிறான். உலகில் நெறிவழியைக் காட்டுகிறான்; தனது கற்பனைத் திறத்தினாலும் கவிதையின் அமைப்பு, அணி, அலங்காரம், இசை, தாளங்களினாலும் மக்களது உள்ளத்தை மகிழ்விக்கிறான். மானிட அனுபவத்திலும் பிரகிருதியிலும் உள்ளே அடங்கியுள்ள அழகுகளை எடுத்துக் காட்டி மக்களது மனோபாவங்களையும் அனுதாபங்களையும் தூண்டிவிடுகிறான். அவன் அவ்விதம் எடுத்துக் காட்டாவிட்டால், சாதாரண அன்றாட வாழ்க்கையிலேயே மக்களது திருஷ்டி ஒடுங்கிவிடும். மக்கள் தாங்களாகவே அவைகளைக் கண்டு அனுபவிப்பது அரிது. மக்களுக்குக் கவி செய்யும் சிறந்த ஊழியங்களில் இது ஒன்று.

ஆனால் உயர் கவியின் வேலை இதோடு நின்று விடுவதில்லை. கவியின் விழியானது சாதாரண மக்கள் தங்களது புலனறிவால் நுகரும் வாழ்க்கையின் துச்சமான புற விஷயங்களுக்கப்பாலுள்ள மூல விஷயங்களின் பால் பாய்கிறது. வாழ்க்கைக்கு ஆழ்ந்த பொருளுண்டென்றும், அது அகண்டத்துடன் சம்பந்தப்பட்டதென்றும், புலனறிவால் தொடப்பட்ட இச்சிறு வாழ்வை விட விரிந்த உணர்விலிருந்து எழும் அகண்ட வாழ்வே சாலவும் சிறப்புடையதென்றும் அவன் காண்கிறான். ஆகவே, மன அறிவிலிருந்து அவன் படிப்படியாக விடுதலை யடைந்து சாதாரண உணர்வுக்கப்பாலுள்ள பேருணர்வுடன் உறவேற்படுத்திக் கொள்ளுகிறான். இவ்வுணர்வு நிலையில் அவன் கேட்கும் தொனி தெய்வத் தன்மை பொருந்தியது; அவன் காணும் காட்சி தெய்விக ஆதரிசமாகிறது. பிருகிருதி தேவி அருள் சுரந்து அவனுக்களிக்கும் தீர்க்க தரிசனமே இந்தஆதரிசனம். இந்த தீர்க்க தரிசனமே (கவி என்னும் சொல்லுக்கே வடமொழியில் தீர்க்க தரிசி என்று அர்த்தம்) கவியை உண்மையான கவியாக்குகிறது. இவ்வுயர் நிலையிலிருந்து தான் அவனது சிறந்த கவிதை

கள் உதித்துச் சம்பூரணமடைகின்றன. எல்லாவற்றிற்கும் மூலாதாரமாயுள்ள இப்பெருநிலையை, இப்பெருவாழ்வை, மக்களுக்கு ஆதரிசனப் படுத்தி அநித்யமான சிறுமையுற்ற இவ்வுலக வாழ்வையும், மாறுபடும் இயல்புடைய உணர்ச்சி எழுச்சிகளையும் இந்திரிய இன்பங்களுக்கு மேலே உயர்த்தி, அவை அமரத் தன்மை பெறும்படி செய்கிறான். கவிக்குள்ள இந்த ஆதரிசன சக்திதான் கவிதையின் முக்கியாம்சம், இந்த ஆதரிசனத்தைக் கொண்டு தான் அவன் மக்களுக்குப் புதியதொரு வாழ்வைச் சிருஷ்டித்துக் கொடுக்கிறான். இதுவே அவனது பெரிய வேலையாகும்.

இவ்வண்ணம் வாழ்வின் மேலெழுந்தவாரியாகவுள்ள ஜொலிப்புகளினால் கண் கூசிவிடாமல், வாழ்வின் ஆழ்ந்த பொருள்களைக்கண்டும், மக்களின் துயரம் நிறைந்த கானத்தைக் கேட்பதுடன் நின்றுவிடாமல், ஆன்மநிகழ்ச்சி ததும்பும் தேவகானத்தைக் கேட்டும், தனது சிந்தனை உணர்வு முழுதையும் ஒரே அத்துவிதீயமான உண்மையால் திருப்பி, அவ்வுண்மை இம்மண்ணுலகில் ஊன்றி, மக்களின் வாழ்வு தெய்வ வாழ்வாக மாறும் பொருட்டுத் தனது அருள்வாக்கைப் பிரயோகம் செய்யும் கவியே மக்கள் எதிர் பார்க்கும் புது யுகக் கவியாவான்.

மேற்குறிக்கப்பட்டுள்ள லக்ஷணங்களெல்லாம் கவி பாரதியாரிடம் தலை சிறந்து விளங்குகின்றன. இவைகளைச் சற்று இங்கே விவரிப்போம்.

பாரதியார் பிறவிக்கவி. செந்தமிழ் நாட்டுக்கு இப்புது யுகத்துக்குரிய கவிதை யளிப்பதன் பொருட்டே தமிழ் வாணி அவர் மீது அருள் சுரந்தாள். இதைப் பாரதியாரே பின் வருமாறு கூறுகிறார் :

“ ......நல் யாழினைக் கொண்டிருப்பாள்
கள்ளைக் கடலமுதை — நிகர்
கண்டதோர் பூந்தமிழ்க் கவி சொலவே
பிள்ளைப் பருவத்தில் — எனைப்
பேண வந்தா ளருள் பூண வந்தாள்.”

“ எனக்கு முன்னே சித்தர் பலரிருந்தார்
யானும் வந்தேனொரு சித்தனிந்த நாட்டில்
மனத்திலே நின்றித்தனை யெழுதுகின்றாள்
மனோன்மணியென் மாசக்தி வையத்தேவி”

பாரதியார் பொதுமக்களின் கவி. அவரது கவிதையில் யாப்பிலக்கணப் பாண்டித்தியமோ, வாக்கின் ஜாலமோ, அழுத்தமோ, ஆடம்பரமோ கிடையாது. அங்கு எல்லாம் எளிமை, நேர்மை, வெட்ட வெளிச்சம், எல்லோரும் வழங்கும் சொற்கள். அவர் கூறும் விஷயங்களிலும் அபூர்வமோ அற்புதமோ யாதொன்றுமில்லை. ஆயினும் அவரது சாதாரணப் பாட்டிலும் ஒரு கம்பீரமுண்டு; பண்ணும் ஒளியும் பளபளவென்று திகழ்கின்றன; அவரது சொல் ஒவ்வொன்றும் ஆயிரம் பொறிகளுடன் ஜொலிக்கின்றது. இதுவரையினும் எவரும் அம்மாதிரியாகப் பாடவில்லையென நமது மனதில் உறுதியாகப் படுகின்றது. அதுவே பாரதியார் வாணியிடமிருந்து பெற்ற மந்திரம் போன்ற சொல்லின்பம். இம்மந்திர சக்திதான் அவரது பாட்டின் சக்திக்குக் காரணம். அவரது சிருஷ்டியின் அதிர்ச்சியினாலேயே அவரது சொல்லுக்கு மின்சார சக்தியும் வேகமும் உண்டாகின்றன. அவை நம்முள்ளத்தில் பாய்ந்து அசைத்து ஆட்டிவிடுகின்றன. இவ்வேகத்தையும் மந்திர சக்தியையும் ‘கண்ணன் வரவு’, ‘முருகன் பாட்டு’, ‘ஆறு துணை’, ‘சக்திக்கூத்து’, ‘ஊழிக்கூத்து’, ‘ஜீவன் முக்தி’, ‘ஜய பேரிகை’, ‘புதிய ருஷியா’ முதலிய பாடல்களில் காணலாம்.

கவிதையும் கானமும் கூடப்பிறந்த இந்நாட்டில் கவிதைகள் முதலில் கானம் செய்யப்பட்ட பிறகே எழுதப்படுகின்றன. பாரதியாரின் கவிதைகளும் அநேகமாக இவ்வண்ணமாகவே செய்யப்பட்டன. அவரது பாட்டுக்கள் யாவரும் எளிதில் பாடக்கூடிய மெட்டுகளில் அமைந்துள்ளன.

பாரதியாரின் கவிதைகளுக்கும் தமிழ் மக்களின் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவர் மேனாட்டுக் கவிகளைப்போன்று பெரும்பாலும் மக்களின் சாதாரண வாழ்க்கையையும் உணர்ச்சிகளையும் படம் பிடித்தாற்போல சித்திரிப்பதில் தமது சக்தியை விரயம் செய்யவில்லை. ஆயினும் மக்களது பெருந்துயரங்களைப்பற்றி ‘மறவன் பாட்டு’ ‘பிஜி தீவிலே ஹிந்து ஸ்திரீகள்’ என்பன போன்ற பாடல்களில் பாடியிருக்கிறார். தாழ்மையுற்ற

(169-ம் பக்கம் பார்க்க)

புதுக் கற்பனைகள்.

நாடகாவதாரம்

(விசாரதன் எழுதியது)

பாத்திரங்கள் :	வேஷங்கள்
1. ஸ்ரீ கிருஷ்ணபகவான்	ஸ்ரீராமர்
2. ஸ்ரீ பலபத்திர தேவர்	லக்ஷ்மணன்
3. நாரதமுனிவர்	சுக்கிரீவன்
4. பரதமுனிவர்	விபீஷணன்
5. அருச்சுனன்	
6. ஹனுமான்	
7. ஸத்தியபாமாதேவி	ஸீதாதேவி
8. ருக்மிணிதேவி	ஸீதாதேவி

கஞ்சுகி, சபையோர் முதலானோர்.

காட்சி க.

இடம் : துவாரகையிலே, ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அந்தப்புரம்; ஸ்ரீ கிருஷ்ண பகவான், ருக்மிணிதேவி, ஸத்தியபாமாதேவி இவர்கள் வீற்றிருக்கிறார்கள்.

கஞ்சுகி : (பிரவேசித்து) நாரதபகவான் வருகிறார்.

கிருஷ்ணன் : உள்ளே வரலாமே. (தேவிகளைப் பார்த்து) அர்க்கிய பாத்தியாதிகளால் அவரைப் பூஜித்து அழைத்து வாருங்கள். (தேவிகள் வெளிச்சென்று நாரத முனிவருடன் பிரவேசிக்கிறார்கள்.)

கிருஷ்ணன் : நாரதபகவானே, நமஸ்கரிக்கிறேன்.

நாரதர் : பகவானே, இதென்ன மாயை? நானல்லவா நமஸ்கரிக்க வேண்டும்.

கிருஷ்ணன் : நாரதரே! ஸ்வர்க்கத்தினின்று தானே வருகிறீர்கள்? பெரியோர்களுடைய ஸஞ்சாரத்தால் விசேஷங்கள் ஸம்பவித்திருக்க வேண்டுமே! என்ன விசேஷம், அங்கே?

நாரதர் : அங்கேயா? பரதமுனிவர் நாடகம் என்று ஒன்று சிருஷ்டித்திருக்கிறார். நானே ஸூத்திரதாரனாக இருந்து நடத்திவைத்தேன். எல்லோரும் அப் புதுமையைக் கண்டு வியந்தார்கள். ஆனால், இங்கேயோ அதைவிட ஆச்சரியமான நாடகமாக........

கிருஷ்ணன் : ஆச்சரியமான நாடகமாக ஆட விரும்புகிறேன் நான்; இங்கும் தாங்களே ஸூத்திரதாரராக இருக்கவேண்டும்.

நாரதர் : நீங்கள் ஆடும்போது ஸூத்திர தாரர் எதற்கு? நீங்களே ஆடுபவர், நீங்களே ஸூத்திரதாரர்.

கிருஷ்ணன்: என்ன நாடகம் ஆடலாம்?

நாரதர் : புருஷோத்தமர்கள் தாங்கள்; தங்கள் வாழ்க்கையே ஒரு நாடகம்போல் இருக்கிறது. வேறு நாடகம் எதற்கு?

ஸத்திய பாமாதேவி : நாரதரே, நானும் நடிக்க விரும்புகிறேன்.

நாரதர் : அப்படியானால், நீங்கள் போய் வேஷம் போட்டுக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள்; நானும் வருகிறேன். (தேவியர் இருவரும் போகிறார்கள்)

கிருஷ்ணன் : என்ன நாடகம் ஆடலாம்?

நாரதர் : இப்படிக் கேட்பீர்கள் என்றே, நான் வரும்போது பரதமுனிவருக்கு ஸ்ரீராம சரிதத்தைச்சொல்லி நாடகமாக்கிக் கொண்டு வரச் செய்திருக்கிறேன்.

கிருஷ்ணன் : தெரியுமே, தாங்கள் ஸ்ரீராம பக்ஷபாதிகள் என்று; அன்று வான்மீக முனிவருக்கு உபதேசித்தீர்கள்; அவர் ஆதிகவியானார்; இன்று......

ருக்மிணிதேவி : (பிரவேசித்து) பரதமுனிவர் வந்திருக்கிறார்; அவரை ஸத்காரஞ்செய்து பாமா அழைத்து வருகிறாள். (ஸத்தியபாமா தேவியும் பரதமுனிவரும் வருகிறார்கள்.)

நாரதர் : வாருங்கள், நாடகாசிரியரே.

பரதர் : நமஸ்காரம், இசையாசிரியரே; இசையின்றி நாடகமுண்டோ? கிருஷ்ண பகவானே, வணங்குகிறேன்.

கிருஷ்ணன் : நமஸ்காரம், முனிவரரே! பாமா! ருக்மிணி! என்ன பாக்கியம் வாய்த்தது, பார்த்தீர்களா? நாம் நடிக்க விரும்பினால், இசையும் நாடகமும் மூர்த்திகரித்து வருகின்றன.

ருக்மிணிதேவி : (பரதரைநோக்கி) இவர்களுடைய நூதன சிருஷ்டி தானே நாடகம்? பரமாதிசயமாயிருக்கிறது என்றாரே நாரத பகவான். அவ்வதிசயத்தை நாம் ஆடிக் காண வேண்டாமா?

பரதர் : நூதனமொன்றுமில்லை, அம்மா; எல்லாம் தங்கள் பர்த்தாவின் செயல். புருஷோத்தமர்களின் செயல்களை அனுகரிப்பதால் ஆனந்தமுண்டாகிறது; கோபிமார்கள் அப்படி அனுகரித்து ஆனந்தம் அடைந்தார்களாம். பகவானும் அவதார மூலமாய் உத்தமர்களின் செயலை அனுகரித்துத் தாமும் இன்புற்றுப் பிறருக்கும் இன்பம் ஊட்டுகிறார்; ஸ்ரீராமாவதார ரஹஸ்யம் இதுதான்; இந்த அவதாரமும்—

ருக்மிணிதேவி : நாதா! நாமும் ஸ்ரீராமாவதாரத்தை அனுகரித்து நடிப்போம்.

கிருஷ்ணன்: (ருக்மிணி தேவியைப்பார்த்து) அப்படியே. (முனிவர்களைப் பார்த்து) நாரத பகவானே. பரதமுனிவரே! உங்களிடம் அகப்பட்டுக்கொண்டேன். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே!

பரதரும் நாரதரும் : ஆமாம்; ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே!

கிருஷ்ணன் : பரதமுனிவரே, தேவியரை உள்ளே அழைத்துச் செல்லுங்கள்; வேஷம், ஸம்பாஷணை எல்லாம் ஸித்தமாகட்டும். இப்பொழுதே ஒரு காட்சி ஆடிக் காண்போம். (பரதரும் தேவியரும்போகிறார்கள்) நாரதரே! எனக்கு வேஷமும் ஸம்பாஷணையும்.......

பலபத்திரர் : (பிரவேசித்து) என்ன இது, கிருஷ்ணா? நாடகமாடப் போகிறாயாமே!

கிருஷ்ணன்: ஏதோ, பாமா கேட்டுக்கொண்டாள். ருக்மிணியும்........

நாரதர் : நானும்தான் வேண்டிக்கொண்டேன். தாங்கள்கூட ஒரு வேஷம் போட்டுக் கொள்ளவேண்டும்.

பலபத்திரர் : என்ன வேஷம் வேண்டியிருக்கிறது எனக்கு; என் தம்பி வேஷம் போடுவது போதாதா?

நாரதர் : உங்கள்தம்பி ராமவேஷம் போடு கிருர் ; நீங்கள் நாடகத்திலாவது தம்பியாகி லக்ஷ்மணனுக இருக்கவேண்டும். நான்கூட வேஷம் போட்டுக்கொள்ளுகிறேன், சுக்கிரீவ வேஷம்.

பலபத்திரர் : நாடகத்திலாவது தம்பியாக வேண்டுமா ? என்ன, கலகமூட்டுகிறீர்கள், நாரதரே ! நான் அப்படி உங்களிடம் அகப் பட்டுக் கொள்ளமாட்டேன். தம்பிவேஷம் போடமுடியாதா என்ருல் ? இதோ ஒரு நொடியிலே போட்டுக்கொண்டு ஸாக்ஷாத் லக்ஷ் மணனுக வருகிறேன். (போகிருர்).

கிருஷ்ணன்: நாரதரே ! எனக்கு வேஷம் போடுங்கள், நாழிகை யாகிறது.

நாரதர் : இந்த வேஷமே பொருத்தமாயிருக் கிறதே! வேறு வேஷம் எதற்கு? (ஒரு வில்லைக் கையிற்கொடுத்து) ஸாக்ஷாத் ராமசந்திர மூர்த்தி யாகவே விளங்குகிறீர்கள், இப்பொழுது. ஆனல், பத்தினிகள்மட்டும்.........

கிருஷ்ண : அதனலேதான், நாரதரே, ரகு நாதனை நடிக்க விரும்புகிறேன்; ஒரு தேவி யோடு மட்டும் இருக்கலாமல்லவா?

பரதர் : (பிரவேசித்து) தேவியர் இருவரும் ஸீதாதேவியாக நடிக்க விரும்புகிருர்கள். இரு வருக்கும் ஸம்பாஷணை ஸித்தம்செய்து வேஷம் கல்பித்துவிட்டேன்.

கிருஷ்ணன்: என்ன, பரதரே? ராமவேஷம் போட்டும் இரண்டு பெண்டாட்டியா ? நார தரே ! இது என்ன புது ராமாயணம் ; உங் களுடைய உபதேசந்தானே இதுவும்?

பரதர் : நாடகத்தில் இப்படித்தான் ; ஒரு வர் நடிப்பதற்கு இரண்டுபேர் வேஷம்போட்டுக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால்.......

நாரதர் : ஆமாம், பரதரே ! ஸீதாதேவி ஒருவராயிருந்ததினலேதான் ராமச்சந்திரப் பிரபு திண்டாட நேர்ந்தது. அதனலே தானே பகவானும் இப்பொழுது இப்படி இரண்டு....

கிருஷ்ணன்: நாழிகையாகிறது; நாடக சாலைக்குப் போவோம், வாருங்கள். (பரதரைப் பார்த்து) நீங்களும் வேஷம் போட்டுக் கொள்ளலாமே. (நாரதரைக் கையாற் காட்டி) இவர்கள் சுக்கிரீவ மஹாராஜா வேஷம் ; நீங் கள் லங்காதிபதி விபீஷண சக்கிரவர்த்தி.

இருவரும் : ஆம், நாடகத்திலாவது மஹா ராஜாக்களாகவும் சக்கிரவர்த்திகளாகவும் இருப் போம். அதுவும் (கிருஷ்ணபகவானைச் சுட்டிக் காட்டி) இந்த ராமச்சந்திர மூர்த்தியின் அருளே. (எல்லோரும் போகிருர்கள்.)

காட்சி உ.

இடம் : துவாரகையிலே ஸ்ரீ கிருஷ்ண பக வானுடைய அரண்மனையிலேயுள்ள நாடக சாலை. மேடையின்மீது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்ரீராமவேஷந் தரித்துக் கோதண்டபாணி யாய் நிற்கிருர்; அருகிலே ஸ்ரீ பலபத்திர தேவர் லக்ஷ்மண வேஷம் பூண்டு வில்லுங் கையு மாய் நிற்கிருர் ; நாரதர் சுக்கிரீவ வேஷத்தில் ஸ்ரீராமபிரானுக்குச் சாமரம் வீசுகிருர்.

பரதர் : (விபீஷண வேஷம் பூண்டு, பிரவே சித்து) எங்கையே ! இராகவா ! இதோ வரு கின்ருள் தேவி, தங்கள் ஸந்நிதியை நாடி. (மூடு பல்லக்கு ஒன்று நாடகமேடையில் வருகிறது) மங்களஸ்நானம்செய்து, ஸர்வாபரண பூஷிதை யாய் விளங்குகிருள், தங்கள் விஜயஸ்ரீ போலவே. (ஸத்தியபாமா ஸ்ரீ ஸீதாதேவி வேஷம்பூண்டு பல்லக்கினின்றும் வெளியே வந்து, ஸ்ரீராம வேஷம்பூண்ட கிருஷ்ணபக வானை வணங்குகிருள்).

கிருஷ்ணன்: தம்பீ! என்கண் கூசுகின்றது தேவியைப் பார்க்க.(ஸத்தியபாமாவை நோக்கி) ஸீதே ! நான் யுத்தஞ்செய்தது உன்பொருட் டல்ல; இந்த சுக்கிரீவனேடு சக்கியஞ் செய் தது, கடலுக்கு அணைக்கட்டியது, ராவணனை ஸம்ஹரித்தது—எல்லாம் என் வீரத்தைக் காக்கும்பொருட்டே; பிறமனையில் வாழ்ந்த உன்னைவெறுக்கிறேன். ஆதலால், உன் இஷ் டம்.

பாமாதேவி : லக்ஷ்மணு! அக்னிப்பிரவேசம் செய்யவேண்டும்; சிதையைச் சித்தஞ்செய்.

பலபத்திரர் : (பாமாவை உற்றுநோக்கி, தனக்குள்) அப்படியே இருக்கிறதே! (பிரகாச மாய்) அப்படியே. (ஸபையோர் ' ஹா, ஹா'

என்று கதறுகிறார்கள்; திரையைத் தள்ளிக் கொண்டு, மேடைமேல் அருச்சுனனும் ஹனுமாரும் பிரவேசிக்கிறார்கள்.)

அர்ச்சுனன் : கிருஷ்ணா! இது என்ன வேஷம்?

ஹனுமான் : (பாமாதேவியையும் கிருஷ்ண பகவானையும் மாறிமாறி உற்றுநோக்கி) ஆம்; இவர் என் ராமபிரானே! தேவியும் ஜானகி தேவியே. (பிரகாசமாய்) தாயே! கோபியாதீர்கள். என் பிரான் தங்களை உண்மையாகக் காதலிக்கிறார்.

கிருஷ்ணன் : அர்ச்சுனா! என்ன இது! கூத்தினிடையே கோமாளிபோலப் புகுந்துவிட்டாய். நீ எப்பொழுது வந்தாய்? என்ன காரியம்? உன்குரங்கைச் சற்று ஒதுங்கச்சொல்லு.

ஹனுமான் : (தனக்குள்) இது என் பிரான் அன்று; வெறும் வேஷம்.

அர்ச்சுனன் ; கோபியாதே, கிருஷ்ணா! மஹாப் பெரியவர் அல்லவா இவர்? யாரோ ஸ்ரீராமபத்திரன் இங்கே வந்திருப்பதாகச் சொன்னார்கள்; உடனே இவர் என் தேர்க்கொடியினின்று ஒரு தாவு தாவி இங்கே வந்துவிட்டார்; அவரோடுகூட நானும்—(ஸீதாதேவி வேஷம்பூண்டு ருக்மிணிதேவி நடந்துவருகிறாள்.)

ஹனுமான் : (கண்களைக் கசக்கிக்கொண்டு) இதென்ன கனவா! அல்லது நிஜமாகவே அசோகவனத்திலே நான் கண்டபிரகாரமே தேவி காட்சி தருகிறாளா? (ஸத்தியபாமாவை உற்றுநோக்கி) இந்த தேவியோ, விஜயரங்கத்திலே கண்டபிரகாரம் காட்சி தருகிறாள். இரண்டும் உண்மைதானோ? இரண்டு தேவிகளா, என் பிரானுக்கு?

கிருஷ்ணன்: (ருக்மிணிதேவியை நோக்கி நடந்துகொண்டே) பிராணநாயகி! இங்கே வா, என் அருகில் ; லக்ஷ்மணா! சுக்கிரீவா! விபீஷணா! இதோ உங்கள் மைத்துனியைப் பார்த்தீர்களா? (பரதர், நாரதர், பலராமர், அனுமார் எல்லோரும் ருக்மிணிதேவியை வணங்குகிறார்கள்.)

ஹனுமான் : இன்று இப்பொழுதே அறிந்தேன், என் பிரான் லீலையை ; அன்று அப்பொழுது இவ்வாறு பிராட்டி வந்திருந்தால்...

பாமாதேவி: பிராணநாதா, போதும், போதும், தங்கள் கபடநாடகம்; யார் செய்த சூழ்ச்சி இது? (பரதரைப் பார்த்து) நாரதர் போதாதா, நீங்களுமா இதற்கெல்லாம் உடந்தையாயிருக்க வேண்டும்?

கிருஷ்ணன்: கோபித்துக்கொள்ளாதே, பாமா! இதெல்லாம் வெறும் வேஷமல்லவா? உன்மீதல்லவா எனக்கு நிஜமான பிரேமை! வேஷம் போட்டால் அதற்குப் பொருத்தமாக ஆடவேண்டாமா? வேஷத்தில் என்ன இருக்கிறது?

பரதர்: வேஷத்தில் என்ன இருக்கிறதா? நாடகத்தின் மஹிமை தங்களுக்குத் தெரியாதா? நேற்று கிருஷ்ண வேஷம் பூண்டீர்கள்; இப்பொழுது ராமவேஷம்; அடுத்தபடி என்ன வேஷமோ! (கிருஷ்ணபகவான், இரண்டு தேவிகளுடனும் ஸிம்ஹாஸனத்தில் அமர்கின்றார்.)

பரதர்: இன்று போலவே என்றும் இரண்டு தேவியரோடும் ஸ்ரீ ராமகிருஷ்ணன் காட்சியளிப்பாராக.

(திரைவிழுகிறது)

சுபம்.

பிரம்மசாரியின் மனைவியர்

(கை. சு. வேங்கடராம சாஸ்திரி எழுதியது)

எனக்கு இன்னும் விவாஹமாகவில்லை. வயது இருபத்தைந்துதான். என் தாய் தந்தையர்க்கு நான் ஒரே பிள்ளை. அவர்களும் இவ்வுலகிலில்லை. எனக்குக் கிராமத்தில் ஒரு வீடும் இரண்டு காணி நிலமுமுண்டு. நான் பட்டணத்தில் நாற்பது ரூபாய் சம்பளத்தில் சர்க்கார் வேலைபார்த்துவருகிறேன். என் அழகை நானே சொல்லிக் கொள்ளல் முறையல்ல. ஆனால் நான் சாதாரண திடகாத்திரமுடையவனாய் நோயற்றிருக்கிறேன். சரீரப்பயிற்சி வேலைகளில் எனக்குக் கொஞ்சம் பைத்தியமுமுண்டு.

ஆகவே இவ்வளவு யோக்கியதாம்சங்களமைந்த மாப்பிள்ளையைத்தேடி அநேக கன்னியர் ஜாதகங்கள் வந்துகொண்டிருக்கின்றனவென்பதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

கிராமத்திலுள்ள என் வீட்டை யாரும் குடிசையென்று சொல்லிவிடத் துணியார்கள் என்றே நினைக்கத் துணிகிறேன். அதில் ஒரு ஏழை கிரஹஸ்தனைக் குடிவைத்து என் நிலத்தையும் தோட்டத்தையும் அவனிடத்திலேயே குத்தகைக்கு விட்டிருக்கிறேன் அவ்வீட்டில் எனக்கென்றே ஒரு அறை பூட்டிவைத்துக் கொண்டிருக்கிறேன். அதில் "ஈஸிசேர்" என்கிற இடமடைத்த நாற்காலியும் ஒற்றைக் கால் வட்டமேஜையும், சமைக்கவும் வெந்நீர் போடவும் ஒரு மூலையில் பெரியதொரு அடுப்பும் இருக்கின்றன. இவ்வறைக்குள்ளிருந்து ஒரு சிறிய கதவைத் திறந்ததும் எனக்கு மட்டும்போதுமான ஒற்றை ஜன்னல் வைத்த என் படுக்கையறைக்குள் நுழையலாம். படுக்கையிலிருந்து எழுந்ததும் பார்க்கும்படியான இடத்தில் மனதிற் கிசைந்த மங்கையொருத்தியின் அழுக்கடைந்த படம் மாட்டியிருக்கும்.

நான் கிராமத்துக்குப் போகும்போது வரும்போதெல்லாம் இந்த வீடு என்னுடையதுதான் என்பதைக் குடியிருப்பவர் உணர வேண்டுமென்றே ஏதாவது ஒரு சாமானையாவது உடைக்காமல் வருவதில்லை. தூங்கி எழுந்ததும் ஜன்னல் கதவு இலகுவாய்த் திறக்க வராவிட்டால் என்பாதரக்ஷைக்காலால் இரண்டொரு கண்ணாடித் துண்டுகளை உடைத்து நல்ல காற்று வர வழிசெய்வேன். "ஈஸிசேரில்" சாய்ந்துகொண்டே மேற்படி பாதரக்ஷைக் காலைச் சுவரின்மேல் உதைத்துச் சன்னக்காரையில் பொத்தலிட்டு விடுவேன். என்னிடமிருந்து நஷ்ட ஈடு வசூல்செய்ய வீட்டுக்காரனுமில்லை, கூச்சலிட்டுக் கோபிக்க யஜமானியுமில்லை, என நினைந்து நானே புன்சிரிப்புக் கொள்வேன். ஓட்டைக் கதவும் உடைந்த ஜன்னலுமாயுள்ள இவ்வறையில் தைமாதத்தில் குளிர் காய அடுப்புப் வேண்டியதுதான். இருட்டினவுடன் சாப்பிட்டுவிட்டு விளக்கையணைத்துவிட்டு விறகும் கரியும் போட்டு அடுப்புமூட்டி அதற்கு நேராகக் காலை நீட்டி நாற்காலியிற் சாய்ந்துகொண்டு, உலகத்தில் ஆயிரத்திலொருவனே அனுபவிக்கப் பெற்ற மனோராஜ்யத்தில் ஆழ்ந்து விடுவேன்.

அடுத்த அறையில் குடியிருக்கும் தம்பதிகள் தம் இருகுழந்தைகளையும் தூங்கச் செய்ய செய்யும் சதியாலோசனைப் பேச்சுகளெல்லாம் என் காதில் அரைகுறையாய் விழும். இதிலேயே அவர்களுக்கு ஒரு மணி நேரம் சென்றுவிடும். (எனக்கு மணி தெரியவேண்டுமானால் அடுப்பில் நெருப்பின் நிலைமையைப் பார்த்தே தெரிந்துகொள்ள வேண்டும். கடியாரங்களுக்கும் எனக்குமுள்ள பொருத்தம் வேறுகதை.) பத்துமணி சுமாருக்கு விறகெல்லாம் எரிந்தாகிவிடும். விறகு அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் சுள்ளிகளைப் பொறுக்கிப்போட்டு அவை தீப்பற்றிச் சீறியெழுந்து விழுந்து அவிந்து போவதைப்பார்த்து மானிடவாழ்க்கைக்கு உவமானங் கற்பித்துக்கொண்டே மெல்ல நித்திரையிலாழ்ந்துவிடுவேன்.

சென்றதடவை கிராமத்துக்குப் போயிருந்தபொழுது அன்றிரவு படுக்குமுன் அவ்வருஷத்துக் கண்டுமுதல், தோட்டத்தின்

வளம், வீட்டைத் திருத்தியமைத்தல் முதலிய விஷயங்கள் ஒவ்வொன்ருய் ஆலோசனைக்கு வந்துகொண்டிருக்கையில், ஏதோ,—அடுப் பெரிவதைப் பார்த்தோ குழந்தையின் அழுகை காதில் விழுந்ததனுலோ, அல்லது அன்று (தைமீ 25உ) தபாலில் வந்த (என் விவாஹம் 'தந்திமேல் நடத்தல்' என்னும் நவநாகரிக 'ஸர்க்கஸ்' வித்தைக்கு இன்னும் வரவில்லை) இரண்டொரு ஜாதகங்களின் நினைவு வந்தோ,—இதுகாறுமில்லாத புதுவழியில் என்மனம் செல்லத்துவக்கிற்று. அடுப்புப் புகையோடு அரைத் தூக்கத்தில் என்மனதில் சந்தேஹப் புகையுந் தோன்றிற்று. என்மனம் சற்றுத் தடுமாறும் போலிருந்தது. அதாவது, ஏதாவதொரு வழியில் விவாஹத் துறையிலிறங்கி விடலாமாவென்று, தானே யோசனையிலிறங்கி விட்டது.

விவாஹம் என்பது தம் அதிருஷ்டத்தைப் பரிசோதித்தறிய விரும்புகிறவர்களிறங்கும் சீட்டுக்குலுக்குகிற வியாபாரம். இதிலிறங்கத் துணிபவன் தன்னுடைமை, உரிமை எல்லாவற்றையும் இதில் போட்டே தீரவேண்டும். அப்படியே வைத்துக்கொள்வோம்! மனம் சற்றுத் தடுமாற்றம் நீங்கி நிமிர்ந்து நின்றது.

புராணங்களிற் காணப்படும் உத்தமியைப் போன்ற கன்னிகை யொருத்தி நேர்ந்தால் ஏன் விவாஹம் செய்துகொள்ளக்கூடாது? அவளுக்காக ஏன் நம் சுதந்தரத்தை யெல்லாம் தியாகஞ் செய்யக்கூடாது? முதலாவதாக ஸீதையை நினைத்தேன். இருந்தாலும் அவளும் சற்றுப் பதட்டக்காரிதான். கணவன் அன்று தன்னைக் காட்டுக்கழைத்துச்செல்லச் சற்றுத் தயங்கின பொழுது "ஆண்வேஷம் தரித்த பெண்பிள்ளை தானே நீ" என்று வாய்கூசாமற் கேட்டுவிட்டாள்; அந்த வார்த்தைமட்டும் என்னைக் கேட்டிருந்தால்,—சரி அம்மட்டோடு நிறுத்துவோம். அப்புறம் மான் மாரீசன் பட்டுவிழுந்தவுடன் அவள் லக்ஷ்மணனைச் சொன்னசொல் அடடா! ராமனைப்போல் பொறுமை யுள்ளவன்தான், அவளைக்கட்டி மேய்க்கமுடியும்! லக்ஷ்மணன் அண்ணன் முகத்துக்காக மட்டுமே அவ்வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டது. பிறகு மன்னிக்கவும் மன்னித்தான். அதன்பின் திரௌபதி!—அவள்தான், ஐந்துபதிகளிடமும் பக்ஷபாதமின்றி நடந்துகொண்டவள்! ஆம், ரொம்ப கெட்டிக்காரிதான், ஆனுல் தற்கால நாகரிகத்துக் கேற்றவளோ வென்பது தான் கேள்வி! தினம் கால்படி ரத்தமாவது—முயல் ரத்தமானுலும்சரி—கொடுத்தால்தான் கூந்தலை வாரி முடித்திடுவாள்.

பிறகு தமயந்தி என் கண் முன் தோன்றினாள். நிரம்பப் படித்தவள். நாகரிகம் தெரிந்தவள். முக்கியமாய் நைஷதம் நளவெண்பா வெல்லாம் பாராமற் பாட மொப்பிப்பாள். சிருங்காரரஸத்தின் சிகரங்களில் பூத்து தனது துகிற் காற்றிலசைந்தாடும் மலரணிந்தவள். ஆனுல் அடுப்பு வேலையென்ருல் கொஞ்சம் அப்படி இப்படித்தான். அதெல்லாம் புருஷாள் பாடன்ருே! நெருப்பில்லாமலே முதல்தரமாய் சமைக்கக்கூடிய புருஷன் கிடைப்பானென்ருல் பெண்பிள்ளை ஏன் அடுப்பண்டை போவாள்? ஆகிலும் அன்னம், பக்ஷி, என்றுவிட்டால் அகப்பட்டவிடத்தில் உட்கார்ந்து விடுவாள்; மற்றவேலையெல்லாம் போட்டபடித்தான். இதெல்லாம் போகட்டுமென்ருலும், புருஷன் இறந்தானென்று கேள்விப்படு முன்னரே மறு விவாஹத்துக்கு அடிப்போட்டுவிட்டாள். அவள் அங்கேயே நிற்கட்டும்!

அப்புறம் ஸாவித்திரி—ஆம், உண்மையான பதிவிரதை! ஆனுல் நம் மனது ஏதோ அபசகுனங்கண்டதுபோல் சற்று அச்சானியப்படுகிறது!

அப்படியானுல் நம் ருக்மிணிக் கென்ன? நல்லபுத்திசாலி, நாட்டியக்கலை கூடப்பயின்றுவள்! போதும், முளைக்கும்போதே ரகசியக் கடிதம், கலியாணப்பந்தலிலேயே அடி தடி, சண்டை, வெகு அழகு!

அழகு என்றவுடனே என்மனம் அகலிகையை வரவழைத்தது. சற்று உல்லாசந் தோன்றிற்று. ஆனுல் அழகுமட்டும் போதுமா வென்று நினைக்கையிலேயே அவளும் மெல்ல அகன்று விட்டாள்.

உலகில் சந்திரமதியைவிட குணவதியுண்டா? இல்லைத்தான்! ஆனுல் வந்த நாள்

முதல் துரதிருஷ்டமே! சந்தோஷப்பட்ட நாளுண்டா, அழாத நாளுண்டா? மயான காண்டத்திற் கல்லுங் கரைந்துருகாது? அடே அப்பாடா! நம்மால் தாளாது. திடீரென்று சகுந்தலையின் ஞாபகம் வந்தது. ஆம், ஐரோப்பியக் கவிகளும் அவளைப் புகழ்ந்திருக்கின்றனர். நவீனத்துக் கேற்றவள். ஆனால் கேவலம் காந்தர்வ விவாஹம், அதாவது சாதாரணத் தமிழில் திருட்டுக் கலியாணம்! போகட்டுமென்றாலும் என்ன மறதி! நம் கச்சேரிச் சாவியை அவளிடம் ஒருநாள் கொடுத்து வைத்தால். மறுநாள் நமக்கு வேலை போய் விடும்! அப்புறம் இருவருமாகப் புறப்பட்டு வனவாஸமோ தேவலோகமோ செல்ல வேண்டியதுதான். அது அவளுக்கு சகஜமாயிருக்கலாம்; கூடப் போகிறவன் பாடுதான் திண்டாட்டம்!

பிறகு அருந்ததி, அநசூயை, லோபாமுத்திரை முதலியோரடங்கிய குடித்தனத்துக் கேற்ற கோஷ்டி வந்தது! எல்லாம் ரிஷிபஞ்சமி கடந்த கூட்டம்; பாதிப் புருஷர்களென்னலாம்! ஒன்றும் ஸ்வாரஸ்யமில்லை. கடைசியாகக் கண்ணகி தோன்றினாள். முகத்தில் அழகு, பொறுமை, நெறி, தீரம், தகைமை, சலியா நோன்பு எல்லாமாகத் திரண்டு விளங்கிய அவ்விழிகளைக் கண்டுச் சற்றுத் திகைத்தேன். ஏனெனில் அவற்றின் இனிமையைத் தேவர்களே உணரக்கூடு மல்லாது நம் போன்ற மானிடராலாகாது! காரைக்காலம்மையும் கண்ணகியும் ஒரே தராசு! கோவலன் சாதாரண மானிடனாதலினால்தான் மாதவியின் விழிவலையிற் சிக்கினான். நான் இன்னும் மட்டமான ரகந்தானே!

பிறகு லைலிமஜ்னூன் தோன்றினாள்! ஆஹா! என்ன அழகு, என்ன அமரிக்கை, என்ன அச்சம், என்ன நாணம்; என்ன மடமை, என்ன பொறுமை, என்ன மரியாதை, என்ன மென்மை, என்ன உண்மை! குனிந்த இமை நிமிர்ந்ததுண்டா? எதிர்த்துப் பேசினதுண்டா? இரைந்து பேசியதுண்டா? ஒரு ஆவேசமுண்டா? ஒரு படபடப்புண்டா? ஒரு விதியை நொந்ததுண்டா? இவளை நினைத்தால் என் ஒருவனுக்குப் பைத்தியம் பிடிக்காது! ஐயையோ! எதுவந்தாலும் வரட்டும் பைத்தியம் வேண்டாம்! அப்புறம் நம்மை ரக்ஷிக்க நிஜமானவொரு லைலியை யல்லவா தேடவேண்டும்! அவள் அகப்படாவிட்டாலோ? அதைவிடக்கலியாணப் பேச்சே வேண்டாம்!

என் மனம் இன்னும் சற்று மேற்கே நகர்ந்தது. வெள்ளி முளைத்ததுபோல் ஜூலியெத் தோன்றினாள். சுய ஐரோப்பியப் பெண்மணி! அவளது அளவுகடந்த காதலுக்காக ஏன் ஒருவன் விஷமருந்தக்கூடாது! ஆம். ஆனால் நம்மை மரணத்துக்குட்படச் செய்துவிட்டுப் பிறகு அவள் விழித்துக் கொண்டு தானும் விஷமருந்திவிட்டால் சரிதான். அப்படியல்லாது அவள் மட்டும் எழுந்து மெல்ல வீட்டைப்பார்க்க நகர்ந்து விட்டாளானால், மறுநாள் ஊரெல்லாம் கேலிப்பேச்சுக்கிடமாகு மன்றோ! இருந்தாலும் இவ்வளவு பெரிய காரியத்தில் யாரையும் முற்றிலும் நம்பி இறங்கிவிடக் கூடாது.

பிறகு நவீனகதா நாயகிகள், நாடக மேடை ஸினிமா சுந்தரிகள், நக்ஷத்திரங்கள் போல் ஒவ்வொருவராய்த் தோன்றி மறைந்தனர். அவர் எண்ணிக்கையை மறந்தேன். அவர்களுடைய பெயர்களே சொல்லும் நாக்குக்கும் கேட்கும் காதுக்கும் இன்பத்தேன் சொட்டுமன்றோ! லீலாவதி, சுலோசனா, லலிதாங்கி, மோஹனாங்கி, சுந்தராங்கி, சம்பங்கி, மயங்கி, தயங்கி, மீராபாய், ரத்னாபாய், அப்பாய், சிப்பாய், பிப்பாய், கறுப்பாய், சந்திரகாந்தா, சந்திரவதனா, சந்திரமோஹனா, மனமோஹினீ, உல்லாசமோஹினீ சல்லாபசாலினீ, ஜலஜாக்ஷி, சுயஆட்சி (வைஸ்ராய் சாக்ஷி) ஸ்வர்ணலதா, கனகலதா, கல்கத்தா (அப்பால் கல்த்தா) ஆஹா! (இந்தப்பேர்களையெல்லாம் விட்டுப் போயும் போயும் பெயர்தான் அகப்படுகிறதே, நம் கர்நாடகங்களுக்கு:- சேஷி, நாகு,-பாம்பின் நினைவுதான் முன்னே வருகிறது!-எச்சு, இம்மி, அம்மி, விம்மி, சுப்பி, செல்வி, காவு,-யாரையோ பாவம்!-அவயம், பார்வதம், கஜலக்ஷ்மி, புஜகலக்ஷ்மி, சங்கரி, யமகிங்கரி!) ஆஹா! என்ன கண்ணாடி வைரங்கள், என்ன ஜ்வலிப்பு, என்ன குரல், என்ன நடை, என்ன ஜரிகை, என்னபௌடர்,

தொட்டால் ஒட்டிக்கொள்ளும் அழகல்லவா!—(ஒரு பெருமூச்சுவிட்டேன்.) ஆனால் இவர்களிடம் ரகசியமே பேசமுடியாது! ஏன் மறுநாள் பத்திரிகைகளில் வந்துவிடும்! ஏன், பேசும்போதே பாட ஆரம்பித்துவிடுவார்களே! காசு கொடுத்தவர்களுக்கெல்லாம் காது கேட்க வேண்டாமா? ராத்திரியெல்லாம் கண் விழித்துப் பகலில் தூங்கப் போய்விடுவார்கள்; நாமும் ஒரு ஜமீன் உத்யோகம் தேட வேண்டியது தான். வீட்டு வேலையா?—சமையற்காரனெங்கே, வேலைக்காரியெங்கே என்பார்கள்! குழந்தைக்குப் பால் நாம் தான் கொடுக்க வேணும்? போதும் இரண்டே நாளில் நம் சொத்து தீபாவளிதான்! பக்கத்தில் சுவரைத் தொட்டுப் பார்த்தேன். கெட்டியாய்த்தானிருந்தது.

தீபாவளி என்றவுடன் ஒரு 'பட்டாசு' சப்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். செவ்வானமிட்ட சூரியோதயமாகிவிருந்தது. நான் லக்ஷணங்கள் வைத்திருந்த தகர டப்பியை எலி உருட்டித்தள்ளி யிருந்தது! மெல்லக்கதவைத் திறந்துகொண்டு மணவறையினின்று வரும் மகள் போல் சந்தடி செய்யாமல் வெளியே வரும்போதே குடியிருப்பவர்களுடைய ஐந்து வயதுப் பையன் "மாமா, இன்னிக்கி நீங்க எங்காத்திலேதானே சாப்பிடணும்! நான் ஆமாம் என்னு அம்மாவண்டை சொல்லிப்பட்டேன்" என்று ஓடிவிட்டான். தகப்பனும் அவ்வாறே சொல்லவே, நான் அன்று அவர்களுடைய விருந்தாளியாகவேயிருந்தேன். விவாஹம் குழந்தைகளைக் குறித்ததே யன்றி, ஸ்திரீ புருஷர்களைக் குறித்ததல்ல வென்பது அன்றைப்பொழுதில் மெல்ல மெல்ல என் புல்லறிவுக்குப் புலப்பட்டது.

சிற்றன்னையின் புதுப்பிறவி

("வில்லன்" எழுதியது)

சர்வ ஜீவராசிகளுக்கும் புதுவாழ்வளிக்கும் வஸந்தம் புரசைவாக்கம் சங்கர நிவாஸத்தை மறந்து விடவில்லை. அதன் பரந்த தோட்டத்திலும், மைதானத்திலும் வஸந்தத்தின் குதூகலம் எங்கும் நிறைந்திருந்தது. மரஞ்செடிகளின் இளந்தளிர்கள் மெல்லிய காலைக் காற்றில் சலசலவென்று அசைந்து கொண்டிருந்தன. கொன்றை மரங்களிலிருந்து பொன்னிறப் புஷ்பங்கள் சரம் சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. செவ்வரளியிலும் வெள்ளரளியிலும் பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தன. பவழமல்லியின் கீழேயும் மகிழ மரத்தின் கீழேயும் மலர்கள் பூப்பாவாடை விரித்தாற் போல உதிர்ந்து கிடந்தன. செம்பரத்தைச் செடிகளிலிருந்து சப்பாத்துப் பூக்களும், ரோஜாச் செடிகளிலிருந்து பல வர்ணங்களுடைய மலர்களும் இதழ் விரித்து இளம் வெயிலில் புன்னகை புரிந்து ஊசலாடிக் கொண்டிருந்தன. மரக்கிளைகளில் நானாவிதப் பட்சிகள் பேருவகையுடன் ஒன்றையொன்று கூவியழைத்துக் கொண்டிருந்தன. பங்களாவின் தென்கோடியில் ரத்னக்கம்பளம் விரித்தாற் போன்றிருந்த பசும் புற்றரை இளம் பரிதியைப் புல்லிக்கொண்டிருந்தது. அதன் மத்தியிலுள்ள தடாகத்தின் நீர்ப்பரப்பு இளஞ்செங்கதிரொளியில் மினுங்கிக்கொண்டிருந்தது.

அன்றைதினம் தமிழ் வருஷப் பிறப்பு; சுமார் எட்டு மணி இருக்கும்; ஸீதாலக்ஷ்மி பங்களாவின் முன் வீராந்தாவில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தோட்டத்தை நோக்கிய வண்ணமாயிருந்தாள். வஸந்தம் சாதாரணமாகப் பிரிந்துள்ள காதலரைத் துன்புறுத்துமென்பர். ஸீதாலக்ஷ்மியும் இவ்வஸந்தத்தினால் துன்புறுத்தப்பட்டது உண்மையே

யாயினும் அது காதலின் காரணமாகவல்ல. சென்ற வருஷம் அதே தினத்தில் தான் தனது ஒரே செல்லக்குமாரனுன பத்மநாபனை அவள் யமன் வாயிற் பறி கொடுத்தாள். அவிந்து ஓய்ந்திருந்த எரிமலை திடீரெனப் புகைந்து அக்னிக் குழம்பைக் கக்கி எறிவதைப் போல மனதிலே மங்கிக்கிடந்த உணர்ச்சிகளும் பழைய நினைவுகளும் அன்று அவளது உள்ளத்தினின்றும் குமுறிக்கொண்டு வந்தன. சென்ற வருஷம் இதே காலத்தில் பத்மநாபன் இதே தோட்டத்தில் மான் குட்டியைப் போலத் துள்ளிக்குதித்து விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு நாள் இன்புளூவன்ஸா ஜுரம் கண்டது. மூன்று நாட்கள் படுக்கையாகக் கிடந்து வருஷப் பிறப்பன்று உயிர் விட்டான். இதெல்லாம் படம் பிடித்தாற்போல அவளது மனக்கண் முன் தோன்றியது. துக்கம் நெஞ்சை யடைத்தது; கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகச் சொட்டிற்று; அவளுக்கு ஆறுதலளிக்க எவரும் அருகாமையிலில்லை; அவளது கணவரான ராமசாமி முதலியார் அதுசமயம் வியாபார சம்பந்தமாக இங்கிலாந்து சென்றிருந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தபால் சேவகன் ஒருவன் வந்து ஸீதாலக்ஷ்மியினிடம் ஒரு சிப்பமும் கடிதமும் கொடுத்துவிட்டுச் சென்ருன். அவை முதலியாரின் முதல் தாரத்துக் குழந்தைகளின் அம்மானிடமிருந்து வந்தன. ஸீதாலக்ஷ்மி கடிதத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு அதைக் கசக்கிக் கீழே எறிந்தாள். சிப்பத்தைத் திறந்துகூடப் பார்க்காமல், "அடே சங்கரா, அடி ருக்மிணி, உங்களுடைய மாமா பம்பாயிலிருந்து உங்களுக்கு என்னமோ புது வருஷப் பரிசில் அனுப்பி யிருக்கானும். எடுத்துக்கொண்டு உள்ளே போங்கள்" என்று சொல்லி அதைத் தரையில் விட்டுக் கடாசி முகத்தைத் திருப்பிக்கொண்டாள். குழந்தைகள் ஓடிவந்தன. ஸீதாலக்ஷ்மி இருந்த நிலையில் அவைகள் ஒன்றும் பேசாமல் மௌனமாகச் சிப்பத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றன.

சங்கரனுக்கு ஒன்பது வயதிருக்கும்; ருக்மிணிக்கு எட்டு இருக்கும்; ஸீதாலக்ஷ்மி தனது சொந்த மாமாவான ராமசாமி முதலியாரை இரண்டாந்தாரமாக மணந்தபோது இத்தாயில்லாக் குழந்தைகளின் மீது இரக்கங்கொண்டாள். அவைகளைத் தன் வயிற்றில் பிறந்தாற்போலவே எண்ணி ஒரு குறையுமில்லாமல் போஷித்து வந்தாள். அவைகளும் அவள் மாற்றுந்தாய் என்பதையுமறியாமல் கபடற்று வளர்ந்தன. ஸீதாலக்ஷ்மிக்கு நாளடைவில் தன் வயிற்றிலேயே ஒரு குழந்தை பிறந்தது. அப்போதுங்கூட தனது குழந்தைக்குவிசேஷ பரிவு யாதொன்றும் காட்டாமல் உண்மையாகவே மூன்று குழந்தைகளையும் ஒரே அன்புடன் பார்த்து வந்தாள். இப்பொழுது ஏன் அப்படி யில்லை?

ஏன்? தனது பையனைப் பறிகொடுத்த துக்கமும், பழைய நினைவுகள் எல்லாமும் அவள் உள்ளத்தைக் கிளறிவிட்டன. தனது வயிற்றில் உதித்த மகன் இன்று இல்லாதிருக்க, மற்றொருத்தி வயிற்றில் பிறந்த பிள்ளைகள் உயிரோடிருந்து வீட்டுச் செல்லப் பிள்ளைகளாக விருந்ததை அவளால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் மீதிருந்த நேசம் விட்டதோடு ஒருவித வெறுப்பும் அருவையுமேற்பட்டன. அவர்கள் அவளை 'அம்மா' என்று அழைத்தபோது 'அம்மாவுமில்லை; கிம்மாவுமில்லை; நான் உங்களுடைய அம்மா இல்லை' என்று வெடுக்கென்று சொல்லலாம் போலிருந்தது அவளுக்கு. 'அம்மா' வென்று கூப்பிட உரிமை பெற்றவன் இல்லாதிருக்க, மற்றவர்கள் அவ்வுரிமையைக் கையாளுவதை அவள் சஹிக்கவில்லை. தபால்காரன் சென்ற பிறகு துக்கம் இன்னும் அதிகரித்து அவளது நெஞ்சை அடைத்தது. மீண்டும் கண்களிலிருந்து நீர் பலபலவென்று விழுந்தது. யாராவது பார்த்துவிடப் போகிருர்களென்று அஞ்சி உடனே கண்களை முந்தானையால் துடைத்துக்கொண்டு துக்கத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டாள்.

தொலைவில் ஒரு அணிப்பிள்ளை 'கீச் கீச்' என்று தொண்டையைக் கிழித்துக்கொண்டிருந்தது, இளந்தென்றலில் மிதந்து வந்தது. மற்றப்படி தோட்டத்தில் ஒரே நிசப்தம். ஆனல் அவளது மனதில் மட்டும் அமைதியில்லை. துக்கமும் விசனமும் ஒரு பக்கமும்,

பகையும் பொறுமையும் மற்றொரு பக்கமுமாக அவளை வாட்டிக்கொண்டே யிருந்தன. துக்கம் வருவது நியாயந்தான். ஆனால் பகை யேன்? இத்தாயில்லாக் குழந்தைகளைத் தகப்பன் அவளிடம் ஒப்படைத்து ஆறாயிரம் மைல்களுக்கப்பால் சென்றிருக்கிறான். இது சமயம் அவைகளின் மீது வயிற்றெரிச்சல் ஏற்படும்படியாக அக்குழந்தைகள் அப்படி யொன்றும் செய்துவிட வில்லையே. ஸீதாலக்ஷ்மி இயற்கையிலேயே நல்ல சுபாவமும் அன்புமுடையவளாயிற்றே. ஆகவே சாத்தான் தான் அவளுள்ளத்தில் புகுந்து கொண்டு இப்படி ஆட்டி வைத்துக் கொண்டிருக்கவேண்டும். இந்த நிலையில் "இவைகளில் ஒன்றாவது செத்தால்தான் என் மனம் நிம்மதிப்படும் போலிருக்கிறது" என்று தன்னையும் மீறி வாய் விட்டுச் சொல்லலுற்றாள். அடுத்த நிமிஷமே, "ஐயோ! இது என்ன விபரீதம்! இத்தகைய எண்ணம்கூட என் மனதில் வந்ததே" என்று தனக்குள்ளேயே வெட்கப்பட்டாள். தான் அறியாத்தனமாய் வாய்விட்டுச் சொன்னதை எவரேனும் கேட்டிருப்பார்களோவென்று சுற்று முற்றும் பார்த்தாள். நல்ல காலமாய் ஒருவருமில்லை. இம்மனோநிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள சட்டென்று எழுந்து தோட்டத்திற்குள் நுழைந்து மரஞ்செடிகளுக்கிடையே நடந்தாள். அவளது கண்கள் வெறுமனே செடிகளையும் மலர்களையும் பார்த்தனவே யொழிய உள்ளமெல்லாம் பழைய சிந்தனைகளிலாழ்ந்திருந்தது. இவ்வனாதைக் குழந்தைகளைப்பற்றி மீண்டும் யோசித்தாள். அவைகள் மீதுள்ள வன்மத்தின் வேகம் சற்று குறைந்தது. ஆயினும் உள்ளுக்குள்ளிருந்த அசூயை மட்டும் அவளை முற்றிலும் விட்டுப்போகவில்லை. இந்நிலையில் அவைகளுக்கு எவ்விதம் தாய்போன்றிருக்க முடியும்? அவைகளைக் கண் மறைவாக எங்கேயாவது அனுப்பிவிட்டால் அவைகளின் சிரிப்பும், களிப்பும், விளையாட்டும் அவளது வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிடாமலாவது இருக்கும். அவைகளை எங்கு அனுப்பி விடுவது? பையனைக் கிருஸ்துவப் பாதிரிமாரின் போர்டிங்கு (மாணவர் விடுதியுள்ள) பள்ளிக்கூடத்திற்கும் பெண்ணை சேந்தோம் கன்னியாமடப் பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பலாம். வீட்டில் தாயின் போஷணையும் அன்புமின்றி போர்டிங்கு பள்ளிக்கூடங்களில் சிறுபிள்ளைகள் சௌக்கியமாக வளரமுடியாது தான். ஆயினும் எத்தனையோ பிள்ளைகள் தங்களது தாய் தந்தையர்களை விட்டு அவ்விதம் இருக்கவில்லையா? சரி தான். ஆனால், இந்த குழந்தைகளின் தாயார் மரணப்படுக்கையில் இருக்கையில் கணவனை யழைத்துப் பிள்ளைகளை வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிப் பிராணனை விட்டதை அவளும் அறிவாள். இறந்தவளின் இஷ்டப்படியே இக்குழந்தைகளைப் பட்சமாகவே இதுகாறும் அவள் நடத்தி வந்திருக்கிறாள். மேலும் கணவர் வியாபார விஷயமாக அடிக்கடி வெளியூர்களுக்குப் பிரயாணம் செய்ய நேரிடுவதால், எல்லாப் பொறுப்பும் அவள் மீதே இருந்தது. அவர் இச்சமயம் ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கையில் இக்குழந்தைகளை வெளியே அனுப்பிவிடுவது அழகாமா? ஆயினும் என்ன செய்வது? உள்ளத்தில் ஆவேசத்துடன் பொங்கி வந்த உணர்ச்சிகளை இலேசில் அடக்கமுடியவில்லையே. தன் வயிற்றில் பிறந்த மகன் உயிரோடிருந்து அனுபவிக்க முடியாத சுகங்களை வேறொருத்தியின் குழந்தைகள் தன் கண் முன் அனுபவிப்பதைப் பார்த்துக்கொண்டு எத்தனை நாள்தான் சகித்துக் கொண்டிருப்பது? சரி இருக்கட்டும். இக்குழந்தைகளை வெளியே அனுப்பி விட்டால் கணவர் திரும்பிவந்தவுடன் அவருக்கு என்ன பதில் சொல்வது? அது ஒன்றும் பிரமாதமில்லை. சங்கரனும் ருக்மிணியும் வீட்டில் செய்யும் சேஷ்டைகளைப் பொறுக்கமுடியாமல் அவர்களைப் போர்டிங்கு பள்ளிக்கூடத்தில் படிக்க ஏற்பாடு செய்துவிட்டதாக இப்பொழு அவருக்கு எழுதிவிடலாமல்லவா? இவ்விதம் எழுதுவதும் பொய்யாகாது. ஏனெனில் உண்மையிலேயே சங்கரனுக்கு எடுத்ததற்கெல்லாம் கோபம் வரும். கையிலகப்பட்டதை உடைத்து எறிந்துவிட்டு தரையில் புரண்டு அழுவான். ருக்மிணிக்கு வாய் நீளம். அடக்கம் என்பதே கிடையாது. பெரியவர்கள் சின்னவர்கள் என்பதின்றி எதற்கும் நேருக்கு நேர் பதில் சொல்லுவாள். இவ்வண்ணமாகத் தனக்குள்ளேயே தருக்கம் செய்துவிட்டுக் கடைசியாக அக்குழந்தைகளை வீட்டைவிட்டு

ஒழித்துவிட வேண்டியதுதான் என ஸீதா லக்ஷ்மி முடிவு செய்தாள்.

இம்முடிவிற்கு வந்த பிறகு அவளது மனம் கொஞ்சம் அமைதி பெற்றது. உள்ளத்தை அழுத்திக்கொண்டிருந்த ஒரு பளுவு நீங்கினாற் போலிருந்தது. மீண்டும் குழந்தை பத்மநா பனைப்பற்றி நினைத்தாள். அவனது சுருள் மயிர் தொங்கிக்கொண்டிருக்க, அம்மா வென்று புன்னகையுடன் ஓடி வந்து அவளது மடியில் விழுந்து கொஞ்சுவதும், அவளது கையைப் பிடித்துக்கொண்டு தோட்டத்தில் உலாவுவதும், பூக்கள் பறிப்பதும், எல்லாம் புகைப்படம் பிடித்தாற்போல அவளது மனக் கண்ணில் வந்து நின்றன. பத்மநாபனுக்கு ரோஜாப் பூவின்மேல் அத்யந்த பிரேமையல் லவா? வழியில் நன்றாக மலர்ந்திருந்த பெரிய சிவப்பு ரோஜா ஒன்றைக்கண்ட ஸீதாலக்ஷ்மி அதை எட்டிப் பறித்து, பத்மநாபனின் பெரிய போட்டோ வைக்கப்பட்டிருந்த அறை யை நோக்கி வீட்டுக்குள்ளே சென்றாள்.

நிற்க, சங்கரனும் ருக்மிணியும் சிற்றன்னை கோபத்துடனே விட்டெறிந்த சிப்பத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று அதைப் பிரித்துப்பார்த்தனர். அதில் சாக்லெட் மிட் டாய்ப் பெட்டிகள் இரண்டும், பல தினுசுகள் பெப்பர்மிண்டுகள் அடங்கிய சீசா ஒன்றும், ஆகாய விமான விசைப்பொம்மைகள் இரண் டும், ஓரங்களில் பொன் முலாம் பூசப்பட்டு அழகாகக் கட்டப்பட்டச் சித்திரப் புஸ்தகங் கள் இரண்டும் இருக்கக்கண்டனர். சாக்லெட் டைக் கண்டவுடன் சங்கரனுக்குத் தம்பி பத்ம நாபனின் ஞாபகம் வந்தது.

"ருக்கு! தம்பிக்கு சாக்லேட் என்னா ரொம்ப இஷ்டம். அவன் இப்போ இல்லே யேன்னு எனக்கு ரொம்ப துக்கமாயிருக்கு."

"தம்பி எங்கே இருக்கான் சங்கு? இனி மேல் இங்கே வரமாட்டான்?"

"ருக்கு, தம்பியின் பெரிய போட்டோவை நீ பார்த்திருக்கிறாயா? நாம் போய் பார்க்க லாம், வா."

இருவருமாகப் பத்மநாபனின் பெரி தாக்கப்பட்ட போட்டோ வைக்கப்பட் டிருந்த அறைக்குச் சென்றனர். அங்கே அந்த போட்டோ ஒரு சிறு மேஜையின் மேல் சுவரின் மீது சாத்தி வைக்கப்பட் டிருந்தது. அருகாமையிலிருந்த ஒரு சிறு கண்ணாடி பீரோவில் அவன் உயிரோடிருந்த போது அணிந்த உடைகள், வெல்வெட்டு குல்லா, வெல்வெட்டு பாதரக்ஷைகள் முதலிய வைகளும், அவன் விளையாடின பொம்மைக ளும் வைக்கப்பட்டிருந்தன. ஸீதாலக்ஷ்மி அவைகளை அவனது ஞாபகார்த்தமாக வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வைத்திருந் தாள்.

"சங்கு, தம்பி எதிரே நிற்காப்போல அப் படியே இருக்குடா."

"ருக்கு, போட்டோவுக்கு நேரே ஒரு பெட்டி சாக்லேட்டை வைத்துவிட்டு மிச்சத் தை நாம் எடுத்துக் கொள்ளலாம். நீ அதுக் குள்ளே ரெண்டு ரோஜாபூ கிள்ளிண்டு வா. அதையுங்கூட வெக்கிறேன். அம்மா கூட அடிக்கடி போட்டோவுக்கு நேரே ரோஜாபூ வெக்கிறதைப் பார்த்திருக்கேன்."

ருக்கு இரண்டு மூன்று ரோஜாப் பூக்களைக் கிளைகளுடன் கொண்டுவந்து கொடுத்தாள். சங்கரன் அவைகளை அங்கிருந்த ஒரு பூஞ்சா டியில் வைத்தான்.

அப்போது அறையை நோக்கி வந்த ஸீதா லக்ஷ்மி, சங்கரனும் ருக்மிணியும் படத்திற் கெதிரே நின்று கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டு சற்று அப்படியே கதவின் இடுக்கில் நின்று கவனித்தாள். அவள் வரவையறி யாத குழந்தைகள் பின்வருமாறு பேசிக் கொண்டன

"ருக்கு, தம்பி பிழைச்சிருந்தா எவ்வள நன்னாயிருக்கும்! மூணு பேருமா சேந்து மாமா அனுப்பிச்ச ஏரோபிளேனை வைச்சுண்டு விளையாடலாமே. அவன் இல்லாமே வீடே வெரிச்சிண்டிருக்கு. அவன் இல்லாமே எனக்கு என்னமோ மாதிரி இருக்கு. அழு கை வராப்போலிருக்கு."

"சங்கு, தம்பி இனிமே திரும்பி வரமாட்டான்? அன்னிக்கு அப்பூாவை நான் கேக்கச்சே 'தம்பி மேல் லோகத்துக்கு போயிருக்கான், வந்துடுவான்' னு சொன்னளே. தம்பி மேல் லோகத்திலிருந்து எப்போ வருவான்?"

"ருக்கு, ஆமாம் ஆமாம். எனக்குக் கூட ஞாபகம் வரது. அன்னிக்கு நம்ம குரு சந்நியாசி வந்து அம்மாவை பார்த்து "ஸீதா, நீ அழாதே. பத்மன் சீக்கிரம் திரும்பிவந்து உன் வயத்தில் பிறப்பான்," என்று சொல்லீட்டு போனர். அம்மா கண்ணை மூடிண்டு ஜபம் பண்ணுப்போல நாம்பளும் கண்ணை மூடிண்டு, "சாமி தம்பி இல்லாமே என்னமோ மாதிரியாயிருக்கு. தம்பி சீக்கிரம் அம்மா வயத்திலே வந்து பிறக்கணும்" என்னு ஜபம் பண்ணலாம் வா. கண்ணை மூடிக்கோ."

இவ்வண்ணம் குழந்தைகள் சொல்லிக் கொண்டதைக் கேட்ட ஸீதாலக்ஷ்மியின் உள்ளம் சூரியன் முன் பனிபோல உருகியது. கதவை நன்ருகத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து கையிலிருந்த ரோஜாவை அவசரமாகப் பூஞ்சாடியில் வைத்தாள். உடனே இரு குழந்தைகளையும் சேர்த்து அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள். கண்களிலிருந்து நீர் ஆருகப்பெருகி கன்னங்களில் வழிந்தது. குழந்தைகளின் மாசற்ற அன்பு அவளது வன்மத்தை முற்றிலும் வென்றது. உள்ளம் பூரணமாக மலர்ந்தது. தான் பறிகொடுத்த பத்மநாபனைத் திரும்பப் பெற்ருல் எவ்வளவு மகிழ்வுறுவாளோ அவ்வளவு மகிழ்ச்சியும் ஆனந்தமும் அவளுள்ளத்தில் அச்சமயம் குடிகொண்டன. உயிர்களுக்கெல்லாம் புத்துயிரளித்த வஸந்தம் தனது இறுதிக்காலத்தில் ஸீதாலக்ஷ்மிக்குப் புதுவாழ்வளித்துச் சென்றது. புதுவருஷ நாளன்று அவள் புதுப் பிறவி பெற்ருள்.

பேதைமை

(ரா. ஸ்ரீ தேசிகன் M. A., எழுதியது.)

வெள்ளெனக் கீழ்வான் வெளிறு முன்னே
பள்ளநீர்க் கொள்ளிடப் பாரின் மருங்கில்
மெல்ல மங்கும் வெண்மதி நிலவில்
மின்னும் முதுமணற் குன்றுகள் மீதே
தன்னந் தனியாய்க் காலையின் வனப்பை
அள்ளிக் குடிக்க அமர்ந்தேன் நானே
கழனிக் கடலின் கதிர்த்திரைச் சிகரம்
குணதிசை மாருதம் குளிர்ந்து வீசவே
கள்ளங் கவடு கனவிலுந் தோன்ருக்
குழவிப் பருவம் குறுவலை போலக்
கணக்கிலா நகைகள் காட்டிக் களித்த
புராணப் புன்னைப் புதுமலர் மணத்தொடே

உறங்கும் பண்டை உணர்ச்சிகள் உளத்தே
பின்னிப் பாய்ந்து மிளிர்ந்தன பெரிதும்
உணர்ச்சிப் பொறிகள் ஒருவா றடங்கக்
கேள்விகள் கேட்டேன் புன்னையை விளித்தே:
எதற்கோ தோன்றினாய் எனக்கு முன்னே?
தரிப்பாய் எனக்குப் பின்னும் தரணியில்
நவிலாய் நீவரு காரணம் நவிலாய்.
பரந்த கொள்ளிடக் காட்சி பருகவோ?
மதுகரம் தேன்பிழி மகரயாழ் கேட்கவோ?
பறவைக் கணங்களின் பாடல் மாந்தவோ?
இளநகைச் சிறுவரை யின்புற நோக்கவோ?
நவிலாய் நீவரு காரணம் நவிலாய்.
இங்ஙனம் பிதற்றினேன். என்னை யிகழவே
சளுக்கெனச் சிரிக்கும் கதிரவன் ஒளியில்
விரிந்ததென் பேதைமை, விரிந்ததென் பேதைமை!
புலம்பினேன் பலபடப் புலம்பினேன் நானும்
ஓடி ஓடித் திரிந்தே உலகெலாம்
ஓடித் திரிந்தென்? மர்மம் ஓர்ந்திலேன்
கனவிலும் பழுதாய்க் கழிந்தன நாட்கள்.
என்ன பேதைமை எனக்கே! உன்னை
எப்படி யறிவனோ? எனையறிந் திலனே!

சுகப்ரஹ்மம்

(கௌண்டின்யன் எழுதியது)

[வேத வியாஸ மஹர்ஷி அருளிச்செய்த ஸ்ரீமத்பாகவதத்தை கங்கைக்கரையில் பிரும்ம சாபத்துக்குப் பயந்து வாடும் பரீக்ஷித்து மஹாராஜவுக்கு, வியாஸபகவானுடைய புத்திரரும் சிஷ்யரும் பிரும்ம நிஷ்டருமான ஸ்ரீ சுகர் உபதேசித்தார். பதினறு வயதான மன்மத வடிவான தேகமும், ஸதா உள் நோக்கின பார்வையும், ப்ரஹ்ம தியானத்தில் அழுந்தி உலக வியாபாரத்தை முற்றிலும் மறந்து இஷ்டம்போல் திரியும் இவருடைய சேஷ்டைகளைக் கண்டு மனங்கசிந்த பிதா ஒருகாலத்தில் தன் குழந்தைக்கு உபநயனம் செய்விக்க விரும்பிப் பின் தொடர பிரம்ஹஸாக்ஷாத்காரம்பெற்ற பிள்ளையோ இந்த பந்தங்கள் நமக்கேதுக்கு என்று எண்ணினாற் போலக் காட்டில் ஓடினாராம். அதைக் கண்டு வியாஸபகவான் கருணை நிறைந்த குரலில் 'குழந்தாய்' என்று ஏங்கிக் கூப்பிட, குழந்தை பதிலளிக்காமலிருந்தும் தன்மயமான காட்டு மரங்கள் முதல் 'என்

என்று விடை தந்தனவாம். இம்மகான் பரீக்ஷித்தின் புண்ணிய வசத்தால், பாலரும் பாமரரும் சூழ, சற்றுச் சிரிப்பதும் சற்று அழுவதும் பின்னே கூத்தாடுவதுமாகக் கிழிந்த கந்தைகளை மாலையாயணிந்து, சாம்பற் பூத்த நெருப்புப் போல் தேஜஸ் வெளிப்படையாய்த் தெரியாததால் உலகத்தாரால் பித்தனென்று எண்ணப்பட்டும் மஹர்ஷிகளால் முக்தனென்று மரியாதையுடன் வரவேற்கப்பட்டு கங்கைக்கரையில் பவ பயந் துலைய ஸ்ரீமத் பாகவதத்தைத் தான் பிதாவிடம் கற்றபடி உபன்யசித்தாராம். 'ஜயம்' என்ற பதம் ஸ்ரீமத் பாகவதத்தைக் குறிக்கும். கிருஷ்ணன் என்ற பெயர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கும் பொருந்தும்; கிருஷ்ண த்வைபாயனர் என்ற வியாஸருக்கும் பொருந்தும்.]

சுகப்ரஹ்மம்

சொன்னத்தைச் சொன்னகிளி-க்ருஷ்ணன்
சொன்னத்தைச் சொன்னகிளி—மற்றோர்
சொல்லாத்தைச் சொன்னகிளி
அரைநொடிக் கொருதரம்
ஹரியே கதி யென்று
சொன்னத்தைச் சொன்னகிளி.

வேதம் பழுத்த அப்போ
கோதிக் களித்த கிளி
வேதம் வகுத்த முனி
கசிந்தும் மகிழ்ந்த கிளி.

பாலர் அறியாதவர்
சூழ்ந்து சிரித்த கிளி
பாவத்திற் கெட்டாப்பொருள்
உள்ளே உகந்த கிளி.

பாவையர் பித்த னென்று
பார்த்தும் மோஹித்த கிளி
பாமரர் சித்தனென்று
பின்பற்றிச் சென்றகிளி.

ஞானம் நிறைந்த கிளி
மோனம் படைத்தகிளி
ஆனந்தம் பொங்கிவர
அம்ருதம் வர்ஷித்த கிளி.

அன்புப் பெருக்காலது
ஆத்மாக்கள் உய்ய வென்று
தேவிட்டாப் பழவிதையைத்
தேடிக்கொடுத்த கிளி.

ஜனகன் தெரு வாசலில்
காத்துக் கனிந்த கிளி
ஸநகஸநந்தனர் போல்
சற்றும் பற்றற்ற கிளி.

மறைமுனி தந்த செல்வம்
மறுபிறப் பில்லாக் கிளி
எப்பிறப்புள்ளுமானோர்க்
கிருபிறப் பேதுக்கடி!

தன்னை மறந்த கிளி
தந்தை குழந்தா யென்று
அன்பார்ந்து ஓலமிட
அகிலாண்டம் ஓ வென்றதாம்.

பிறந்தது வேதக்குன்று
புகுந்தது வேதப் பொருள்
வேற்றுமை மறைந்த வெட்ட
வெளியே பறந்த கிளி.

அண்டத்தி லுண்டான சேய்
அல்லிக் குளத்தாமரை,
பவழவாய்ச் செங்கண்ணனைப்
பாடிய பச்சைக் கிளி.

சுகனொரு ஆத்ம வித்தன்
சுக நிலை கண்ட மத்தன்
ஜக மிதில் பய மறவே
ஜயம் தந்து காத்த பக்தன்.

காமதஹனம்

(டாக்டர் வே. ராகவன் எழுதியது)

காமனெனப் பெயர் பூண்ட
கடவுள்தம் ஆக்கும் சக்தி
நாமமதையே வழிபடுவோம்
நிறைதனையே நாம் பெறுவோம்
ரதியென வழங்கும் ப்ரம்ம
ரஸமதை அடைந்துண்டு
நரைமுதல் நோய்கள் நீங்கும்
நிலையிலே நிற்போமாக.

*காமன் எரிந்து போன காமதஹன விழா இன்று நாடுமுழுதும் கொண்டாடப் படுகிறது. தவமிருந்த சிவபிரானின் நெற்றிக் கண் பொரியில் சாம்பலாகி, மறுபடியும் அக்கடவுளை தவத்தால் தன்னை வழிபட்ட பார்வதியை மணந்தபோது, காமதேவன் உயிரடைந்த கதையை நிகரற்ற அழகுடன் வடமொழிக் கவிச் சக்ரவர்த்தி காளிதாஸர் தம் 'குமார ஸம்பவ' காவ்யத்தில் சொல்லியுள்ளார். முதலில் பார்வதி தன் சரீரவசீகரத்தின் சக்தியால் பரமசிவனை யடைய முயன்றாள். அச்சமயம் சிவனென்றும் பொருட் படுத்தாது, அறம், பொருள், வீடு மூன்றிற்கும் பகையாய் வளர்ந்து, தபஸ்விகளையும், ஸதிமணிகளையும் ஒழுக்கம் தவறும்படி செய்துவந்த காமதேவனும் சிவன்மேல் அம்பு விடுத்து அவருடைய மூன்றும் கண்ணன ஞானக் கண்ணின் வைராக்கியமான தீக்கிரையானன். உடனே இழிவான சரீர அழகினல் வழிபட முடியாக் கடவுளைத் தானும் தவங்கிடந்து வழிப்பட்டாள் உமை. தவ விலை கொண்டு வாங்கப் பெற்ற பரமனும் அவளை அங்கீகரித்தான். தவத்தூய்மை யடைந்த ஆன்மாவின் வசிகரத்தால் லோக மாதாவும் லோக பிதாவும் ஒருவரை யொருவர் அடைந்தபோது மறுபடியும் புத்துயிர் பெற்றான் காமதேவன். முன் சாம்பலான காமன், தர்மம், அர்த்தம், மோக்ஷம் என்று மூன்று புருஷார்த்தங்களின் சத்ருவான துஷ்டன். பின் புத்துயிரடைந்த காமனே தர்மார்த்த மோக்ஷங்களின் உயிரான சிஷ்டன். இப்படிக் காமன் தீக்குளித்துச் சுத்தியடைந்ததை இப்பொழுது ஒரு நாடகமாகக் காணுங்கள்.

பாத்திரங்கள்—

தர்மமித்திரை
அர்த்தமித்திரை
ஸாஹஸன்
காமன்
ரதி
வஸந்தன்
பூர்ணசந்திரன்
மலயமாருதன்
மோக்ஷமித்திரை
சிவன்.

காமதஹனம்,

தர்மமித்திரை:—அர்த்தமித்ரா! எங்கே நம் தேவி ரதி?

அர்த்தமித்திரை:—தர்மா! நம் தோழி மோக்ஷமித்திரை ஏதோ சில நிமிஷங்களுக்கு முன் தேவியிடம் ரஹஸ்யமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதன்மேல் துயரமும் கோபமும் பொங்கியெழத் தேவி விரைவாய்க் கோபாகாரத்தில் தனியாய் நுழைந்தாள்.

தர்ம:—கோப அறைக்குள் சென்றதிலிருந்து பர்த்தாவான காமதேவரிடம் ஏதோ காரணம் பற்றிக் கோபம் கொண்டிருக்க வேண்டும் தேவி. (இச்சமயம் வேகமாய்க் காமதேவன் வரும்போது அதைத் தெரிவிக்கும் வாத்யகோஷம் கேட்கிறது.) இதென்னடி அர்த்தமித்ரா!

அர்த்த:—காமதேவர் ரதியைப் பார்க்க வருகிறார் போலிருக்கிறது.

[பாட்டு கேட்கிறது; காமதேவன் தன் பெருமையைத் தானே பாராட்டிக் கொண்டு வருகிறன்]

*5—3—39 ஹோலியென்ற காமதஹனத்தன்று சென்னை ரேடியோவில் இந்நாடகம் போடப்பட்டது.

காமன்:—பூவே என் ஆயுதம்
பூவே எனக்கடிமை
புண்ணியம் பாவ மேன்று
பகுத்தறிவில்லாமல்
நன்னெறிக் கரை பிளந்து
நற்குண மரம் பிடுங்கி
பெரு வெள்ளமாய் ஓடும்
பரமனையும் வெல்லும் காமன்
அறம் பொருள் வீடு மூன்றும்
அறவே ஒழிக்கும் இன்ப
ஜயக்கொடி நாட்டும் காமன்.
ஜகமெல்லாம் வெல்லும் நாமன்.

தர்ம:—ஐயோ உன்மேலும், என்மேலும், தோழி மோக்ஷமித்ரை மேலும், ஏன் பகை இவனுக்கு?

அர்த்த:—வா. நாம் இவன் வழியை விட்டு விலகுவோம். இவன் வந்தால், எனக்குத் திடீரென்று உடம்பு காலுடம்பாக ஆகிவிடுகிறது.

தர்ம:—எனக்கோ இவனைக் கண்டதும் அங்கங்கள் அனைத்தும் காய்ந்த இலைகள்போல் உதிர்ந்து விடுகின்றன. வா. விலகுவோம்.

பாட்டு.

காமன் :—அறம் பொருள் வீடு மூன்றும்
அறவே ஒழிக்கும் இன்ப
ஜயக்கொடி நாட்டும் காமன்
ஜகமெல்லாம் வெல்லும் நாமன்

என்ன சூன்யமா யிருக்கிறது எனது போக மாளிகை! எங்கே ரதி தேவி? யாரடா, ஸாஹஸா! ஹடா! வக்ரகதி! தேவி எங்கே யென்று பார்த்து வா.

ஸாஹஸன் :—அப்படியே ஸ்வாமி.

காமன் :—இதென்ன! ரதியை நான் வேண்டி வந்தபோது அவளைக் காணாதது அபசகுனம் போலிருக்கிறதே! கூடும் காரியமா யிருந்தால், இப்படி எடுக்கும் போதே தடங்கல் வருமா?

ஸாஹஸன் :—ஸ்வாமி! தேவி கோபக்ருஹத்தில் படுத்திருக்கிறாளாம்.

காமன் :—கோபக்ருஹமா! நான் பயந்ததிற்குக் காரண மிருக்கிறது. படர்காள்! நீங்கள் போகலாம். நாம் ஏகாந்தத்தில் தேவியைக் கண்டு தேறுதல் செய்ய வேண்டும். நீங்கள், நம் தோழன் ருதுவேந்தன் வஸந்தனை நாம் பார்க்க விரும்புவதாய்ச் சொல்லி விட்டுப் போங்கள்.

ஸாஹஸன் :—உத்திரவு, ஸ்வாமி.

[காமன் கோப அறைக்குள் நுழைகிறான். அங்கே ரதி தலைவிரிகோலமாய்க் கிடக்கிறாள்]

காமன் :—ஆகா! அழகுக்கு எது தான் அழகாயிராது! அலங்கோலமும் இவளுக்கு அலங்காரம் போலும்! கோபமும் இவளுடைய காந்தியை அதிகப்படுத்துகிறது. ‘பிகு’ இல்லா இசைபோல், கலஹமில்லாக் காதலும் திகட்டிப் போம். என்ன கூந்தல்! நந்தனவன மயில்களிடம் கூட, இதுபோன்ற தோகைகள் இல்லை. இன்று இக்கூந்தலிலுள்ள அழகு என்னைத் தொட்டுத் தடவிக் கொடு என்றழைக்கிறதே! ஆனால் இவளை அண்டவும் சிறிது அச்சமாகத்தானிருக்கிறது. பார்க்கிறேன்.

[என்று நெருங்கி, ரதியின் கூந்தலைத் தடவிக் கொடுக்கிறான்]

ரதி :—[திடீரெனப் புரண்டு] ஹூம்! விலகி இருக்கலாம். உமக்குத் தெரிந்த சாடுகளைச் செலவழித்து விடவேண்டாம். என்னை ஸ்வஸ்தப் படுத்த மிகவும் லேசான மருந்தைத் தேடிவிட்டீர்களே!

காமன் :—ப்ரியே! நானென்ன, பாம்பா, தேளா? மேலே பட்டதும் இப்படித் துள்ளி விழுகிறாயே?

ரதி :—பாம்பும், தேளும் இப்படி உலகம் முழுவதையும் கடித்துக் கொட்டிக் கொன்று விடா.

காமன் :—என்ன இது? எதற்காக என்னிடம் இப்படித் திடீரென்று கடுங்கோபம் கொண்டிருக்கிறாய்? உன் மனது கோணாமல் நடந்து கொள்வதிலேயே ஜாக்கிரதையாக இருந்துவரும் நான் என்ன அபராதம் செய்து விட்டேன்?

ரதி :—இனி என்ன அபராதம் செய்வதற்காக இங்கு என்னை நாடி வந்திருக்கிறீர்கள் ?

காமன் :—நீ எனக்கு ஸஹதர்மசாரிணியல்லவா ?

ரதி :—ஆமாம். தர்மத்தில் உமக்கு ஒத்துழைப்பவள் தான். ஆனால் உம்முடன் ஒத்துழைக்க ஸந்தர்ப்பமே நேருவதில்லையே !

காமன் :—ஏன் ?

ரதி :—நீர் அதர்மத்திலேயே பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறீர்.

காமன் :—தர்மம், அதர்மம்—என்ன இது? எப்பொழுது இவைகளை யெல்லாம் கற்றாய்? இதெல்லாம் அதிகப்படிப்பம்மா! வேண்டாம்.

ரதி :—உமக்கேன் தர்மம் என்றும் அதர்மமென்றும் தெரியப்போகிறது. நீர் பிறந்ததும் செய்த லீலைகள் என்னவென்று ஞாபக மிருக்கிறதா? தன் பெண்ணும் சகோதரியுமான ஸந்த்யா தேவியிடமே பிரம்மதேவனுக்கும் இதர பிரஜாபதிகளுக்கும் மகரிஷிகளுக்கும் காமம் வரும்படி உம் பாணங்களைப் பொழிந்தீர். அருந்ததி தேவியாரிடமும் அப்படியே அவளுடைய கூடப்பிறந்தவருக்குக் காமம் வரும்படிச் செய்தீர். பிறந்ததுமே காமத்திற்கு ஆன்மாக்கள் இரையாகாமல், யௌவனமடைந்தே காம உணர்ச்சியை அவர் அடைய வேண்டுமென்று, தானே தவமிருந்து, அருந்ததிதேவி ஏற்படுத்தாவிட்டால், உலகையே நீர் அழித்திருப்பீர். இதெல்லாம் செய்த உமக்கு விச்வாமித்ரர் முதலிய முனிவர்களை மேனகை முதலிய அப்ஸரஸ்களுக்கு அடிமையாக்குவதும் நல்லொழுக்கங் கொண்ட பதிவிரதைகளின் நடத்தையைக் கெடுப்பதும், கதவை விழுங்குபவனுக்கு அப்பளம் போல்!

காமன் :—ஏது புராண இதிஹாஸங்களெல்லாம் நன்றாய்ப் படித்திருக்கிறாயே !

ரதி :—சீ! எனக்குக் காம தேவரின் பத்னீ என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாயிருக்கிறது. ஜனங்கள் உம்மை மன்மதன், கந்தர்பன், மதனன் என்று சொல்லும் போதெல்லாம் என்னுடல் எனக்குள்ளேயே சுருங்கிக் கொள்ளுகிறது.

காமன் :—என் பெயர் கூடவா உனக்காகவில்லை?

ரதி :—பெயர்களைப் பார் ! மன்மதன் என்றால் மனதைக்கடைந்து விடுபவன் என்று பொருள். கந்தர்பன், தர்ப்பகன் என்றால் கர்வத்தை விருத்திசெய்கிறவன் ; மதனன் என்றாலோ மதத்தையே உண்டு பண்ணுபவன். ஆகா ! உலகைக் கெடுக்கும் பெயர்களா ஒருவனுக்கு இருக்கவேண்டும் !

காமன் :—ரதி இது மிகவும் நன்றாயில்லை. தர்மபத்னியான நீ இப்படி என்னைத் தூற்றலாமா ?

ரதி :—தர்மபத்னி என்பதின் அர்த்தத்தை நன்குணர்ந்தவளாதலால்தான் இப்படித் தூற்றுகிறேன். கணவனானாலும் அவர் கர்வங்கொண்டு, காரியம் அகாரியமென்ற பகுத்தறிவற்று, வழிதவறி நடந்தால் அவரை மனைவி அடக்கத்தான் வேண்டும்.

காமன் :—என்ன சொன்னாய்? (கோபிக்கிறான்)

ரதி :—கோபம் கொண்டால் பயனில்லை. காமம் என்ற வெள்ளமானது, தர்மம் அர்த்தம் என்ற இரு கரைகளுக்குள்ளும் அடங்கி யோடவேண்டும்.

காமன்:—ரதி! நீயேன் என்னைக் கண்டிக்க வேண்டும்? ஜகத்தனைத்தையும் இன்புறச் செய்பவன் நான். என் அருளால் ஆனந்தத்தை அனைவரும் அடைகிறார்கள்.

ரதி :—உமக்கு அடிமைப்பட்டு உலகம் அனுபவிக்கும் வஸ்து ஆனந்தமல்ல ; ஆனந்தத்தின் தோற்றம். ரதியான நான் மனம் வைக்காத இடத்தில் உண்மையான ஆனந்தம் எப்படி உண்டாகும்? ரதியற்ற காமனான நீர் உலகத்திற்கு ஏற்பட்டிருக்கும் சித்தப்ரமையோ, வியாதியோ ; உம்மால் ஆக்ரமிக்கப்பட்ட ஜனங்கள் மரிக்கிறார்கள். ஜனங்களை மரிக்கச் செய்வதால்தான் உம்மை மாரன் மன்று சொல்லுகிறார்கள் போலும்.

[காமனின் தோழன் ருதுவேந்தன் வஸந்தன் வருகிறான்]

காமன் :—ஸகே, வஸந்தா! ஸரியான ஸமயத்தில் வந்தாய். இதல்லவோ தோழனின் லக்ஷணம். இப்பொழுது உன் உதவியையே சரணமடைந்திருக்கிறேன். திடீரென முரண்பட்டு, நம் தேவி, ரதி, பிசாசு பிடித்தவள்போல் சேஷ்டை செய்கிறாள். நாம் எண்ணியிருக்கும் விஜயத்திற்கு நமக்கு உதவி புரிந்து நம்முடன் வந்து ஒத்துழைக்க மாட்டாள் போலிருக்கிறது. இவளை, நல் வார்த்தை சொல்லி அழைத்து வரும் பாரத்தை உன் மேல் போட்டிருக்கிறேன். நான் போகிறேன்.

[காமன் போய் விடுகிறான்]

வஸந்தன் :—தேவி! காமனுக்குள்ள சக்தியெல்லாம் நீயே. நீ கூட வராமலிருந்தால் அவன் எப்படி வெற்றி பெறுவது?

ரதி —ஸகே! வஸந்தா! எங்கு கூட வருவது? என்ன விஜயம்?

வஸந்தன் :—பாவம், நீ இருக்கும் கோப நிலையைப் பார்த்து, வந்த காரியத்தைக்கூடச் சொல்லாமல் போய் விட்டான் போலிருக்கிறது காமதேவன்.

ரதி :—நீ தான் சொல்லிவிடேன்.

வஸந்தன் :—தேவி! ஒரு பெரிய காரியத்தை உன் பர்த்தா ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

ரதி :—சிறிதொன்றுமே அவர் ஏற்றுக் கொள்வதில்லையே.

வஸந்தன் :—ப்ரம்மசர்ய யோகத்துடன் கடுந்தவஞ் செய்யும் சிவபெருமானின் நிஷ்டையைக் கலைத்து—

ரதி :—என்ன? சிவபெருமானிடமா இவருடைய விஷமத்தைக் காண்பிக்க எண்ணங் கொண்டார் என் பர்த்தா?

வஸந்தன் :—ஆம். சிவனையும் பார்வதியின் அழகு வலையில் சிக்க வைத்து விடுகிறேனென்று நம்மரசனை தேவேந்திரனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார் உன் பர்த்தா.

ரதி :—இந்திரனுக்கு வாக்கைக் கொடுத்துவிடட்டும், சிவனுக்கு உயிரைக் கொடுத்துவிடட்டும்.

வஸந்தன் :—தேவி! அப்படி நீயொன்றும் அமங்களமாய்ப் பேசலாகாது. ஏதோ ஒப்புக்கொண்டு வந்து விட்டான். இனி ஒத்துழைத்து, வெற்றியுடன் அவன் திரும்புமாறு நீ உதவ வேண்டும்.

ரதி :—ஐயோ! நீயும் இப்படி என்னை வெட்கத்தைவிட்டு, பாவத்தில் உதவிசெய்ய வேண்டுமென்று வேண்டுகிறாய்!

வஸந்தன் :—இதென்ன தேவி! இது வரையிலும் கேளாத பாவம், புண்யம் என்ற வார்த்தைகளெல்லாம் காதில் விழுகின்றனவே!

ரதி :—ஆகா, காமனுக்குச் சரியான சகா தான் நீ; உனக்கு யார் தான் வஸந்தன் என்று பெயரிட்டனரோ?

வஸந்தன் :—ஏன்? என் பெயருக்கு என்ன?

ரதி :—எதை உயிராகக்கொண்டு வஸிக்கின்றனரோ பிரஜைகள், அதற்கு வஸந்தன் என்று பெயர். ஆனால் காலவுருவான நீ பிரஜைகளை அழிப்பதும் பொருந்தியதே.

வஸந்தன் :—ஸரி, ஸரி காமன் சொன்னபடி ஏதோ பித்தோ, பேயோ உன்னைப் பிடித்தாட்டுகிறது.

ரதி :—என்னைப் பேய் பிடிக்கவில்லை. தேவத்தன்மை யிழந்து நீயும் உன் ஸகாவான காமதேவரும் தான், ராக்ஷஸர்களாகிவிட்டீர்கள்.

வஸந்தன் :—தேவி! இதோ உன்னை நல் வார்த்தை சொல்லி அழைத்துவர நண்பன் காமதேவன் பூர்ணசந்திரனை அனுப்பி யிருக்கிறான்.

பூரணசந்திரன் :—[பிரவேசித்து] அம்மா! ஏன் இப்படி வக்ரமாய் நடந்து கொள்கிறாய்?

ரதி :—(சிரித்து) ஆகாகா! நானா வக்ரமாயிருக்கிறேன்? சந்திரனல்லவோ வக்ரமாயிருக்கிறான். தன் கண்ணில் காமாலை வந்தால் உலகே மஞ்சளாய்த் தோன்றும். பெரியவரே!

அத்ரி மகரிஷியினின்றும் உதித்து குருதல்ப கமனம் செய்து, ராஜயக்ஷ்மாவைப்பெற்ற மஹானுபாவர் நீர். போய் வாரும்.

[சந்திரன் வெட்கிப் போய் விடுகிறான். மலய மாருதன் வருகிறான்]

ரதி :—யாரிது, புதிதாக வந்திருப்பது? எது? காமதேவன் தோழர்களை பாணம் பாணமாய் என் மேலேயே போடுகிறார்!

மலய மாருதன் :—அம்மா, நான்தான் உன் பர்த்தாவின் உயிர், பிராண வாயுவான மலயமாருதம். என் வார்த்தைக்காவது நீ எழுந்திருக்கவேண்டும்.

ரதி :—வாயுவா? வாதமா? அது ஒரு நோயல்லவா? யாரடி அங்கே? தர்மமித்ரா, அர்த்தமித்ரா, மோக்ஷமித்ரா! தோழிகாள்! இவர்களை யெல்லாம் வெளியே போகச்சொல்லும். எனக்கு தலைவலி எடுக்கிறது.

வஸந்தன் :—ஓகோ! இது இக்கெட்ட தோழிகளின் கர்ண மந்திரத்தின் மூலம் வந்த புத்திக் கோளாறு ரதியை பாதிக்கிறது. இத் தோழிகள் வந்து விரட்டும் அவமானம் நமக்கேன்? நாமே போய் விடுவோம்.

[வஸந்தனும், மலய மாருதனும் போய் விடுகிறார்கள்]

[தோழிகள் மூவரும் ஓடி வருகின்றனர்]

தோழிகள் :—ஏனம்மா! எதற்கு அழைத்தாய்?

ரதி :—ஸகிகளே! இங்கு அரக்கர்கள் சிலர் வந்து துன்புறுத்தினர். அவர்களை விரட்டத்தான் உங்களைக் கூப்பிட்டேன். நல்லவேளையாய் அவர்களே விலகி விட்டனர். தோழிகாள்! நான் இதோ சிவபிரானைக் குறித்துத் தவ நிஷ்டையடையப் போகிறேன். நான் பின்தொடராத போதிலும் தான் படர்களுடனும், தோழர்களுடனும் போய், சிவனிடம் தன் சக்தியைக் காண்பிக்கப் போகிறார் என் பர்த்தா காமதேவர். சிவசந்நிதியை அவர் அடைவதற்கு முன் நான் நிஷ்டையில் சிவனைக் காண வேண்டும். நீங்கள் சிவ ஸம்பந்தமான கானத்தைச் செய்யுங்கள்.

[உதாத்தகுணம் நிரம்பிய விளம்ப கால வாத்தியம். பிறகு சிவஸ்துதியான விருத்தம் சாரீரத்தால் பாடப்படுகிறது.]

புலனுண்டோ வசஞ் செய்ய
பற்றுண்டோ பிரிந்திருக்க
நடுநிலை நழுவுமோ நீர்
நிட்டைதான் ஏன் கொண்டீர்
பார்க்கவோ பரஞ்சுடரை
பரஞ்சுடரும் நீரன்றோ
நித்தியமே நிச்சலமே
நிறைநிலையே நிம்மதியே.

[வாய்ப்பாட்டு ஆனபின் வாத்தியம் முன் போலவே; அதற்குப் பிறகு—]

தர்மமித்ரை:—தோழிகாள்! ஏதோ பெருஞ் சோதி யொன்று எழுகிறதே?

மோக்ஷமித்ரை:—நம் தோழி ரதியின் நிஷ்டையில் சிவன் தோன்றுவதினால் இருக்கலாம் இப் பெருஞ்சோதி.

அர்த்த:—ஸகிகாள், அதோ பாருங்கள். கண் திறக்காமலேயே ரதியின் தலை வணங்குகிறது. உண்மையாகவே அவளுக்கு சிவன் தோன்றியிருக்கிறார்.

தர்ம:—ஆமாம். ரதியின் உதடுகள் அசைகின்றன. சிவனைத் துதி செய்யப் போகிறாள் போலிருக்கிறது.

ரதி:—(பாடுகிறாள்) (விருத்தம்)

அறம் பொருள் வீடு மூன்றும்
அழியாமலவைகளுடன்
ஒற்றுமையே உயிராக
ஓங்கி வரும் நற்காமம்
அதுவே தம் உருவாக
அமைந்த பரப்ரம்மமே
அருள் தனைச் சுரக்கச்செய்
ஆன்மாவின் ஆன்மாவே!

சிவன்:—ரதி!

ரதி:—தோழிகாள் பரமேச்வரன் அசரீரியாய் அனுக்ரஹம் செய்கிறார்; கேளும்.

சிவன்:—ரதி! சிறிதேயானாலும் உன் தவத்தின் உண்மையும் வேகமும் என்னை என் தவத்திலிருந்து இங்கு இழுத்து விட்டது. தவறி நடக்கும் கணவனுக்காகத் தான் பிராயச்சித்தம் செய்து கொள்ளும் மஹா பதிவ்ரதை நீ! பரப்ரம்மம் என்று சொல்லப் படும் பேரின்பத்தின் அவதாரம் நீ!

ரதி:—ஸ்வாமி! உமக்கு என்னிடம் அருள வேண்டுமென்ற கருணையுண்டானால் எனக்கு ஒரு விடுதலை கொடுக்கவேண்டும்.

சிவன்:—குழந்தாய்! என்ன விடுதலை? எதிலிருந்து?

ரதி:—என் கணவனிடமிருந்து.

சிவன்:—அக்னி சாக்ஷியாய்க் கூடியதற்குப் பிரிவு ஏது?

ரதி:—அவர் செல்லும் வழி நான் நடக்க மாட்டேன்.

சிவன்:—நல்லது. கணவனை விடலாகாது. அவனுட் புகுந்து நல்வார்த்தைகள் சொல்லி, அவனைத் திருப்பவேண்டும். ஸத்யாக்ரஹம் பலிக்காமல் போகாது. கலப்புள்ளதென்று தங்கத்தை எறிந்து விடலாகாது; புடபாகம் செய்து தங்கத்தைச் சுத்தி செய்ய வேண்டும்.

ரதி:—தங்கம் சிறிதேனுமிருந்தால் பாகம் செய்து எடுக்கலாம்; முழுதும் கல்லும் கட்டியுமாயிருந்தால்?

சிவன்:—அப்படியல்ல. எப்படி நீ என்னுடைய பேரானந்தத்தின் வடிவோ, அது போலவே என் மனதினுள் முதன்முதலுதித்த ரேதஸ் இக்காமதேவன். காமன் தோன்றியே உலகைப் படைத்தேன். ஸருஷ்டிக்கே மூலம் அவன்தான். அவனைத் தீங்கினின்றும் திருப்பி, அவனை நல்லோனாய் ஆக்கவேண்டிய பொறுப்பு என்னையே பற்றுகிறது. அவன், பிரம்மதேவனைத் தன் மகளிடமே ஏவினதும், ரிஷிகளையும், பதிவ்ரதைகளையும் ஒழுக்கம் விட்டு நடக்கும்படி செய்ததும் ஒரு பெரிதல்ல. ஒருவன் எந்த பாவத்தில் இறங்கியிருக்கிறானோ, அதிலேயே அவனைக் கோடிவரையில் கொண்டு போய், அப்பாவத்தை ஒழிக்க வேண்டுமாதலால், பார்வதியின் நிமித்தமாய்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் காமன், என் மேலேயே தன் பாணத்தைப் போடப் போகிறான். மோஹத்தை மூலமாய்க் கொண்ட காமனை நான் எப்படி அங்கீகரிப்பது? சரீரத்தையே ஆதாரமாய்க் கொண்ட காமனை நான் அங்கீகரிக்கப் போவதில்லை. ஆத்மாவில் ஊன்றின காமனையே நான் ஏற்றுக்கொண்டு எனது கைங்கர்யத்தில் வைத்துக் கொள்ளப் போகிறேன். என் நெற்றிக் கண்ணில் அவனைப் புடபாகம் செய்து, மறுபடியும் உனக்குப் பதின் மடங்கு காந்தியுள்ள தங்கமாய் உன் கணவனை யளிக்கிறேன். உனக்கு அப்பொழுது தானாகவே அவனிடம் அன்பு பொங்கும். உமிருவருக்கும் அப்பொழுது அமைதி, திருப்தி என்று இரு குழந்தைகள் ஏற்படும்.

ரதி:—பகவான்! எல்லாம் தங்கள் அருள். நானும் காமதேவரின் புத்துயிரையும் புது அவதாரத்தையும் எதிர் பார்த்தவளாய்த் தவத்திலேயே இருக்கிறேன்.

சிவன்:—தவத்திலேயே இரு குழந்தாய்! தவமே பெரும் ஸாதனம். தவமே எல்லாவற்றையும் ஆக்குவது. தவமே உலகைத் தாங்குவது. தவமே அழகு. தவமே இன்பம். வேறு என்ன அருள வேண்டும் நான்?

பாட்டு

(விருத்தம்.)

அறிவிலையிலிடப்பட்டு
அறவே மலங்களற்று
நல்லொளி மேனி கொண்ட
நன்மையெலாம் பயக்க வல்ல
ப்ரம்மத்தின் உருவான
ப்ரேமையெனும் காமமே
ப்ரஜைகளே நம்முள்ளே
ப்ரதி பலித்து நிற்கட்டும்!

இதோ தீய காமன் இறந்தான். நான் போய் வருகிறேன்.

[சிவன் விலகி விடுகிறார்]

தர்மமித்ரை:—தேவி! எரிந்தான் காமன்.

அர்த்தமித்ரை:—தேவி! தோழிகாள்! காமன் எரிந்தானென்று நான் பாடப் போகிறேன்...

விலை மாதர்களில் வீடு கொண்ட
விதி விலக் கொன்றும் இல்லாத
காமன் இன்று எரிபட்டான்!
காமன் இன்றே எரிபட்டான்!

தர்:—தேவி! நான் காமன் எரிந்து போக வில்லை யென்று பாடப் போகிறேன்.........

மனைவியினிடமே மனைகொண்ட
மான மணத்தால் பரிமளிக்கும்
காமன் புத்துயிரின்றடைந்தான்!
காமன் புத்துயிரின்றடைந்தான்!

அர்த்த:—அன்னியர் அகத்தை ஆக்ரமிக்கும்
அரக்க சீலன் அறமொழிக்கும்
காமன் இன்று எரிபட்டான்!
காமன் இன்றே எரிபட்டான்!

தர்ம:—அன்னிய மாதை யன்னை யென்று
அடிபணியும் நற் குண சீலன்
காமன் புத்துயிரின்றடைந்தான்!
காமன் புத்துயிரின்றடைந்தான்!

அர்த்த:—பொருளை யொழித்துக்
குலத்தை யொழித்து
பொல்லாத் தீங்கினில் ஈடுபட்ட
காமன் இன்று எரிபட்டான்!
காமன் இன்றே எரிபட்டான்!

தர்ம:—அறமும் பொருளும் வீடும்
தானே
அருளும் நல்வழி நாடுபவன்
நல்லிசை, நற்கவி, நற்கலைகள்
நற்செயல் யாவுக்கும் வித்தாவான்;
இகமே பரமெனக் காண்பிக்கும்
இந்திர ஜாலக் கடவுள் தானே
காமன் புத்துயிர் இன்றடைந்தான்!
காமன் புத்துயிர் இன்றடைந்தான்!

(148-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு செழிப்பதற்காகக் கலைகள், தொழில்கள், ஊக்கம் முதலியவை வேண்டுமெனவும், ஆவி சோர்ந்த மக்கள் மேனிலையடைய அன்பு, பொறை, காதல், வீரம், அஞ்சாமை முதலிய குணங்கள் வேண்டுமெனவும், குறை யிரந்து சக்தி அன்னையின் அருளை வேண்டிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். தமது கற்பனைக் கும் எழுச்சிக்கும் ஆதரிசத்துக்கும் ஏற்ற விஷயங்களைக் கண்டு பிடித்து அவைகளை உல கம் போற்றற்குரிய பெருங் காப்பியங்களாகிய பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டுகளில் திறமையுடன் பாடி யிருக்கி றார். காதலையும் காதலின் சிறப்பையும் மேற் சொன்ன குயில் பாட்டிலும் இன்னும் பல பாட்டுக்களிலும் பாடியிருக்கிறார். அவரது கனவு விழியால் காணப்பட்ட கற்பனைகள், தென்னங்கீற்றுப் பந்தலில் தொங்கிக் காற்றில் ஊசலாடின சிறு கயிறுகள் முதற்கொண்டு ஊழிக்கூத்து வரையிலும் எல்லா விஷயங்களையும் தழுவி யிருக்கின்றன. மக்களின் உணர்ச்சிகளில் லட்சியமும் வீரா வேசமும் பொருந்திய நாட்டுப் பற்றையும் சுதந்திர உணர்ச்சியையும் பல பாடல்களில் உருக்கமாகப் பாடியிருக்கிறார். நமது பாரத நாட்டை பாரதியார் பாடியதைப்போல இது வரையில் எவரும் பாடியதில்லை. அவருக்கு பாரதநாடு என்றால் பராசக்தி, ஆரியர் தேவி, பலவேதம் வரைந்த கையையுடைய பாரத நாயகி. அவளை,

அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்
ஆணி முத்துப் போன்ற மணி மொழிகளாலே
பன்னி நீ வேதங்கள் உபநிடதங்கள்
பரவு புகழ் புராணங்கள், இதிஹாஸங்கள்
இன்னும் பன்னூல்களிலே யிசைத்த ஞானம்—
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை
யிந்நாள்?
மன்னுகின்ற பேரொளிகாண்! காலங் தோன்ற
விருந்து காண்! கடவுளுக்கோர் வெற்றி
காணே!

என்ற பொன்னுரைகளால் பாடி யிருக்கி றார். நாட்டில் ஒரு புதிய ஆதர்சமும் விடுதலை யியக்கமும் தோன்றியபோது தாமும் அவ் வியக்கத்தில் சேர்ந்து அன்னையின் அருள் பெற்றுத் தமது சிருஷ்டி வல்லமையை யெல் லாம் மக்களின் சுதந்திரப் போரிலும் புனர் ஜனனத்திலும் உபயோகித்தார். அது சம யம் அச்சமும், மடமையும், பொய்யும், வறு மையும், அடிமைத்தனமும் நாட்டில் மலிந் திருக்கக் கண்டு, 'நெஞ்சு பொறுக்குதிலையே'

யென மனங் கொதித்து, 'அச்சமில்லை', 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின் வேறொன்று கொள்வாரோ?' 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?' 'சொந்த நாட்டிற் பிறர்க் கடிமை செய்தே துஞ்சிடோம்—இனி-யஞ்சிடோம்' 'ஒன்றென்று கொட்டு முரசே' 'தாயின் மணிக்கொடி பாரீர்' 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்றும் பல வீராவேசப் பாட்டுக்களை அலைபோல் பொங்கும் உணர்ச்சியுடன் ஓங்கி உரைத்து உள்ளத்தில் மந்திரம் போல ஒலிக்கச் செய்து உறங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டி யெழுப்பி அவர்களுக்குப் புத்துயிரளித்தார். பாரதியார் மக்கள் அன்னியராட்சியிலிருந்து விடுதலையடைவதோடு திருப்தியடைய வில்லை. மக்களின் சமூக சமத்வத்தையும், பொருளாதார விடுதலையையும் பாடினர். 'பறையருக்கும் புலையருக்கும் விடுதலை.' 'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வமிந்நாட்டிலே' 'எல்லோரும் ஓர் குலம், எல்லாரும் இந்நாட்டு மன்னர்' 'மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்க மினியுண்டோ? தனியொருவனுக்குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்' என்பன போன்ற பல புரட்சி மயமான பாட்டுக்கள் மக்களின் பரிபூரண விடுதலையைப் பறையறைந்து அறிவுறுத்தின.

பாரதியார் நாட்டுத் தொண்டோடு தமிழ்த் தொண்டும் புரிந்தார். அவர்தான் முதன் முதலாக உயிரற்றுக்கிடந்த தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தது. 'யாமறிந்த மொழிதனிலே தமிழ் மொழி போல இனிதாவதெங்குங் காணோம்' எனத் தமிழ் மொழியையும் 'வேதம் நிறைந்த தமிழ்நாடு, வீரம் செறிந்த தமிழ்நாடு, கல்வி சிறந்த தமிழ்நாடு' எனப்பல வாறகத் தமிழ் நாட்டையும் சிறப்பித்துப் பாடி தமிழருள்ளத்தில் ஒரு புதிய உணர்ச்சிப் பிரவாகத்தைப் பாய்ச்சினர். தமிழில் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திர நூல்களை மொழி பெயர்த்துத் தமிழுக்கு ஆக்கம் தேட வேண்டுமென வலியுறுத்தினர். தமிழிற் பழமறைகள் பாட விரும்பி வேத ரிஷிகளின் கவிதைகளை வேதாந்தச் சுவை ததும்பும் 'வேள்விப் பாட்டு' முதலிய பாட்டுக்களில் அமைத்துப் பாடினர்.

பாரதியாரை ஒரு மகா கவியாக்குவதற்கு மேற்கூறிய பாடல்களே போதும். அவரது உணர்ச்சிப் பெருக்கும் அருள் வாக்கும் அவர் வாணியின் அருள் பெற்றவர் என்பதை நன்கு காட்டுகின்றன. ஆயினும் அவர் இம் மட்டோடு நின்று விடவில்லை. மக்களுக்கு நிரந்தரமான விடுதலையையும் இன்பத்தையு மளிக்க விரும்பினர். இதன் பொருட்டுத் தமது ஆன்ம அனுபவத்தையும் தீர்க்க தரிசனத்தையும் சக்திப் பாடல்களிலும் வேதாந்தப் பாடல்களிலும் மக்கள் பேசும் எளிய நடையில் விளக்கமாகப் பாடியிருக்கிறார்.

பாரதியார் சக்திதாஸர். அவருக்கு சக்தியே உயிர். இது அவர் அனுபவத்தில் கண்ட உண்மை. சக்தி உயிரின் எவ்விதச் சலனங்களிலு மிருக்கிறாள். 'ஞால முற்றுமே பராசக்தியின் மீதாற்றம்' பெண்மை சக்தியின் அம்சம். தமிழன்னையும் பாரதத்தாயும் பராசக்திதான். 'பாட்டினிலே சொல்லுவது மவள் சொல்லாகும்.' 'வாழ்வு பெருக்கும் மதியும், மானிலம் காக்கும் வலியும், உள்ளத்தில் ஒளிரும் விளக்கும்' எல்லாம் அவளே. நன்மை, தீமை, யெல்லாம் அவளது லீலைகளே. 'கொட்டியிடிக்கும் மேகமும்' 'கூவென்று விண்ணைக் குடையும் காற்றும்' 'சட்டச் சட சட்டச் சட டட்டா, என்று தாளங்கள் கொட்டிக் களை'க்கும் வானமும், 'எட்டுத் திசையு மிடிய' வரும் மழையும், நடுக் கடலில் புயற்காற்றடித்து கப்பல் பாறையில் மோதுவதும் பாலைவனத்தில் மணலெல்லாம் இடைவானத்திலே சுழன்று ஒட்டைகளின் மீதேறிச் செல்லும் வியாபாரக் கூட்டம் முழுதும் மணலிலே அழிந்து போவதும், இன்னும் பல வழிகளில் ஏற்படும் அழிவும், உயிர்ச் சேதமும், இவை யெல்லாம் அவளது செய்கை. சர்வமும் சக்திமயம். வாழ்வெல்லாமே சக்தியின் ஆராதனை. அவளை நம்பி மன மெய் மொழிகளை அவளுக்கே உடைமையாக்கி ஆன்ம சமர்ப்பணம் செய்வோர் நிலமிசை நீடூழிவாழ்வர்; அச்சந்தவிர்த்து உறுதி பெறுவார்; துயரம் போய்க் களிப்புறுவர்; அவர்களது குனிந்த தலை நிமிரும்; சோர்ந்த விழிகளில் ஒளி திகழும்; கலங்கிய நெஞ்சில்

தெளிவுண்டாம்; இருண்ட மதி ஒளிரும். பாரதியாரின் சக்திப் பாடல்களெல்லாம் இவ்வுண்மைகளையே பறையறைகின்றன.

வேதாந்தத்தின் சாரத்தைப் பிழிந்தெடுத்த அவரது வேதாந்தப் பாடல்களெல்லாம் 'ஒன்றே பரம்பொருள், நாமதன் மக்கள்' என்றும் 'அவ்வொன்றே பரமன், கண்ணன், முருகன், விநாயகன், மகாசக்தி, அல்லா, ஏசு என்றும், அவன் மீது பக்தி செலுத்தி அவன் தாளடைந்தால் 'இத்தரையின் மீதே' இந்த நாளில், இப்பொழுதே, ஜீவன் முக்தனுகி அமரனுக வாழலாமென முழங்குகின்றன. உள்ளதெல்லாம் ஒருயிர் என்று தேர்ந்தபின் உள்ளங் குலேவதேது? சுத்த அத்வைத அறிவு நிலேயிற் களிப்பவருக்கு துயரம், அச்சம், மிடிமை, நோய், மரணம் முதலியவை ஏது? இப் பெரு நிலேயைக் கண்ட பாரதியார் 'காலா, உனே நான் சிறுபுல்லென மதிக்கிறேன்' என்றன் காலருகே வாடா! சற்றே உன்னே மிதிக்கிறேன், என்று பாடவில்லேயா?

இவ்வுலகை மகிழ்வுடனே நோக்கி இவ்வாழ்க்கையில் இனிமை கண்ட பாரதியார் மக்கள் வாழ்க்கையின் இனிமையைக் காணுது அல்லற்படுவதின் ரகசியத்தைக் கண்டார். 'ஒளியும் இருளும்' என்னும் பாட்டிலும், 'ஜகத் சித்திரம்' 'விடுதலே' என்னும் வசன காவியங்களிலும், வானமெங்கும், மலே, கடல், தரை, செடி, கானகம், முதலிய பல விடங்களிலும் பரிதியின் சோதி கிசு, கிசு, கிசு, கீச் என்னும் பல்லாயிர வகையில் இசைக்கும் பல ஜாதி புட்களுக்குள் சந்தோஷமும் ஜீவ ஆதாரமும் ஆட்ட ஓட்டமும் இனிய குரலு மிருக்க, இத்தனே இன்பத்தினிடையே "தேர்ச்சி கொண்டு பல சாத்திரங் கற்று தெவிட்டொணு நல்லின்பக் கருவாம் வேர்ச்சுடர் பரமாண்பொருள் கேட்கும்" மானவன் உள்ளத்தில் மட்டும் மெலிவு மேவி இருள் நிற்பதென்னே, என்னும் கேள்வி பிறக்கிறது. அதற்குக், காலனுக்குத் தூதனுகிய மனக்குறையே, மனப் பகையே, காரணமென்றும், அதைத் தவிர்த்து, மனதில் மகிழ்ச்சி கொண்டு, காதல் செய்து, 'உயிர்க்கெல்லாம் உணர்வை அறிவிலே கண்டு போற்றி நெறியினில் அவன் பணி நேர்படச் செய்வதே' விடுதலேக்கு வழி யென்னும் பதிலும் கூடவே வருகின்றது.

பல ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் கவலேக் குழியில் விழுந்து அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்டு ஊக்கமும் உள் வலியு மின்றி பஞ்சத்தும் நோய்களிலும் புழுக்கள் போல் துஞ்சத்தம் கண்ணுல் கண்டும் சோம்பிக் கிடந்தும், சிறுமைகளேப் பெருக்கியும் சிறு வாழ்வு வாழ்ந்து வந்தனர். அறம் நொய்ந்தது; மறம் வலிந்தது; இன்பம் சோர்ந்தது'; 'பொய்நூல் பெருகின. பூமியின் கண்ணே வேதங் கெட்டு வெறுங்கதை மலிந்தது. போதச் சுடரைப் புகையிருள் சூழ்ந்தது.' ஏழைத் தமிழர் 'கங்கை நீர் வேண்டிக் கானல் நீர் கண்டார், அமுதம் வேண்டி விடத்தினேயுண்டார்.' தமிழ்த் தாய் பள்ளியெழுந்தருளி திருவுளமிரங்கி மக்களது தளேகளெல்லாம் சிதறும் பொருட்டு பாரதியை அனுப்பினுள். பாரதியார் தமது கவிதையினுல் தமிழ் மக்களுக்கு ஒரு புதிய ஆதர்சத்தைத் தந்து வீரம், அறிவு, ஆண்மை நித்யவாழ்வு இவைகளே யளித்தார். மக்கள் புதிதாகப் பிறந்து வானெளி மண்ணிலிருப்பதைக் கண்டனர். சக்தி பதமே சரணென்று புகுந்தனர். மயக்கம் தெளிந்து அமரப் பொறி பூணும் வழியைக் கண்டனர்.

இவ்வண்ணம் பாரதியார் உயரிய உணர்வு நிலேகளே யெய்தி அன்னேயின் வரப் பிரசாதம் பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களேயும் பாடி மக்களுக்கு வாழும் வகையைக் காட்டினுர். இதுவே அவர் எடுத்துக் கொண்ட ஜீவிய வேலே. இதைச் செவ்வனே முடித்ததில் தான் அவரது பெருமையிருக்கிறது. இத்தரணியில் தமிழ் மொழியுள்ளவரைக்கும் அவரது தீஞ்சுவைச் சொற்கள் மந்திரம்போன்று ஒவ்வொரு தமிழனது உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருக்குமென்பதில் ஐயமில்லே.



மொழி பெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்.

(டாக்டர். வே. ராகவன், M.A., Ph. D.,)

முன் நான் ஆகாயத்தில் உலவும் வித்யா தரனாக இருந்தேன். ஹிமவானின் சிகரங்களுள் ஒன்றின் வழியாய் ஒரு ஸமயம் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது கீழே கௌரியுடன் விளையாடிக் கொண்டிருந்த சிவன், அவரை நான் தாண்டினதால் கோபித்து, மானிடப் பிறப்பில் விழு என்று என்னைச் சபித்தார். வித்தியாதர ஸ்த்ரீ யொருவளை மணந்து, உன் மகனை உன் ஸ்தானத்தில் வைத்துவிட்டு, பிறகு மீண்டும் வித்யாதரப் பிறவியை பூர்வ ஜன்ம நினைவுடன் கூடியவனாய் நீ அடைவாய் என்றும் சொன்னார். இப்படி சாபத்தின் முடிவையும் குறிப்பிட்டுவிட்டு, சிவன் மறைந்ததும், அதிக காலமாகாமலேயே நான் பூவுலகில் வணிகரின் குலத்தில் பிறந்தேன். வலபீ யென்ற நகரில், பெருஞ் செல்வம் படைத்த வணிகன் ஒருவனின் மகனாய், வஸு தத்தன் என்ற பெயருடன் நான் வளர்ந்து வந்தேன். காலக்ரமத்தில் நான் யௌவனத்தை யடைந்ததும், வேண்டிய பொருள், பண்டம், ஆட்கள் இவைகளுடன், தந்தையின் உத்தரவுப்படி, தேசாந்தரத்தில் வியாபாரஞ் செய்யப் போனேன். அப்படிப் போய்க் கொண்டிருக்கும் என்னை வழியில் காட்டில் (வேடுவத்) திருடர்கள் தாக்கி, என் பொருள்களை அபஹரித்துக்கொண்டு, என்னைக்கட்டி, தங்கள் பள்ளியில் சண்டிகையின் கோயிலுக்குக் கொண்டு போனார்கள். அங்கு பயங்கரமாயும் நீண்டும் ஆடிக்கொண்டிருந்த சிவப்புக்கொடி, ஜீவன்களின் உயிரை விழுங்கும் யமனுடைய நாவோ என்று தோன்றிற்று. அங்கு தேவியைப் பூஜை செய்துகொண்டிருக்கும் தம் யஜமானனான புளிந்தகன் என்றவனுடைய அருகில் என்னை பலிக்காகக் கொண்டு போனார்கள். காட்டாளாயிருந்தும் அவன் என்னைப்பார்த்ததுமே இளகிய ஹ்ருதயமுள்ளவனான். காரணமில்லாமல் அன்பு கொள்ளும் மனது ஜன்மாந்தரத்திலிருந்த நட்பைத் தெருவிக்கிறது. பிறகு அந்த வேடுவத் தலைவன் என்னைக் கொலையிலிருந்து விடுவித்துத் தன்னையே பலியிட்டுப் பூஜையை முடித்துக்கொள்ள ஆசைப்பட்டான். "அப்படிச் செய்யாதே, இதோ நான் உனக்கு அருள் செய்பவளாய் நிற்கிறேன்; வேண்டு

மென்பதைக்கேள்" என்று திவ்ய வாக்கு சொல்ல, வேடுவன் ஆனந்தமடைந்தவனாய்ச் சொன்னான்: "தேவி, நீ பிரஸன்னமானாய்; வேறென்ன வரம் வேண்டும்; இருந்தாலும், இவ்வொன்றைக் கேட்டுக்கொள்ளுகிறேன்; மறு பிறப்பிலும் இவ்வணிகனுடைய நட்பு எனக்கு இருக்கட்டும்." "அப்படியே இருக்கட்டும்" என்று திவ்ய வாக்கு சொல்லி முடித்ததும், வேடுவன் அருமையான பொருள்களை அளித்து, என்னை என் வீட்டிற்கு அனுப்பினான். பிரயாணத்திலிருந்தும், மிருத்யுவின் வாயிலிருந்தும் நான் திரும்பிவந்ததும், நடந்ததையறிந்த என்பிதா என்னைக்குறித்துப் பெரிய விழாவைக் கொண்டாடினார்.

சிறிதுகாலம் கழிந்ததும், வலபீ நகரிலேயே, வர்த்தகர்களைக் கொள்ளையிட்டதற்காகப் பிடிக்கப்பட்டு, நகருக்குக் கொண்டுவரப்பட்ட அந்த வேடுவத் தலைவரையே நான் மறுபடியும் கண்டேன். அச்சமயம் தகப்பனிடம் தெருவித்து, அரசனிடமும் சொல்லி, லக்ஷம் பொன்கள் கொடுத்துக் கொலைதண்டனையிலிருந்து நான் அந்த வேடத்தலைவனை விடுவித்தேன். எனக்கவன் பிராணதானம் செய்த உதவிக்கு பதிலுதவி செய்துவிட்டு, அன்புடன் என் வீட்டிற்கு அவனை அழைத்துவந்து, அங்கேயே வெகுகாலம் தங்கவைத்துப் பெருமைப்படுத்தினேன். கௌரவப்படுத்தப்பட்டு, விடைகொடுக்கப்பெற்ற அவ்வேடவேந்தன், அன்பினால் அழகு பொருந்தியிருக்கும் தன் ஹிருதயத்தை என்னிடம் வைத்துவிட்டுத் தனது பள்ளிக்குப் போனான். போய்ச்சேர்ந்து எனக்குப் பதிலுதவிசெய்ய யோஜித்தவன், தன் கையிலுள்ள முத்து, கஸ்தூரி முதலிய காணிக்கைகளை மிகவும் அற்பமாகக் கருதி, எனக்கென்று அதிசயமான ஒரு முத்துமாலையை ஸம்பாதித்துக் கொடுக்க வேண்டுமென்று வில்லொன்றையே துணையாய்க் கொண்டு, யானைகளைக் கொல்ல, ஹிமவத் கிரியையடைந்தான். அம்மலையில் அலைந்துகொண்டிருந்த அவன் கரையில் கோயிலோடு கூடிய ஒரு பெரிய ஏரியை யடைந்தான். சூரியனிடம் அன்பு பாராட்டும் அவ்வேரியின் தாமரைகள், நண்பனிடம் அன்பு பாராட்டும் தன்னையே ஒத்திருந்தனவாதலால், அத்தாமரைகளால் மிகவும் இன்புற்றான் அவ்வேட வேந்தன். அவ்வேரியில் காட்டுயானைகள் நீர்பருக வருமென்று எதிர்பார்த்துத் தனியிடத்தில் வில்லுடன் கொல்லுவதற்காக மறைந்து நின்றான். அப்பொழுது அவ்வேரிக்கரையிலுள்ள சிவனைப் பூஜைசெய்வதற்காக, ஒரு சிங்கத்தின் மேல் ஏறிவந்த ஆச்சர்யமான உருக்கொண்ட கன்னிகை யொருவளைக் கண்டான். கன்னிகைப் பருவத்தில் சிவ பூஜையிலீடுபட்ட அவளை, பனி மலையின் பெண்ணான மற்றொரு பார்வதியோ இவள் என்று (வியந்து) பார்த்தான். வியப்படைந்த வேடமன்னன் யோஜித்தான்: "இவள் யாருடைய மகளாய் இருக்கக்கூடும்? மானிட மாதாயிருந்தால் சிங்கத்தை எப்படி வாஹனமாய்ப் பெற்றாள்? தேவஸ்த்ரீயாயிருந்தால் என் போன்றவர்களால் பார்க்கக் கூடியவளாய் எப்படியானாள்? நிச்சயம் இவள் என் இரு கண்களும் முன் செய்த புண்யங்களின் பயனே எடுத்த உரு. இவளை என் நண்பனுடன் சேர்த்து வைப்பேனாகில், அவனுக்கு நான் சொல்லமுடியாத ஓர் அருமையான பிரதியுபகாரத்தை செய்தவனாவேன். இவளை நெருங்கி, வரலாற்றைத் தெரிந்து கொள்ளுகிறேன்," என்று யோஜித்து, என் நண்பன் வேடன் அக்கன்னிகையிடம் சென்றான். அவன் வரும்ஸமயம் அவளும் நிழலில் தங்கிய சிங்கத்திலிருந்து இறங்கி, ஏரிக்குப்போய்த் தாமரைகளைப் பறிக்க ஆரம்பித்தாள். அதுவரையில் அதுபோல் காணப்படாதபடி, தன்னருகில்வந்து தன்னை வணங்கி நிற்கும் வேடனைப் பார்த்து, அதிதி வந்த ஸந்தோஷத்தால் அவனை நல்வரவு சொல்லி இன்புற வைத்தாள். "நீயார்? வரவே முடியாத இவ்விடத்திற்கு ஏன் வந்தாய்?" என்று கேட்ட அவளுக்கு வேடுவன் பதிலளித்தான்: "யான் பார்வதியின் அடியையே சரணமாய்க் கருதிய வேடத் தலைவன். யானைகளின் முத்துகளுக்காக இக்காட்டிற்கு வந்தேன். உன்னைக் கண்டதும், தேவி, எனக்கு உயிர்ப்பிச்சையளித்த என் நண்பன், பெரிய வணிககுமாரன், அழகும் செல்வமும் பொருந்திய வஸுதத்தன் நினைவுக்கு வந்தான். ஸுந்தரி! உன்னைப்போல் அவனும் அழகாலும் யௌவனத்தாலும், நிகரற்றவனாய் உலகத்தோரின் கண்களுக்கு அமுத வீழ்ச்சியாய் இருப்பவன். நட்பு, கொடை, தயை,

உறுதி இவற்றிற்குப் பொக்கிஷமாயிருக்கும் அவனால் இவ்வுலகில் எந்தப் பெண்ணின் கங்கணம் கட்டிய பாணி ரக்ஷிக்கப்படுகிறதோ, அப்பெண்ணே அதிர்ஷ்டசாலி. ஆகையால் இந்த உன் ரூபம் அவனுடைய அழகுடன் கூடாவிடில் மன்மதன் வில்லை வீணாகவே வஹிக்கிறான் என்று நான் வருந்துவேன்.'' இப்படியாக வேடத் தலைவனுடைய மொழிகளால், மோஹத்தை யுண்டுபண்ணும் காம மந்திரங்களால் போல், உடனே அபஹரிக்கப் பட்டுப்போன மனதுள்ளவளானாள் அந்தக் கன்னிகை. வேடனைப்பார்த்துக் காமனால் தூண்டப்பட்டவளாய்ச் சொன்னாள்: "எங்கே அந்த உன் நண்பன்; கொண்டுவந்து எனக்குக் காண்பி.''

அதைக் கேட்டு, ஆகட்டும் என்று சொல்லி, அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, அக்கணமே காரியம் கைகூடினதாய் எண்ணி ஆனந்தப்பட்டுக் கொண்டு வேடன் அவ்விடம் விட்டுக் கிளம்பினான். தன் பள்ளியை யடைந்து முத்து கஸ்தூரி முதலிய பல காணிக்கைகளை ஏராளமாய் எடுத்துக்கொண்டு எங்கள் இருப்பிடத்திற்கு வந்தான். என் தகப்பனிடம் காணிக்கையைக் கொடுத்தான். ஏதோ உற்ஸவமொன்றைக் குறித்து என் தகப்பன் அன்று பகலில் வெளியே போனதும், அன்றிரவு தனிமையில், தான் கன்னிகை யொருவளைக் கண்ட வரலாற்றை அடியிலிருந்து என்னிடம் சொன்னான். 'வா அங்கேயே போவோம்' என்று ஏங்கிக் கொண்டிருக்கும் என்னை தன்னிஷ்டப்படி இழுத்துக்கொண்டு அவ் வேடுவத் தலைவன் சென்றான். காலையில் திரும்பிவந்த என் பிதா வேட வேந்தனுடன் நான் போயிருப்பதைக் கேட்டு, வேடனிடமிருந்த அன்பினாலும் நம்பிக்கையாலும் கவலையற்றிருந்தார். வேடத் தலைவன் வெகு வேகமாகவே என்னை ஹிமய மலைக்குக் கொண்டு போனான். வழியில் வேண்டுமென்ற ஸௌகர்யங்களையும் வேடனே ஏற்படுத்தினான். அன்று மாலையில் ஏரியை யடைந்து, ஸ்னானம் செய்து, ருசியான பழங்களை ஆகாரம் செய்து, நாங்களிருவரும் அன்றிரவை அக்காட்டில் கழித்தோம். அவ்வேரியின் நீரையே பருகினோம். கொடிகளால் வாரி யிறைக்கப்பட்ட புஷ்பங்களுடன் வண்டுகளின் இசையால் அழகுபட்டு, நல்ல காற்று வீச, மலைப் பச்சிலைகள் தீபங்கள் போல் ஒளிக்க, மனத்தைக் கவர்ந்த அந்த மலைப்புறத்துக்காடு ரதியினுடைய வீடுபோலவே அன்றிரவு எங்களுக்கு மனோ விச்ராந்தியைக் கொடுத்தது. மறுநாள் அவள் வரக்கூடிய வழியே ஓடிக்கொண்டும் ஒவ்வொரு அடியிலும் ஏக்கத்தை யடைந்ததுமான என் மனதால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டவள் போலும், அவளைக் காணவேண்டுமென்ற ஆவலால் போல் துடிக்கும் வலக்கண்ணால் ஸூசிப்பிக்கப்பட்ட வாவோடு கூடியவளாய், அந்த கன்னிகை அவ்விடம் வந்தாள். சரத்காலத்தின் வெள்ளை மேகத்தின் மடியில் கிடக்கும் சந்திரகலை போல், சடை பெருத்த சிங்கத்தின் மேல் வீற்றிருந்த அப்பெண்ணை நான் கண்டேன். வியப்புடனும், ஏக்கத்துடனும், பயத்துடனும் நான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அச்சமயம் என் ஹிருதயம் எப்படி இருந்ததென்றே எனக்கு உணர்ச்சியில்லை. பிறகு, சிங்கத்திலிருந்து இறங்கி, ஏரியில் நீராடி விட்டு, மலர்களைப் பறித்துக், கரையிலுள்ள சிவனைப் பூஜை செய்தாள். பூஜை முடிந்ததும், என் நண்பன் வேடன், அவளை பணிந்து வணங்கித் தன்னைத் தெரிவித்துக் கொண்டு, அவனுக்கு ஆதரவைக் காட்டின அந்தக் கன்னிகையிடம் சொன்னான்: 'தேவி, உனக்குத் தக்க கணவனான அந்த என் நண்பனை அழைத்து வந்திருக்கிறேன். பார்க்கலாம் என்று நினைத்தால், இதோ இப்பொழுது உனக்கு அவனைக் காட்டுகிறேன்' என்று. 'காண்பி' என்று அக்கன்னிகை சொன்னதும், வேடன் என்னை அவளிடம் அழைத்துக் கொண்டுபோய்க் காண்பித்தான். காதல் கசியும் கடைக்கண்ணால் என்னைப்பார்த்து, காமவேகத்திற்கு அடிமையாகி, அவள் வேடவரசனைப் பார்த்துச் சொன்னாள்: "உன் நண்பனான இவன் மானிடனல்ல; என்னை ஏமாற்ற வந்திருக்கும் ஏதோவொரு தேவனே இவன். மானிடனுக்கு ஏது இவ்வுரு?'' அதைக் கேட்டு அவளை நம்பச் செய்வதற்காக நானே சொன்னேன்: "கட்டழகி! உண்மையில் நான் மானிடனே; நேராய்ப் பழகுமிடத்தில் போலியெதற்கு? வலபீ யென்ற நகரிலுள்ள மஹாதனன் என்ற வணிகன் ஈச்வரனின் அருளால் பெற்ற குமாரன் நான். என் தந்தை

பிள்ளை வேண்டுமென்று சந்திரசேகரனைக் குறித்துத் தவமிருக்கையில், திருப்தியடைந்த கடவுள், ஸ்வப்னத்தில் கட்டளை யிட்டார்: 'எழுந்திரு, உனக்கு மஹாத்மாவான பிள்ளை யொருவன் பிறப்பான்; இது மிகவும் ரஹஸ்யமானது; உன்னிடம் விரிவாகக் கூறலாகாது' என்று. இதைக்கேட்டு எழுந்த என் தந்தைக்குக் கொஞ்சகாலமானதும் வஸுத்தத்தன் என்ற நான் பிள்ளையாய்ப் பிறந்தேன். இந்த வேடவேந்தன் தானுய் என்னை வரித்த என் நண்பன்; முன் தேசாந்தரத்தில் நான் அடைந்த ஆபத்தில் எனக்கு அகப்பட்ட ஓரே பந்து. இது என்னைப்பற்றிய உண்மையின் சுருக்கம்" என்று சொல்லி நான் முடித்துக் கொண்டதும், நாணத்தால் குனிந்த முகத்தோடு, அக்கன்னிகை பேசினுள்: "எனக்கும் இப்படி ஒரு நிகழ்ச்சி நேர்ந்ததை நான் அறிவேன்; நானும் சிவனைப் பூஜை செய்து வரும்போது ஸ்வப்னத்தில் தோன்றி, நானும் கணவனை அடைவேன் என்று திருப்தியுடன் சிவன் ஆஜ்ஞாபித்தார். ஆகையால் நீயே எனக்குப் பதி; உன் நண்பனுன இவ்வேடனே என் ஸஹோதரன்," என்று தன் சொல்லமுதால் என்னைக் களிக்கச் செய்தாள். பிறகு அவளுடன் யோஜனை செய்து, விதிப்படி விவாஹம் நடத்துவதற்காகத் தோழனுடன் என் இருப்பிடத்திற்குப் போக நிச்சயம் செய்தேன். அதன் மேல் தன் வாஹனமான சிங்கத்தை ஸம்ஞையால் கூப்பிட்டு அதன்மேல் 'ஏறு' என்று அக் கட்டழகி என்னிடம் சொன்னுள். வேடுவன் பின் தொடர, நான் சிங்கத்தின்மேல் ஏறி என் மடியில் காதலியையும் வீற்றிருக்கச் செய்தேன். பிறகு வேடன் முன் செல்ல, கார்யம் கைகூடியவனுய், காதலியுடன் சிங்கத்தின்மேல் ஏறி வீட்டைக் குறித்துக் கிளம்பினேன். வழியில் வேடனின் அம்புகளால் பிளக்கப்பட்ட மான்களின் மாம்ஸத்தை ஆகாரமாய்க் கொண்டுக் கிரமமாய், வலபீ நகரம் வந்து சேர்ந்தோம். பிரியையுடன் சிங்கத்தில் ஏறி வந்திருக்கும் என்னைப் பார்த்து வியந்த ஜனங்கள் என் தந்தையிடம் தெரிவித்தனர். தந்தையும் எதிர்கொண்டு அழைக்க வர, நான் இறங்கி அவரை வணங்கினேன். வியந்தவராய் அவரும் என்னைக்கண்டு களித்தார். ஒப்பில்லா அக்கன்னிகையும் அவரடிகளில் வணங்க, அவளை எனக்கு ஒத்த மனைவி தான் என்று எண்ணி என் தந்தை தனக்குள் அடங்கா ஆனந்தத்தை யடைந்தார். வீட்டிற்குள் எங்களைப் பிரவேசம் செய்வித்து, நடந்த வரலாற்றை விசாரித்து விட்டு, வேடவேந்தனின் நட்பைப் புகழ்ந்து, மணவிழாவை நடத்தினுர். ஜ்யோதிஷிகர்களின் கட்டளைப்படி மறுநாள் பல பந்துக்களோடு கூடிய நான், அம் மேன்மை கொண்ட கன்னிகையை மணந்தேன். அம்மணத்தைப் பார்த்துக்கொண்டிருந்த என் மனைவியின் வாஹனமான சிங்கம் திடீரென, எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, புருஷ வடிவை யடைந்தது. 'இதென்ன' என்று அங்கிருக்கும் அனைவரும் மயங்கிநிற்கும் போது, அப்புருஷ சிங்கம் திவ்யமான உடையையும் நகைகளையும் உள்ளவனுய் என்னைக் குறித்து, வணங்கிப் பேசலானுன்: "நான் சித்ராங்கதன் என்ற வித்யாதரன்; இவள் என் பெண் மனேவதீ; எனக்கு உயிரினும் பிரியமானவள். இவளை என் மடிமேற் கொண்டு எப்பொழுதும் காடுகளில் அலைந்து கொண்டிருக்கும் நான் ஒரு ஸமயம் கரையில் கணக்கில்லாத் தபோவனங்களோடு கூடிய கங்கையை யடைந்தேன். தவவனத்திலுள்ள தபஸ்விகளைத் தாண்டக் கூடாதென்ற ஐயத்தால் கங்கையின் நடுவே நான் ஆகாயத்தில் போய்க்கொண்டிருந்தபோது, தெய்வவசத்தால் என் பூமாலை தண்ணீரில் விழுந்தது. அச்சமயம் அவ்விடமே நீரினுள்ளிருந்த நாரதன் எழுந்து, தன் முதுகின்மேல் மாலை விழுந்த கோபத்தில், என்னைச் சபித்தார்: 'இத்தடித்தனத்தால் பாபியான நீ சிங்கமாய்ப் போவாய்; ஹிமாலயத்திலேயே இருந்து, இப்பெண்ணையும் முதுகின்மேல் வஹித்துக் கொண்டிருப்பாய். எப்பொழுது உன் பெண் ஒரு மானிடனுடன் மணமடைகிருளே அப்பொழுது, அம் மணத்தைக் கண்டதும் நீ இச் சாபத்திலிருந்து விடுபடுவாய்' என்று. இப்படி முனிவரால் சபிக்கப்பட்டு, நான் சிங்கமாகி, ஹிமயமலையில், சிவபூஜையில் ஈடுபட்ட என் மகளை வஹித்து வந்தேன். பிறகு இந்த வேடத்தலைவனின் முயற்சியால் எப்படி எல்லாம் கல்யாணமாய் முடிந்தனவோ, அவை உமக்குத் தெரிந்ததுதான். ஆகையால் நான்

போய்வருகிறேன்; உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும்; என் சாபம் தீர்ந்தது'' என்று சொல்லிவிட்டு அந்த வித்யாதரன் உடனே ஆகாயத்திலேறினான். அதற்குமேல், மிகவும் வியப்பையடைந்தவனாய், தன் உற்றார் உறவினர் களித்திருக்க, நல்ல ஸம்பந்தம் ஏற்பட்டதால் ஸந்தோஷமடைந்த என் தகப்பன் மணவிழாவை நடத்தி முடித்தான்· நண்பர்களுக்கு உயிரைக் கொடுத்துதவியும் திருப்தி கொள்ளாதவரான, நிர்வியாஜ நண்பரின் நடத்தை எவ்வாறாயிருக்கும் என்று யோஜிக்க முடியும்? இப்படி அக்கல்யாணத்தில், அந்த வேடவேந்தனின் உதாரமான செய்கையை நினைத்து, யார் தான் உள்ளம் களித்தவராய்ச் செல்லவில்லை? அங்கு விவாஹத்திற்கு வந்திருந்த அரசனும் நன்மதிகொண்ட அவ்வேடத் தலைவன் எம்மிடம் வைத்த அப்படிப்பட்டப் பெருநட்பினால் திருப்தியடைந்தான். என் தந்தைதானும் அவ்வேடனுக்கு இரத்தினப் பரிசுகளையளித்து, உடனேயே அரசனையும் அவனுக்குக் காட்டு ராஜ்யம் முழுவதையும் கொடுக்கும்படி செய்தார்.

பிறகு, காரியங்கள் கைகூடியவனாய் அவ்வலபீ நகரிலேயே, மனைவி மனோவதியுடனும் நண்பன் வேட வேந்தனோடும் சுகமாயிருந்தேன். தன் காட்டுதேசத்தில் வஸிக்கும் ருசி தளர்ந்துபோய், அவ்வேடவரசன், பெரும்பாலும் எங்களகத்திலேயே வஸித்து வந்தான். ஒருவருக் கொருவர் செய்துகொள்ளும் உதவியில் ஒருபோதும் திருப்தியே யடையாத எங்களிருவருக்கும் காலம் இப்படியாகக் கழிந்து வந்தது. குலத்தோரின் உள்ளக் களிப்பே வெளி வந்ததோ வென, சிறிது காலத்திற்குள், மனோவதியிடம் எனக்குப் பிள்ளையொன்று தோன்றிற்று. ஹிரண்யதத்தன் என்ற அப்பிள்ளை வளர்ந்து, காலக்ரமத்தில் கல்விகளைக் கற்று, முறைப்படி மணமும் செய்து கொண்டான். பேரன் மணந்ததைக்கண்டு, தம் வாழ்க்கையின் பயன் நிறைவேறிற்றென்று நினைத்து, வயதான என் தந்தை, என் தாயுடன், உடலைத் துறக்க கங்கைக்குச் சென்றார். அதன் மேல் தந்தையை விட்டுப் பிரிந்து வருந்திய நான், உறவினரால் எப்படியோ தேற்றப்பட்டு, இல்லற பாரத்தைக் கொடுக்கப்பட்டவனாய், அந்த பாரத்தைத் தாங்க ஒப்புக்கொண்டேன். ஒரு புறம் மனோவதியின் அழகிய முகத்தின் தரிசனம், மற்றொருபுறம் வேடத் தலைவனின் சேர்க்கை-இவ்விரண்டும் எனக்கு இன்பமான பொழுதுபோக்காயிருந்தன. நற்பிள்ளையினாலுள்ள ஆனந்தம், அழகிய மனைவியினாலுள்ள இன்பம் நண்பனோடு கூடுவதாலுள்ள ஸுகம்—இவைகளோடு கூடிய அந்த நாட்களெல்லாம் போய்விட்டன! காலமாக, வயதான என்னை, மூப்பு, முகவாய்க்கட்டையில் (கிழவிபோல்) பிடித்துக் கொண்டு, 'மகனே, இன்னும் ஏன் வீட்டில்?' என்று அன்புடன் நல்லதைச் சொன்னாள். அதனால் திடீரென வைராக்யம் பிறக்கக் காடுபுக விரும்பி, என் பிள்ளையைக் குடும்ப பாரத்தைத் தாங்கும்படி அமர்த்தினேன். மனைவியுடனும். என்னிடமிருந்த ஸ்னேகத்தால் தன் ராஜ்யத்தையும் விட்டுவந்த வேடராஜனுடனும் காலஞ்சமம் என்ற மலைக்குச் சென்றேன். அம்மலையை நானடைந்ததும் என்னுடையதான வித்யாதர ஜாதியைப் பெற்றேன்; முடிவையடைந்த சிவன் சாபமும் நினைவுக்கு வந்தது. மானிடவுடலை விட விரும்பி, அதை அப்பொழுதே மனைவி மனோவதியிடமும், தோழன் வேடராஜனிடமும் சொன்னேன். 'மறு பிறப்பிலும், முன் றப்புபி நினைவுள்ள எனக்கு இவ்விருவருமே மனைவியாயும் தோழனாயும் வரவேண்டும்' என்று சொல்லிக்கொண்டு மனதில் சிவனைத் தியானம் செய்துகொண்டு, அந்த மலையிலிருந்து வேகமாய் விழுந்து, அம்மனைவிதோழர்களோடு உடலையும் விட்டேன். நான் ஜீமூதவாஹனனாகப் பிறகு இவ்வித்யாதர குலத்தில் முன் பிறப்பு நினைவுடன் பிறந்தேன். அதேவேடவேந்தனை நீ மறுபடியும் சிவனுடைய் அருளால் ஸித்தர்களின் அரசனுக்கு மகனான மித்ராவஸுவாய்ப் பிறந்திருக்கிறாய். அவ்வித்யாதரியான என் மனைவி மனோவதியே, மலயவதியென்ற உன் தங்கையாய் உண்டாயிருக்கிறாள். இப்படியாக இந்த உன் ஸஹோதரி என்னுடைய முன் மனைவியே; நீயும் என் முன் நண்பன்; ஆகையால் இவளை நான் கல்யாணம் செய்து கொள்வது பொருத்தமே. ஆனாலும் முன் நீ இங்கிருந்த என் தாய் தகப்பனிடம் போய்த் தெரிவி; அவ்விருவரையும் கேட்டுக் கொண்டு விட்டால் இந்த உன் விருப்பம்

கைகூடும்.'' இப்படி ஜீமூதவாஹனனிடம் கேட்ட மித்ராவஸு ப்ரீதியடைந்த மனதுடன் ஜீமூதவாஹனனின் தந்தைதாயிடம் போய் எல்லாவற்றையும் தெரிவித்தான். அவ்விருவராலும் ஆமோதிக்கப்பட்டு, ஸந்தோஷப்பட்டவனாய் தன் தந்தைதாயிடம் வந்து அதையே தெரிவித்தான். விரும்பியதே நன்கு நிறைவேறினதால், அவ்விருவரும் திருப்தியடைய இளவரசன் மித்ராவஸு ஸஹோதரியின் விவாஹத்திற்கு வேண்டியவற்றை ஏற்பாடு செய்தான். அதன்மேல் முறைப்படி ஜீமூதவாஹனன் ஸித்தராஜனால் கௌரவிக்கப்பட்டு, மலயவதியைப் பாணிக்ரஹணம் செய்து கொண்டான். ஆகாயசாரிகளான சாரணர்கள் இங்குமங்கும் மிளிர, ஸித்தகணங்கள் கூட்டங் கூட்டமாய்க் கூட, துள்ளும் வித்யாதரர்கள் நெருங்கிச் சேர அங்கு பெரு விழாவாயிருந்தது. பெருஞ் செல்வத்தோடு தன் மனைவியுடன் கூடினவனாய் மணமான பிறகு ஜீமூதவாஹனன் அந்த மலயமலையிலேயே தங்கினான்.

ஒரு ஸமயம் ஜீமூதவாஹனன் மைத்துனன் மித்ராவஸுவுடன் கடற்கரைக் காடுகளைக் காணப் போனான். அங்கு 'ஐயோ என் குழந்தாய்' என்று கதறும் தன் தாயைத் திருப்பியனுப்ப முயன்று கொண்டும் நடுநடுங்கிக் கொண்டும் இருக்கும் யுவாவான ஒருவனைக் கண்டான். வேலைக்காரன்போன்ற ஒருவன் பின்தொடர்ந்து வந்து, பெரிதாயும், உயரமாயுமிருக்கும் ஒரு கற்பாறைக்கு அந்த யுவாவைக் கொண்டுவந்து விட்டுப்போனான். "யாரப்பா நீ, என்ன செய்ய விரும்புகிறாய்? ஏன் உன் தாயார் வருந்துகிறாள்?'' என்று அவனை ஜீமூதவாஹனன் வினவ, அவன் வரலாற்றை உரைத்தான்: "முன் கச்யபருக்கு மனைவிகளான கத்ரூ, வினதை என்ற இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, தர்க்கம் செய்ய ஆரம்பித்தனர். கத்ரூ சூரியனின் குதிரைகள் கறுப்பென்றாள்; வினதை அவை வெண்மையானவை யென்றாள். இவ்வாதத்தில் தோல்வி யடைந்தவர் ஜயித்தவருக்கு அடிமையாக வேண்டும் என்பது நிபந்தனை. ஜயிக்க ஆவல்கொண்ட கத்ரூ தன் பிள்ளைகளான பாம்புகளைக் கொண்டு, முறைதப்பி, அவர்களுடைய விஷக்காற்றை யூதி, சூரியன் குதிரைகளை கறுப்பாயடித்து விட்டாள். அக் கறுப்புக் குதிரைகளைக் காட்டி, வஞ்சனையால் ஜயித்து, வினதையை தனக்கு அடிமையாக்கிக் கொண்டாள்; ஸ்திரீகளுடைய பொறாமை துன்பத்தை விளைவிப்பது அல்லவா? இதையறிந்த வினதையின் மகன் கருடன் தன் தாயை அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க வேண்டுமென்று கத்ருவை நயந்து யாசித்தான். அப்பொழுது கத்ருவின் மகள் நாகை சற்று யோஜித்தவளாய் கருடனைப் பார்த்துரைத்தாள்: "கருடா! பாற்கடலை தேவர் கடைய ஆரம்பித்திருக்கின்றனர். நீயோ பலவான்களில் சிறந்தவன். பாற்கடலிலிருந்து வரும் அமிருதத்தை எமக்குக் கொடு; பிறகு உன் தாயை மீட்டுக்கொண்டு போ.'' இப்படி நாகை சொன்னதைக் கேட்டு, பாற்கடலை யடைந்து, அமிருதம் வெளிப்படவேண்டி தன் ஆண்மையை நிரம்பக் காண்பித்தான். அவனுடைய பலத்தைக் கண்டு மெச்சி அச்சமயம் கடவுள் விஷ்ணுவே 'நாம் உன்னிடம் திருப்தியடைந்தோம்; உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள்' என்று கருடனுக்குக் கட்டளையிட்டார். தன் அம்மை அடிமையாக்கப்பட்ட கோபத்தால் கருடனும் "நாகங்கள் எனக்கு இரையாகட்டும்'' என்ற வரனை விஷ்ணுவிடம் கேட்டுக் கொண்டான். "அப்படியே ஆகட்டும்'' என்று விஷ்ணுவால் நியமிக்கப்பட்டு, தன் வலியால் அமுதையும் பெற்றுவிட்ட கருடனைப் பார்த்து, விஷயம் தெரிந்த இந்திரன் சொன்னான்: "புள்ளரசே! மூடரான நாகர்கள் இவ்வமிருதத்தை உண்ணாமலிருக்கும்படி நீ செய்யவேண்டும். அவர் உண்ண முடியாதபடி நான் அதை அவரிடமிருந்து திருப்பி எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன்.'' "அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி விட்டு, விஷ்ணுவின் வரத்தால் பெருமிதம் கொண்ட கருடன் அமிருத கலசத்தை யெடுத்துக் கொண்டு நாகர்களை யடைந்தான். கருடனுக்குக் கிடைத்த வரத்தின் பெருமையால் நடுங்கிக்கொண்டிருக்கும் நாகரைப் பார்த்து, "இதோ, அமிருத கலசத்தைக் கொண்டு

வந்தாய் விட்டது; என் தாயை விட்டுவிட்டு இதை எடுத்துக்கொள்ளும்; என்னிடம் பயமாயிருந்தால், இதோ உமக்காக இந்த தர்ப்பாஸனத்தில் இதை வைக்கிறேன்; என் தாயை விடுவித்துக்கொண்டு போய் விடுகிறேன்; நீங்கள் (பிறகு பயமின்றி) அமிருதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னுன். "ஸரி" என்று நாகங்கள் சொல்ல, சுத்தமான தர்ப்ப விரிப்பின்மேல் அமிருதகலசத்தை கருடன் வைத்தான்; நாகங்களும் கருடனின் தாயை விடுவித்தன. இப்படி அடிமையிலிருந்து தாயை விடுவித்துக்கொண்டு கருடன் சென்றதும் நாகங்கள் பயமின்றி அமிருதத்தை யடையும் தருணம், திடீரென அவ்விடம் குதித்து, தன் சக்தியால் அவர்களை மயக்கி, தர்ப்பைகளின் மேலிருந்த அமிருதகலசத்தை இந்திரன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். துயருற்ற நாகங்களோ கீழ்விரித்திருந்த தர்ப்பைகளை 'இவற்றில் ஒருவேளை அமுது சொட்டியிருக்கும்' என்று நக்கின. அதனுல் நாவு இரண்டாய்க் கிழிக்கப்பட்டு, வீணுகவே இரட்டை நாக்குள்ளவையாயின. அதிக ஆசைகொண்டவர் ஏளனத்தை யடைவதைத் தவிர வேறென்ன பலத்தையடைவார்! பிறகு அமிருதத்தைப்பெறு நாகங்களை, அவருடைய பகைவனுன கருடன் ஹரியின் வரனைக்கொண்டு, அவைகளின்மேல் விழுந்து விழுந்து விழுங்க ஆரம்பித்தான். இச்சந்தடியால் பயத்தால் பாம்புகள் உயிர் துறந்தும் கர்ப்பம் தரித்திருந்த நாகங்களின் கர்ப்பங்கள் நழுவிப்போயும், நாகலோகமான பாதாளம் பாம்பற்றதாய்க் கொண்டு வந்தது. இதை ஒவ்வொரு நாளும் உற்றுநோக்கி வந்த வாஸுகி நாகலோகம் முழுவதுமே ஒரே அடியில் அழிந்து போய்விட்டதாய் நினைத்தான். பிறகு உடனே யோஜனை செய்து தட்டுத் தடையற்ற வீரியத்தோடு கூடிய கருடனை வேண்டிக்கொண்டு இப்படியொரு ஏற்பாட்டைச் செய்தான். "பக்ஷி ராஜனே! ஒவ்வொரு நாளும் உனக்கு ஒரு நாகத்தை உன் ஆஹாரத்திற்காக கடற்கரை மலைக்கு நான் அனுப்பிவைக்கிறேன். இப்படித் துகைத்து விடும் நீ பாதாளத்தில் நுழையக்கூடாது; நாகலோகமே அழிந்துபோனுல் உன்னுடைய காரியம் தான் கெடும்." இப்படி வாஸுகியினுல் சொல்லப்பட்ட கருடன் 'அப்படியேஆகட்டும்" என்று சொல்லி, இம்மலையில் வாஸுகியினுல் அனுப்பப்பட்ட நாகங்களை நாளுக்கு ஒன்ருய்த் தின்றுவர ஆரம்பித்தான். அந்தக் கிரமத்தில் இதுவரையில் கணக்கில்லா நாகங்கள் இவ்விடத்தில் அழிந்திருக்கின்றன. நான் சங்கசூடன் என்ற நாகம்; இன்று என்னுடைய முறை வந்துவிட்டது. ஆகையால் நாகராஜனுன வாஸுகியின் கட்டளைப்படி கருடனின் உணவிற்காக, என் தாய் துயரையடைய, நானிந்த பலி பீடமான கல்லையும் அடைந்தேன்"

இப்படிச் சங்கசூடன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் துயருற்ற ஜீமூதவாஹனன், உள்ளம் தளர சங்கசூடனைப் பார்த்துச்சொன்னுன்: "ஐயோ, கேடு கெட்ட ராஜாங்கத்தைச் செய்கிருனே இந்த நாகராஜனுன வாஸுகி! தன் கையாலேயே சத்ருவுக்கு இரையாய்த் தன் குடிகளைக் கொடுக்கிருனே! ஏனே அவன் முதலில் தன்னையே கருடனுக்கு அர்ப்பணம் செய்துகொள்ளவில்லை? தன் குலம் அழிந்து போவதற்குத் தான் ஸாக்ஷியாயிருக்கும் இந்நிலையை வேண்டிக் கொண்டானே பேடி! கச்யபர் புத்திரனுன கருடனும் எவ்வளவு பாபத்தைச் செய்கிருன்? கேவலம் உடல் ஒன்றிற்காகப் பெரியோருக்கும் எவ்வளவு புத்திக்கலக்கம் ஏற்பட்டு விடுகிறது? இன்று உன்னையொருவனை என் உடலைக் கொடுத்து கருடனிடமிருந்து காப்பாற்றுகிறேன்; வருந்தாதே, நண்பா."

இதைக்கேட்ட சங்கசூடன் மனவுறுதியால் ஜீமூதவாஹனனிடம் சொன்னுன்; "வேண்டாம், மஹா நல்ல குணங்கள் படைத்தவரே; மறுபடியும் நீர் இப்படிப் பேசாதேயும். கண்ணுடிக்காக முத்துமணி அழியலாமா? குலத்திற்கு மாசைக்கொடுத்தவனுய் நானும் ஆகக்கூடாது." இப்படி மொழிந்து, ஜீமூதவாஹனனைத் தடுத்துவிட்டு, பெரியவனுன சங்கசூடன் கருடனிடம் போகவேண்டிய வேளைக்கு ஒரு நொடிதானிருக்கிறதென்று கண்டு, கடற்கரையிலுள்ள கோகர்ணரூபத்திலுள்ள பரமசிவனை தன்னிறுதிக் காலத்தில் வணங்குவதற்காகப் போனுன். சங்கசூடன் அப்படிச்சென்றதும், தன்னைக் கொடுத்து சங்கசூடனைக் காப்பாற்ற அருட்கடலான ஜீமூதவாஹனன் தக்க இடைவெளி அகப்பட்டதென்று தெரிந்து கொண்டான். அதன்மேல்

யுக்தியாய் அதை மறந்தவன் போல் காண்பித்துக்கொண்டு, ஏதோ வேறு காரியம் தனக்கு இருப்பதாய்ச் சொல்லி, மித்ராவஸுவைத் தன் வீட்டிற்கு அனுப்பினுன். அக்கணமே நெருங்கிக்கொண்டிருக்கும் கருடனின் இறக்கை வேகத்தால் தாக்கப்பட்ட அந்த ப்ரதேசம் கருடனின் வலுவைக்கண்ட ஆச்சர்யத்தாலோ வென்று தலை சுற்ற ஆரம்பித்தது. அந்த பூமியாட்டத்தால், பாம்பின் பகையோன் வந்துகொண்டிருப்பதாகத் தீர்மானஞ் செய்துகொண்டு, பிறரிடம் கருணை கொண்ட ஜீமூதவாஹனன் பலிக்கல்லின்மேல் ஏறினுன். தன் நிழலால் வானையே மூடும் கருடன் ஒரு நொடியில் கீழே பாய்ந்து தன் மூக்கினுல் கொத்தி அந்தப் பெரிய மனத்தோனைக் கொண்டு போயிற்று. கொத்தப்பட்டதால் கீழே விழுந்து போன சிகாரத்னத்தோடும், பெருகும் ரத்த தாரையோடும் கூடிய ஜீமூதவாஹனனை மலையுச்சிக்கு எடுத்துக்கொண்டு போய் கருடன் தின்ன ஆரம்பித்தான். அச்சமயம் வானிலிருந்து மலர் மழை பெய்ய 'இதென்ன' என்று அதைக்கண்ட கருடன் வியந்தான். அதற்குள் கோகர்ணேச்வரரைத் தொழுது விட்டுத் திரும்பிவந்த சங்கசூடன் பலிக்கல் ரத்தவீழ்ச்சியால் நனைந்திருப்பதைக் கண்டான். "ஹா! அந்தோ! எனக்காக அம் மஹாத்மா, தன் ஆத்மாவைக் கொடுத்துவிட்டான்; இக்கணம் அவனை எவ்விடம் கருடன் கொண்டு போயிருப்பான்; வேகமாய்த் தேடுகிறேன்; ஒருவேளை தென்படலாம்" என்று தானும் பெரு மனதுள்ளவனை சங்கசூடனும், ரத்ததாரையைப் பின்பற்றிப்போனுன். இதற்குள், ஆனந்தத்தோடேயே இருக்கும் ஜீமூதவாஹனனைப் பார்த்து, அவனைக் கடிப்பதை விட்டுவிட்டு, கருடன் ஆச்சரியப்பட்டு யோஜிக்கலானுன்: இவன் வேறுயாரோ, என்னுல் தின்னப்படும் போதும் துன்புறுமல், மனோவிகாரமற்று, மேலும் களிப்பையே அடைந்தவனுயுமிருக்கிறுன்." இப்படித் தனக்குள்ளேயே ஆலோசித்துக் கொண்டிருக்கும் கருடனைப் பார்த்து, அந்த நிலையிலுள்ளவனுயிருந்தும் தன் விருப்பம் நிறைவேற வேண்டுமென்று எண்ணி ஜீமூதவாஹனன் சொன்னுன்: "பக்ஷிராஜனே! என் உடலில் மாமிஸமும் ரத்தமும் இருக்கிறதே! என் திடீரென பசித்தவரா யிருந்தும் தின்பதை நிறுத்திவிட்டீர்?" இதைக் கேட்டு வியப்புற்ற கருடன் அவனைக் கேட்டான்: "பெரியோனே, நீ நாகமல்ல; நீ யார், சொல்." "நான் நாகமே, என்னை ஆரம்பித்தபடி சாப்பிட்டு முடி. பெரியோர் தொடங்கியதை முடிக்காமல் விட்டு விடமாட்டார்." இப்படி ஜீமூதவாஹனன் பதிலளித்துக் கொண்டிருக்கையிலேயே கொஞ்ச தூரத்தில் வந்து கொண்டிருக்கும் சங்கசூடன் கத்தினுன்: "இல்லை, பக்ஷிராஜனே, இல்லை; இவன் நாகமல்ல; உனக்கேற்பட்ட நாகம் நான். ஆகையால் அவனை விட்டு விடு; இதென்ன நீரும் திடீரென மயங்கிப் போனீர்?" என்று. அதைக்கேட்ட புள்ளரசனும் மிகவும் கலங்கினவனுனுன்; ஜீமூதவாஹனனும் விரும்பியது நிறைவேறுத துயரையடைந்தான். பிறகு ஒருவருக் கொருவர் பேசிக்கொள்வதிலிருந்து தான் மதிமயக்கத்தால் வித்யாதர சக்ரவர்த்தியைத் தின்றதாகத் தெரிந்துகொண்டு கருடனும் தவித்தான். "அந்தோ! துஷ்டனுன எனக்குப் பாவமல்லவோ வந்து விட்டது! வழிதவறி நடப்பவருக்குப் பாவம் எளிதில் வரக்கூடியதுதானே! இந்த மஹாத்மா ஒருவனே புகழத்தக்கவன். பிறருக்காக உயிரைக் கொடுக்கும் இவனுல் "என்னுடையது" என்ற அறிவின்மைக்கு வசனமான உலகே தாழ்த்தப் பட்டுப் போயிற்றே!" இப்படிச் சிந்தனை செய்து பாவத்திலிருந்து தன்னைப் பரிசுத்தம்செய்து கொள்வதற்காகத் தீக்குளிக்க நினைத்த கருடனை நோக்கி ஜீமூதவாஹனன் சொன்னுன்: "பக்ஷிராஜனே! ஏன் வருந்தி நிற்கிறுய்? நீ உண்மையில் பாவத்திற்கு பயந்தவனுனுல், இன்று முதல் மறுபடியும் நீ இந்த நாகங்களைக் குறித்துப் பச்சாத்தாபம் கொள்ளவேண்டும்; இதே உனக்கு ப்ராயச்சித்தம்; வேறு கவலைகள் உனக்கிருப்பின் அவை வீணே." இப்படி உயிர்களிடம் கருணைகொண்ட ஜீமூதவாஹனனுல் சொல்லப்பட்ட கருடன் 'அப்படியே' என்று அவன் வாக்யத்தை குருவின் வாக்யத்தைப் போல் ஒப்புக்கொண்டான். கடிக்கப்பட்ட அங்கங்களோடு கூடிய ஜீமூதவாஹனனையும் எலும்பாய்க் கிடக்கும் செத்த நாகங்களையும் உயிர்ப்பிப்பதற்காக, அமிருதத்தைக் கொண்டுவா, வேகமாய் தேவ

லோகத்திற்குச் சென்றான் கருடன். ஆனால் ஜீமூதவாஹனன், தன் மனைவி செய்த பக்தியினால் திருப்தி யடைந்து அவ்விடம் தானாய் வந்த பார்வதீ தேவியால், அமிருதம் தெளிக்கப்பெற்றான். அப்பொழுது மகிழ்ச்சியுடன் எழுந்த தேவதுந்துபிகளுடன், முன்னைவிடப் பதின்மடங்கு மேலான காந்தி பொருந்திய அங்கங்கள் ஜீமூதவாஹனனுக்கு ஏற்பட்டன. ஜீமூதவாஹனன் நல்லுடலுடன் எழுந்திருந்தவுடன், கருடனும் தேவலோகத்திலிருந்து கொண்டுவந்த அமுதை அக்கடற்கரைமுழுதும் வானிலிருந்து மழையாய்ப் பெய்வித்தான். அதனால் அங்கு எலும்பாய்க்கிடந்த நாகங்கள் எல்லாம் உயிருடன் எழுந்தன; கடற்கரையும் கணக்கில்லா நாகக்கூட்டங்களால் நிரம்பிற்று. அப்படிப் பாம்புகள் கூடிய அக்கடற்கரைக் காடு, கருடனிடம் பயம் தெளிந்த பாதாளமே ஜீமூதவாஹனனைக் காண வந்திருப்பது போல் தோன்றிற்று. பிறகு அழிவில்லாத தேகத்தோடும் புகழோடும் பிரகாசித்த ஜீமூதவாஹனனைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவன் உறவினர் ஸந்தோஷித்தனர். அவன் மனைவியும், ஞாதிகளும், தந்தை தாய்களும் களித்தனர். சுகமாய் மாறும் துக்கத்தால் எவர் தாம் இன்புறமாட்டார்கள்? அவனால் அனுப்பப்பட்ட சங்கசூடன் பாதாள லோகம் சென்றான்; அவனால் அனுப்பப்படாமலேயே தானாய் அவனுடைய புகழ் மூவுலகிற்கும் சென்றது.

பிறகு அன்பினால் வணங்கிய தேவரோடும் கருடனோடும் நிற்கும் வித்யாதர குல திலகனான ஜீமூதவாஹனனை அணுகி, அவனிடம் (முன்) வெகுகாலம் நன்றாய்ப்பழகாத மதங்கர் முதலான அவனுடைய தாயாதிகள், அவனுக்கு ஏற்பட்ட பார்வதியின் அருளால், அவனை வணங்கினர். அந்த தாயாதிகளாலேயே வேண்டிக்கொள்ளப்பட்டு, நற்செயலாளியான ஜீமூதவாஹனன் மலயத்தை விட்டு மணிமலைச்சாரலை யடைந்தான். அங்கு தகப்பனோடும், மித்ராவஸுவோடும் மலயவதியோடும் கூடி, உயர்ந்த மதி படைத்த ஜீமூதவாஹனன் வெகுகாலம் வித்யாதர சக்ரவர்த்தி பதத்தை அனுபவித்து வந்தான். இப்படியாக மூவுலகிலுமே, மக்களின் உள்ளத்தைக் கவரும் நடத்தையை யுடையோரின் காலடியை நன்மை வரிசைகள் தாமாய் எப்பொழுதுமே பின்பற்றி ஓடி வருகின்றன.”

இப்படி மந்திரி யௌகந்தராயணன் சொன்ன கதையைக் கேட்டு, கர்ப்ப பாரத்தால் உண்டான மேன்மையான ‘மசக்கை’ கொண்ட தேவி வாஸவதத்தை மகிழ்ச்சியடைந்தாள். அதற்குப் பிறகு தங்களிடம் அன்புகொண்ட தேவதைகளின் இடைவிடாத நியமனங்களின் நம்பிக்கையால், கேட்ட வித்யாதர சக்ரவர்த்தியின் கதையின் தொடர்பில் வந்து சேரும் தனக்குப் பிறக்கப் போகும் பிள்ளையும் வித்யாதர சக்ரவர்த்தியாக ஆகப் போகும் கதையைப் பேசிக்கொண்டு, உதயண மஹாராஜனின் பக்கத்தில் நிற்பவளாய் தேவி வாஸவதத்தை அந்த தினத்தைக் கழித்தாள்.

இரண்டாவது அலை முற்றிற்று.

கடோத்கசன் தூது.

இது பாஸ மஹாகவியின் நாடகங்களில் ஒன்றாகிய "தூத கடோத்கசத்தின்" மொழி பெயர்ப்பு. பிரம்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L., அவர்கள் மொழி பெயர்த்தது.

[குறிப்பு:—மொழி பெயர்ப்பாசிரியர் காபிரைட்.]

[சேகவன் பிரவேசம்]

சேவகன்:—ஓ காவலர்களே! சீக்கிரம் திருதராஷ்டிர மஹாராஜாவிடம் தெரிவியுங்கள். இன்று கௌரவ சைந்யத்தில் புகுந்து 'காலாட் படைகள் என்ன, ரதங்களென்ன, குதிரைப் படைகளென்ன, யானைப் படைகளென்ன இவையனைத்தையும் துவம்சம் செய்து, சிறுவனாய் இருந்தபோதிலும், அருச்சுனனைப்போல் அகாத வீரச் செயல்களை விளையாட்டுப்போல் செய்து காட்டிய அவ் வபிமன்னியுவானவன், மத்தியில் நூற்றுக்கணக்கான அரசர்களால் கவிந்து கொள்ளப்பட்டு ஒரே நிமிஷத்தில் விண்ணுலகிற்கு அனுப்பப்பட்டான்' என்று தெரிவியுங்கள்.

[திருதராஷ்டிரன், காந்தாரி, துச்சலா, பிரதிஹாரி, இவர்கள் பிரவேசம்]

திருதராஷ்டிரன்:—ஆஹா? என்ன இது? கர்ண கடூரமான இந்த விஷயத்தைத் தெரிவிப்பவன் யார்? என் மனதிற்கு வேதனையைக் கொடுக்கும் விருத்தாந்தத்தை எனக்குப் பிரியமான தென்று நினைத்து சொல்லுபவன் எவன்? குழந்தையைக் கொன்ற பாதகத்தின் மூலமாய் இந்த வமிசம் அழியப் போவதை கூச்சமில்லாமல் பறையறைவிப்பவன் எவன்?

காந்தாரி:—வமிசம் அழிவதற்கல்லவா இந்த யுத்தம் ஏற்பட்டிருக்கிறது?

திருதராஷ்டிரன்:—ஹா! அதுதான் உண்மை.

காந்தாரி:—இன்று அபிமன்யுவின் வதத்தினால் கோபம் கொண்டு நம்மிடத்தில் காரமுள்ள கிருஷ்ணனால் தூண்டப்பட்டு, நிச்சயமாக அருச்சுனன் இவ் வுலகத்தையே அழித்து யுத்தத்திற்கு முடிவு கட்டப் போகிறான்.

காந்தாரி:—ஐயோ? குழந்தாய் அபிமன்யு! இந்த பாழும் யுத்தத்தில், என் அருமைப் பேரனாகிய நீ இவ்விதம் மடியவேண்டுமா?

துச்சலா:—இன்று உத்தரையை கைம்பெண்ணாக்கியவனுடைய தலைவி கூடிய சீக்கிரம் கைம்பெண்ணாவது திண்ணம்.

திருதராஷ்டிரன்:—அடே, யாரடா இந்த துக்க ஸமாசாரம் கொணர்ந்தவன்?

சேவகன்:—மஹாராஜா, நான் தான் ஜயத்திரதன்.

திருதராஷ்டிரன்:—ஜயத்திரதா, அபிமன்யு யாரால் கொல்லப்பட்டான்? எவனடா தன் சரீரத்தை பஞ்சாக்னிகள் போல் ஜ்வலிக்கும் பாண்டவத் தீயால், எரிபொருளாகச் செய்து கொள்ளப் போகிறான்?

சேவகன்:—மஹாராஜா! அபிமன்னியுவைச் சூழ்ந்து கொண்டு அடித்த அரசர்கள் பலராவார்; ஆனாலும், கொன்றவர் ஜயத்ரதர்.

திருதராஷ்டிரன்:—ஐயையோ! ஜயத்ரதனா கொன்றவன்?

சேவகன்:—ஆமாம், மஹாராஜா.

திருதராஷ்டிரன்:—ஆனால், தொலைந்தான் ஜயத்ரதன்.

துச்சலா:—ஹா! (என்றுகூவி அலறுகிறாள்)

திருதராஷ்டிரன்:—யார் என் பக்கத்தில் அழுவது?

பிரதீஹாரி:—மஹாராஜா! ராஜா குமாரி துச்சலை.

திருதராஷ்டிரன்:—குழந்தாய்! என் வீணாக அழுகிறாய்? உன்னை மாங்கல்யத்துடன்

இருக்கச்செய்ய வேண்டுமென்று உன் புருஷனுக்கு எண்ண மிருந்தால் அவன் ஏன் இவ் விதம் அருச்சுனனுடைய பாணங்களுக்கு தன்னை இரையாக்கிக் கொள்ள வழி தேடுகிறான்?

துச்சலா:—அப்பா! அப்படியானால் எனக்கு உத்திரவு கொடுங்கள், நான் உத்திரையின் ஸமீபம் செல்லுகிறேன்.

திருதராஷ்டிரன்:—அவளிடம் சென்று என்ன சொல்லப் போகிறாய்?

துச்சலை:—அப்பா, 'உனக்கு வந்தவிதி எனக்கும் வந்தது' என்று அவளைக் கட்டிக் கொண்டு அழப் போகிறேன்.

காந்தாரி:—குழந்தாய்! ஏன் அமங்களமான வார்த்தை பேசுகிறாய்? உன் புருஷன் உயிருடன் தானே இருக்கிறான்.

துச்சலை:—அம்மா? நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லையே, ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய நட்பைப் பெற்ற அந்த அருச்சுனனுக்கு தீங்கிழைத்தவர் உயிருடன் வாழ முடியுமோ?

திருதராஷ்டிரன்:—துச்சலை சொல்வது உண்மை. எந்த அபிமன்னியு ஸ்ரீ கிருஷ்ணனின் மடியிலேயே இருந்து வளர்ந்தவனோ, எவன் ஸ்ரீ பலராமருக்கு அளவிலாத களிப்பை மூட்டும் அரும் செல்வனோ, தேவபராக்கிரமம் பொருந்திய பாண்டவர் ஐவருக்கும் எவன் கண்ணின் மணிபோன்றவனோ, அவனைக் கொன்ற பாவிக்கு உயிர் எப்படி தக்கும்? ஜயத்திரா தா! அப்படிக் கொல்லப் பட்ட புத்திரனைப் பார்த்து அருச்சுனன் என்ன செய்தான்?

சேவகன்:—மஹாராஜா, அருச்சுனன் இருக்கும் பொழுது இது நடந்ததென்று நினைக்கிறீர்கள்.

திருதராஷ்டிரன்:—ஆனால்?

சேவகன்:—ஸம்சப்தகர்கள் என்ற அசுரர்களைத் துரத்திக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடன் அருச்சுனன் வெளியே போயிருக்கும் தருணம், சிறுபிள்ளைத் தனத்தினால் பயமறியாமல் ராஜகுமாரன் அபிமன்னியு யுத்த களத்தில் இறங்கி விட்டான்.

திருதராஷ்டிரன்:—ஓஹோ! அதனால்தான் அவனுக்கு இவ் விபத்து நேர்ந்தது; அந்த ஸிம்ஹம் இருந்திருந்தால், அவன் ஸமீபத்தில் போக எவனால் முடியும்? பிறகு, மற்ற பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

சேவகன்:—மஹாராஜா அருச்சுனன் வரவை எதிர்பார்த்தவர்களாக, அந்த சரீரத்தை காப்பாற்றி வருகிறார்கள். மேலும், அவன் பேரில் ஆயுதப் பிரயோகம் செய்த அந்தந்த அரசர்களின் பெயர்களை கெட்டியாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருதராஷ்டிரன்:—காந்தாரி, வா என்னுடன்; கங்கைக் கரைக்குப் போவோம்.

காந்தாரி:—ஆனால், கங்கையில் விழுந்துவிடுவோமா?

திருதராஷ்டிரன்:—காந்தாரி! உன் பிள்ளைகளுக்குத் தர்ப்பணம் செய்யப் போகிறேன்.

[துர்யோதனன், துச்சாதனன், சகுனி, இவர்கள் பிரவேசம்]

துர்யோதனன்:—துச்சாதனா! இன்று அபிமன்னியுவின் வதத்தின் மூலமாக நாம் பெரிய வெற்றியைப் பெற்றோம். சத்துருக்கள் தளர்ந்து போய் விட்டார்கள். அந்த கிருஷ்ணனுடைய இறுமாப்பு ஒடுங்கிவிட்டது; இப்பொழுது என்னுடைய பெயருக்கும் பெருமை பிறந்திருக்கிறது.

துச்சாதனன்:—ஆமாம், ஜயத்திரதனுடைய சேனைகளால் பாண்டவர்கள் தடைபட்டுப் போன பொழுது அருச்சுனனைப் போன்ற பராக்கிரமமுடைய இவ் வபிமன்யு வீழ்த்தப் பட்டான். இன்று, பீஷ்மரை யுத்தத்தில் வீழ்த்திய அப் பாண்டவர்களுக்கு, புத்திர சோகத்தைக் கொடுத்து நாம் பகையைப் பயன் படுத்திக் கொண்டோம்.

சகுனி:—இன்று ஜயத்திரதன் யுத்தத்தில் செய்த வீரச்செயல், எந்த அரசனாலும் செய்ய

முடியாது. அவனுடைய வெற்றியினால் பாண்டவர்களுக்கு புத்திரநாசம் மட்டும் அல்ல, கீர்த்தியும் போய் விட்டது.

துர்யோதனன் :—மாமா வாருங்கள்; துச்சாதனா, வா; அப்பாவைப் பார்த்து வந்தனம் செய்து வருவோம்.

சகுனி :—அப்பா, துர்யோதனா, வேண்டாம். ஏற்கனவே அவருக்கு இந்த யுத்தம் ஏற்பட்டதில் மனஸ்தாபம்; பாண்டவர்கள் பக்கத்தில் பக்ஷபாதமாய் இருந்துகொண்டு நம்மைத் திட்டுகிறார். யுத்தம் முடிந்து ஜெயம்பெற்று அவரை முகமலர்ச்சியுடன் பார்த்துக்கொள்ளலாம்.

துர்யோதனன் :—மாமா, அது ஸரியல்ல. எப்படியானாலும் ஆகட்டும். அவரைப் பார்த்து நமஸ்கரிக்கவேண்டியது அவசியம்.

சகுனி :—ஸரி, உன்னிஷ்டம் போல்.

(எல்லோரும் போகிறார்கள்.)

துர்யோதனன் :—அப்பா! நான்தான் துரியோதனன். தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

துச்சாதனன் :—அப்பா! நான்தான் துச்சாதனன், தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

சகுனி :—நான் சகுனி, நமஸ்காரம்.

எல்லோரும் :—என்ன பதிலைக் காணோமே!

திருதராஷ்டிரன் :—துர்யோதனா, நான் உனக்கு என்ன ஆசீர்வாதம் செய்வது? ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அருச்சுனனுக்கும் உயிர் நிலையாக இருக்கும் அந்த சுபத்திரையின் பிள்ளையைக் கொன்றதினால் உன் உயிரில் உனக்குப் பிரியமில்லை என்று விளங்குகிறது. அப்படி இருப்பவனுக்கு என்ன ஆசீர்வாதம் செய்வது?

துர்யோதனன் :—அப்பா, ஏன் இந்த அதைர்யம்?

திருதராஷ்டிரன் :—ஏன் அதைர்யமா? நூறு பிள்ளைகளுக்கு நடுவில், அவள் ஒரு பெண் பிறந்தாள். அவளுக்கு உடன்பிறந்தவர்களான உங்கள் தயவால் அமங்கல்யம் நெருங்கி விட்டது.

துர்யோதனன் :—அப்பா, ஜயத்திரதனுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது?

திருதராஷ்டிரன் :—அவன் வரம்பெற்ற கர்வத்தினால் பாண்டவர்களின் அருமைப் புதல்வனைக் கொன்றான்.

துர்யோதனன் :—அவன் மட்டுமா கொன்றான்? பல அரசர்கள் சேர்ந்தல்லவா கொன்றார்கள்.

திருதராஷ்டிரன் :—ஐயோ, கஷ்டம்; ஒரு குழந்தையைக் கொல்ல பல அரசர்களா சேர்ந்தார்கள்? அந்த அகாரியம் செய்யும்பொழுது அவர்கள் கைகள் ஒடிந்து விழவில்லையே!

துரியோதனன் :—அப்பா! வயது முதிர்ந்த பீஷ்மரை கபடமாக யுத்தத்தில் வீழ்த்தியவர்களின் கைகள் முறிந்து வீழ்ந்தால் அல்லவா, இப்பொழுது, சிறுவனாலும் பெரிய சூரனை இவனைக் கொன்றவர்களின் கைகள் விழப்போகின்றன.

திருதராஷ்டிரன் :—குழந்தாய், பீஷ்மரைத் தள்ளியதும் அபிமன்னியுவைக் கொன்றதும் ஸரிஸமனாகுமா?

துர்யோதனன் :—ஏன் ஆகாது?

திருதராஷ்டிரன் :—சொல்லுகிறேன் கேள்: பீஷ்மரோ வயது முதிர்ந்தவர்; பற்பல வீரச் செயல்களால், ஜன்மஸாபல்யம் அடைந்தவர்; மேலும், தன்னிச்சைப்படி மரிக்கவல்லவர்; இவனோ, குழந்தை; குருவம்சத்திற்கு வேர் போன்றவன்; அருச்சுனனுடைய கிளைக்கு முதலாவதான துளிர்.

துச்சாதனன் :—என்ன அப்பா! அபிமன்னியுவாவது, குழந்தையாவது.

திருதராஷ்டிரன் :—துச்சாதனனா பேசுகிறது?

துச்சாதனன் :—ஆமாம், கேளுங்கள் அபிமன்னியுவின் காரியத்தை: நாங்கள் இவ்வளவு அரசர்கள் யுத்தம் செய்துகொண்டிருக்கும்

போது, தனியாக, வில்லைக் கையிலேந்தி எதிர்ப்பட்ட இவன் ஒரு நொடிப்பொழுதில் இவ்வளவு பேர்கள் சரீரங்களிலும் எண்ணிறந்த பாணங்கள் தைக்கும்படி செய்துவிட்டான்.

திருதராஷ்டிரன்:—அடே! அனர்த்தம் வந்துவிட்டது. சிறுவனான இவனே இவ்விதம் செய்திருக்கும்போது, இப் புத்திர சோகத்தினால் கடுஞ்சினம் கொண்ட அருச்சுனன் உங்களை எப்பாடு படுத்தி வைக்கப்போகிறானோ?

துர்யோதனன்:—என்ன பண்ணிவிடுவான்?

திருதராஷ்டிரன்:—அவன் பண்ணப்போவதை ஆயுள் மிச்சம் இருப்பவர்கள் பார்க்கலாம்.

துர்யோதனன்:—அப்பா! அவனா அவன் அருச்சுனன்?

திருதராஷ்டிரன்:—அருச்சுனனைத் தெரியாதா?

துர்யோதனன்:—தெரியாதப்பா!

திருதராஷ்டிரன்:—ஆனால் எனக்கும் தெரியாது. இருந்தாலும் அருச்சுனனுடைய பராக்கிரமத்தைத் தெரிந்தவர்கள் வெகு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் போய் விசாரி.

துர்யோதனன்:—அப்பா! அவர்கள் யாரென்று சொல்லுங்கள், பார்ப்போம்.

திருதராஷ்டிரன்:—சொல்லுகிறேன் கேள்: நிவாதகவசர்கள் என்ற அசுரர்களைக் கொன்று அந்த அருச்சுனன், எந்த தேவேந்திரனுக்கு உதவி புரிந்தானோ, அந்த தேவேந்திரனைப் போய் விசாரி. அஸ்திரங்களினால் அடிக்கப்பட்டு அவனிடம் கருணைகாட்டிய பரமசிவனை யாவது கேள். அல்லது, காண்டவ வனத்தில் திருப்தி செய்யப்பட்ட அக்னிபகவானைக் கேள். உன்னையே ஜெயித்தவனான சித்ராங்கதன் என்ற காந்தருவராஜனை வேண்டுமானால் கேள்.

துர்யோதனன்:—அருச்சுனன் வீரனாகவே இருக்கட்டும். நம்முடைய கட்சியில் வீரர்கள் இல்லையா?

திருதராஷ்டிரன்:—யாரப்பா, அந்த வீரர்கள்?

துர்யோதனன்:—முதலாவது, கர்ணன் இருக்கிறான்.

திருதராஷ்டிரன்:—ஐயோ பாவம் கர்ணனா?

துர்யோதனன்:—ஏன் அப்பா? கர்ணனுக்கு என்ன?

திருதராஷ்டிரன்:—சொல்லுகிறேன் கேள்: கர்ணன், முதலாவதாக அர்த்தரதனே தவிர மஹாரதனல்லன்; இரண்டாவது, கைத்தவறுதல் உள்ளவன்; இளகின மனதுடையவன்; குருவஞ்சனை செய்து அஸ்திரம் பயின்றவன். ஆதலால், அவன் வீரச்செயல்கள், குருசாபத்தினால், வீண்போகக் கூடியவை. மேலும் அவனுடைய பிறவிக்கவசத்தை இந்திரன் கொண்டு போய்விட்டான். அருச்சுனனோ, இந்திரன், அக்கி, உருத்திரன் முதலியவர்களிடமிருந்து வரப்பிரஸாதமாக அஸ்திரங்களைப் பெற்றவன்.

சகுனி:—உமக்கு நம்மை இகழ்ச்சியாகப் பேசிக் கொள்ளத் தான் தெரியும்.

திருதராஷ்டிரன்:—சகுனி பேசுவது போல் இருக்கிறதே; அப்பா சகுனி, நீ ஆரம்பித்த சொக்கட்டானின் மகிமையால் இந்த வமிசத்தில் பூண்டு கூட மிச்சப்படாதென்று தோன்றுகிறது.

[திரைக்குள் கடோரமான சப்தம்]

துர்யோதனன்:—ஜயத்திரதா? பாண்டவர்களின் பாசறையில் சங்கபேரிகைகளின் முழக்கம் எக்காரணத்தினால் என்று பார்த்து வா.

சேகவன்:—[போய்ப்பார்த்துவந்து] மஹாராஜா அருச்சுனன் திரும்பிவந்து புத்திரனை மடியில் போட்டுக் கொண்டு கண்ணீர் பெருக கிருஷ்ணனால் தூண்டப்பட்டு இவ்விதம் சபதம் செய்திருக்கிறார்.

துர்யோதனன்:—என்ன சபதம்?

சேகவன்:—என் புதல்வனை எவன் கொன்றானோ? அப்படி அவன் கொல்லப்பட்டதில்

எவரெவர் மகிழ்ச்சியடைந்தாரோ, அவர்கள் எல்லோரையும் நாளை சூர்யாஸ்தமனத்திற்குள்ளாக, நான் கொன்று விடுவேன் என்று.

துர்யோதனன்:—அப்படி கொல்ல முடியாமற் போய்விட்டால்.

சேகவன்:—அவர் அக்கினிப் பிரவேசம் செய்யப் போகிறார்.

துர்யோதனன்:—பேஷ்! நன்றாக ஆகிவிட்டது, மாமா! துச்சாதனா! நாம் இப்பொழுது அருச்சுனனுடைய பிரதிக்ஞை நிறைவேறாமல் செய்துவிட வேண்டியது; பின்பு சத்துருக்கள் தாமே ஒழிந்து விடுவர்.

திருதராஷ்டிரன்:—அதை எப்படி உன்னால் தடுக்கமுடியும்?

துர்யோதனன்:–என்? ஸர்வஸைன்யங்களைக் கொண்டு ஜயத்திரதனை மறைத்து விடுகிறேன். ஆசார்யர் துரோணருடைய உபதேசத்தால் பிளக்க முடியாத ஆள் கோட்டையை கட்டி விடுகிறேன். அப்பொழுது ஒன்றும் செய்ய இயலாதவர்களாக, அப்பாண்டவர்கள் அக்கியில் விழ்ந்து விடுவார்கள்.

திருதராஷ்டிரன்:—கிருஷ்ணனைத் துணையாகக் கொண்ட அவர்கள், பூமிக்குள் புகுந்து கொண்டாலும், ஆகாயத்தில் ஏறிக்கொண்டாலும், தங்கள் சத்துருவை பாணத்திற்கு இரையாக்கவல்லவர்கள்.

சேவகன்:—[தனக்குள்] இப்பேர்ப்பட்ட அப்பிரியமான வார்த்தையை அரசனின் முன் வேறு யார் சொல்லிப் பிழைக்கமுடியும்?

(கடோத்கசனின் பிரவேசம்)

கடோத்கசன்:—இன்று நடந்த அக்கிரமத்தின் நிமித்தமாக, துரியோதனனைப் பார்க்கும் பொருட்டு நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். இதோ துர்யோதனனின் இருப்பிடம். தன்னைத் தானே தெரிவித்துக்கொள்கிறேன். ஐயா, யார் இங்கே. ஹிடிம்பையின் புதல்வன் கடோத்கசன் வந்திருக்கிறேன். ஸ்ரீகிருஷ்ணன் என்னைத் தூதனாக அனுப்பியிருக்கிறார்.

துர்யோதனன்:—வரலாம். ஸந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

கடோத்கசன்:—[உள்ளே வந்து] ஆஹா! இங்கு பெரியவரும் இருக்கிறார். இவரல்லவா இந்த நூறு துஷ்டப்பயல்களுக்கு தகப்பனார்? எவ்வளவு கம்பீரமாக இருக்கிறது இவரது தோற்றம். தளராத இவருடைய சரீரத்தைப் பார்த்தால் வயது முதிர்ந்தவரென்று சொல்லவும் முடியாது. [சமீபத்தில் வந்து] தாத்தா! நமஸ்கரிக்கிறேன், கடோத்கசன். ஆஹா! இது ஸரியல்ல. தருமபுத்திரர் முதலான பெரியோர்கள் தங்களுடைய வந்தனத்தை உங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். பிறகு என் வந்தனத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருதராஷ்டிரன்:—அப்பா! குழந்தை வா. உன் தம்பி இறந்த விஷயத்தில் உன்னைப் போல் நானும் துக்கப்பட்டவன் தான். ஆனால், அதற்குக் காரணமாக என் புத்திரன் இருந்தபடியால் எனக்குத் துக்கத்துடன் அவமானமும் சேர்ந்திருக்கிறது.

கடோத்கசன்:—ஆஹா! எவ்வளவு உதாரமான சித்தம்! தாத்தா, ஸ்ரீகிருஷ்ணபகவான் தெரிவித்துக்கொள்கிறார்:

திருதராஷ்டிரன்:—என்ன கட்டளை இடுகிறார்?

(என்று சொல்லிக்கொண்டு ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கிறார்)

கடோத்கசன்:—இல்லை இல்லை. தாங்கள் உட்கார்ந்த வண்ணமாகவே கேட்கவேண்டும்.

திருதராஷ்டிரன்:—அப்படியே. [என்று உட்காருகிறார்].

கடோத்கசன்:—கேளுங்கள், தாத்தா. ஒரு பிள்ளை இறந்ததனால், அருச்சுனன் பரிதவிப்பதைப் பார்த்தால் நாளை நூறு பிள்ளை இறந்த நீங்கள் எப்படி பரிதவிப்பீர்களோ, என்று கிருஷ்ண பகவான் பரிதவிக்கிறார். ஆகையால் சித்தத்தைத் திடப்படுத்திக் கொள்ளும்படி தெரிவிக்கிறார்.

திருதராஷ்டிரன் :—கிருஷ்ணன் தீர்மானம் செய்து விட்டார்; வந்துவிட்டது அனர்த்தம்.

மற்றவர்கள்:—என்ன கேலியா?

கடோத்கசன்:— இதில் என்ன கேலி இருக்கிறது?

துர்யோதனன்:—சொல்லுகிறேன் கேள்:— இந்த கிருஷ்ணன் அருச்சுனன் ஒருவனைக் கொண்டு எல்லா அரசர்களையும் கொன்றுவிடலாமென்று நினைக்கிறாரே, இதைவிட ஹாஸ்யம் என்ன இருக்கிறது?

கடோத்கசன்:—உங்களுக்குப் பரிஹாஸமாக இருக்கிறதாக்கும். ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியிருப்பதை நான் தெரிவித்து விட்டேன். உங்களுக்கும் ஒரு ஸந்தேசம் அனுப்பியிருக்கிறார், கேளுங்கள்.

துச்சாதனன்:—அடே, நிறுத்து. உலகத்தில் எல்லா அரசர்களுக்கும் தலைவனான நமது மஹாராஜாவிற்கு ஒரு வெறும் பேர்வழி என்னடா ஸந்தேசம் சொல்லியனுப்புகிறது?

கடோத்கசன்:—அடே, துச்சாதனா, கிருஷ்ணன் அரசரல்லவா? முன் ஜராஸந்தனால் கட்டுண்ட அரசர்களை அவர் மீட்கவில்லையா? அரசர்களின் மத்தியில் பீஷ்மர் அவருக்கு முதல் மரியாதை செய்யவில்லையா? நித்யமாக அவரிடம் லெக்ஷ்மி வசிக்கவில்லையா? அரசர்களுக் கெல்லாம் அரசனான அவனை நீ எப்படி அவமதிக்கலாம்?

துர்யோதனன்:—துச்சாதனா, சற்று பொறு. அடே, அரசனாக இருக்கட்டும், அரசன் அல்லாமல் இருக்கட்டும்; உன் எஜமான் என்னடா சொல்கிறான்?

கடோத்கசன்:—ஆமாம்; மூன்று லோகத்திற்கும் எஜமான் எனக்கும் எஜமான்; 'க்ஷத்திரியர்களுக்கு நாசகாலம் வந்துவிட்டது; பூமியின் பாரம் குலையப் போகிறது. புத்திர சோகத்தினால் உக்கிரமான கோபத்தை மேற்கொண்ட அருச்சுனனுடைய பாணங்களிலிருந்து போர் முகத்தில் நாளை எவனும் தப்பி ஓட முடியாது' என்று தெரிவிக்கிறார்.

சகுனி:—எனடா? வார்த்தையினாலேயே சத்துருக்களை ஜெயிப்பதாக உத்தேசமா? ஒரு வார்த்தைக்கு ஒரு ஜெயம் போலிருக்கிறது.

கடோத்கசன்:—ஓஹோ! சகுனியா? ஓய்! அந்த பாச்சைக்காய்களை கீழே வைத்துவிட்டு கொஞ்சம் பாணத்தை இடும், பார்ப்போம். இது, பெண்களைப் பந்தயம் வைக்கும் விளையாட்டல்ல. பிராணனைப் பந்தயம் வைக்க வேண்டும்.

துர்யோதனன்:—அடே! நிதானமாகப்பேசு. என்ன, மரியாதை தவறி கண்டபடி பேசுகிறாய்; கையை வீசுகிறாய்; இங்கிருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை? உன் தாய் வழியில் நீ ராக்ஷஸன் என்ற திமிர் போலிருக்கிறது. உனக்குமேல் பயங்கரமான ராக்ஷஸர்கள் நாங்கள்.

கடோத்கசன்:—ஆஹா, அதற்கென்ன ஸந்தேகம்? ராக்ஷஸர்களுக்கு மேல் கடோரமான கார்யங்களை செய்பவர்கள் நீங்கள். ஏனென்றால், அரக்குமாளிகையில் தூங்கும் அண்ணன் தம்பிகளை ராக்ஷஸர்கள் நெருப்புக்கு இரையாக்க மாட்டார்கள். தமையன் மனைவியை அரக்கர்கள் தலையில் கைபோட்டு இழுக்கமாட்டார்கள். யுத்தத்தில் புத்திரனைக் கொல்வதை ராக்ஷஸர்கள் மனதால்கூட நினைக்கமாட்டார்கள். பார்வைக்கு விகாரமாய் இருந்தாலும் ராக்ஷஸர்கள் அனுதாபம் உள்ளவர்கள்.

துர்யோதனன் :—அடே, நீ சண்டைக்கா வந்திருக்கிறாய்? தூதனாக வந்தவன் சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டு போ. நீ இவ்விதம் பேசுவதற்கு, தூதன் என்ற காரணத்தால், நாம் உன்னைக் கொல்ல இச்சைப்படவில்லை.

கடோத்கசன் :—ஓஹோ! நான் தூதனென்று தயவுபண்ணுகிறீர்களா? ஐயா, நான் தூதனில்லை; எங்கே, அடியுங்கள் பார்ப்போம். என்னையும் அபிமன்னியு என்று நினைந்து விட்டீர்களா? இதோ பாருங்கள். குத்துச் சண்டைக்கு தயாராக இருக்கிறான் கடோத்கசன். யமலோகத்திற்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து வரலாம்.

(எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்)

திருதராஷ்டிரன்:—அப்பா, கடோத்கசா, கோபித்துக்கொள்ளாதே. என் வேண்டுகோளுக்கிணங்கி சாந்தமாய் இருப்பாயாக.

(189-ம் பக்கம் பார்க்க)

சில்பப் பகுதி.

இரட்டைத் தெய்வம்

(வம்பன் எழுதியது)

ஸ்ரீ பாகவத்திலே பலராமனையும் கிருஷ்ணனையும் சேர்த்தே பாடியிருக்கிறார் சுகப் பிரம்மரிஷி. இராமனும் இராமானுஜனுமென்று சேர்த்துச் சொல்லப்படும் சிறப்பு வாய்ந்த பலபத்திரதேவனையும் ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் இருவராகவே தொழுவது தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். 'செம் பொற் கழலடிச் செல்வா! பலதேவா! உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்'' என்பது திருப்பாவைப்பாசுர மொன்றின் பகுதி. ''மாயவனும் தம்முனும் போலே மறிகடலும் கானலும்சேர் வெண்மணலும் காணாயோ'' என்பது சங்கத்தார் வாக்கு. 'மறிகடல் வண்ணன் கண்ணன்; கடற்கரையிலே யுள்ள வெண்மணல் போல்வான் அவன் அண்ணன்' என்று வருணிப்பது இப்பழஞ் செய்யுளின் அடிகள்.

திருமாலிருஞ்சோலைமலையிலே இவ்விரு தேவர்களும் கோயில் கொண்டிருந்தனர். இளம் பெருவழுதியார் என்னும் பழம் புலவர் ஒரு பரிபாடலிலே இதனை

கல்லறை கடலுங் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம்
வேறு வேறுருவினொரு தொழிலிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம்

என்று குறித்துள்ளார்.

ஸ்ரீ வாசுதேவனையும் பலதேவனையும் சிலையில் அமைத்து வழிபடுவோர் வாசுதேவனை கரியவுருவ முடையவனாய், செவ்வாடை உடுத்துக் கையிலே சங்கும் சக்கரமும் ஏந்தியவனையும், பலதேவனை வெள்ளை மேனியனாய் கரிய ஆடை உடுத்துக் கையிலே நாஞ்சிலும் தண்டுமேந்தியவனையும் அமைத்தனர் என்பது பழந்தமிழ்ப் பாடல்களால் அறியலாகும். மேலே குறித்த பரிபாடலிலே வந்த 'ஒள்ளொளியவை' 'ஒரு குழையவை' 'வள்ளணி வளைநாஞ்சிலவை' 'சலம்புரி தண்டேந்தினவை' என்பன பலதேவனையும், 'வலம் புரிவய நேமியவை' 'கள்ளணி பசுந் துளவினவை' 'கருங் குன்றனையவை' என்பன கண்ணனையும் குறிப்பன என்று அப்பரிபாடலினுரையிலே பரிமேலழகர் எடுத்துக் கூறுகிறார்.

இவ்வழக்கம் வடமொழி நூல்களிலும் உள்ளது. பிருஹத் ஸம்ஹிதையிலே 'பிரதிமா லக்ஷணத்தைக் கூறும் அத்தியாயத்திலே பின் வருமாறு ஸ்ரீ வராஹமிஹிரர் சொல்லுகிறார்:

'பலதேவனை ஹலபாணியாய் மதத்தால் சுழலுங் கண்களை யுடையவனாய் அமைக்க வேண்டும்; ஒரு குழையை அணிந்தவனாய் சங்கு சந்திரன் தாமரைத்தண்டு இவை போன்ற வெள்ளை நிறத்தனாய் அமைக்க

வேண்டும். பலதேவ கிருஷ்ணப் பிரதிமைகளின் இடையே இடதுகையை இடுப்பில் வைத்துக் கொண்டும் வலத்கையில் தாமரையைத் தரித்துக் கொண்டு முள்ள ஒரு பெண் தெய்வம் அமைக்கப்பட வேண்டும்' என்று.

இவ்வாறு இரு பெருந் தெய்வங்களுக்கிடையே அம்மூர்த்தங்களுக்குப் பரபாகமாய் ஒரு தேவி மூர்த்தம் அமைப்பதினால் உண்டாம் சிற்ப நயத்தை உணராமல், அவ்வாறு அமைக்கப் பெறும் பெண்வடிவத்தை ஸுபத்ராதேவி என்று மயங்கி, அம்மயக்கத்தினாலேயே ஒரு ஆபாஸக் கதையையும் சிருஷ்டித்தனர் புரி என்னும் ஜகந்நாத க்ஷேத்திரத்தைப் பாடிய பௌராணிகர்கள் என்றால் சிற்ப சாஸ்திரத்திலே நமக்குள்ள அறியாமைக்கு வேறு நிதரிசனம் வேண்டியதில்லை.

சில்பக் குறிப்புகள்.

(வே. ராகவன் எழுதியது.)

புதிய சில்பங்கள்.

தெலுங்கு தேசத்தில், கிருஷ்ணாநதியின் வலது கரையில் முன் ஹிந்துக்களால் ஸ்ரீபர்வதம் என்றும், பௌத்தர்களால் அங்கு தங்கிய பௌத்தமதப் பெரியாரான நாகார்ஜுனனின் பெயரால் நாகார்ஜுன கொண்டா என்றும் கொண்டாடப்பட்ட இடத்தில், ஸமீபத்தில், அகில இந்தியப் பண்டையாராய்ச்சித் துறையினர் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக அத்புதமான புதுச்சில்பங்கள் வெளிவந்திருக்கின்றன.

இப்பொழுது ஒரு ஸ்தூபமும், இரண்டு சைத்யங்களும், ஒரு மடமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. புத்தரின் வாழ்க்கையிலுள்ள நிகழ்ச்சிகளைக் காண்பிக்கும் சில்பங்கள் சில இங்கு காணப்படுகின்றன. இவ்விடத்தில் மடம்போல் காணப்படும் இடம் சில்பிகள் தங்கி வேலை செய்த இடமாக இருந்திருக்கவேண்டும். பூர்ணகடம், கும்ப-ஹாரதி முதலிய வேலை செய்யப்பட்ட துண்டுகளும், வேலை அறைகுறையாய் ஆன துண்டுகளும் இங்கு காணப்பட்டன. இவ்வத்புதச் சில்பங்களெல்லாம் துரைத்தனத்தார் நாகார்ஜுன கொண்டாவில் நிர்மாணஞ் செய்துகொண்டிருக்கும் கலைப்பொருட் காட்சிச்சாலையில் வைக்கப்படும்.

திபெத்தும் இந்திய நூல்களும்.

இந்திய பௌத்தமதம் திபெத்திலும், அதன் வழியே சீனதேசத்திலும் பரவினபோது, ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்பட்ட கணக்கில்லா பௌத்த நூல்கள் சீனபாஷையிலும், திபெத் பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டன. ரன்ஸென் என்றவன் 1,300 ஸம்ஸ்க்ருத பௌத்த நூல்களை திபெத் மொழியில் செய்தான். குஜே என்ற திபெத்திய ராஜகுலத்தின் ஆதரவில் 75 இந்தியப்புலவர் இருந்து இப்படி மொழி பெயர்ப்புகளைச் செய்துவந்தனர். இன்று இப் புத்த நூல்கள் இந்தியாவில் ஸம்ஸ்க்ருதத்தில் ஒழிந்துபோயும், திபெத்து, சீன மொழிபெயர்ப்புகளில் இருப்பது புலவரின் பாக்கியமே. இந்நூல்களை ஒவ்வொன்றாக ஸம்ஸ்க்ருதம், திபெத்து மொழி, சீன மொழி இம்மூன்றும் படித்த சிலர் மறுபடியும் சீனத்திலிருந்தும், திபெத் பாஷையிலிருந்தும் ஸம்ஸ்க்ருதப்படுத்தி வருகின்றனர்.

இதாலியில் ரோம் நகரின் ஸர்வவித்யாலயத்தைச் சார்ந்த ஆசிரியர் க்யூஸெப்பே துச்சி என்பவர் 1928ஆம் வருஷத்திலிருந்து இன்று வரையில் ஐந்துதரம் திபெத்துக்குப் போய் சுமார் 3000 ஏட்டுச் சுவடிகளை ரோமுக்குக்

கொண்டுபோயிருக்கிறார். இப்பொழுது ஆறாம் தடவை திபெத்திற்குச் சென்று சுவடிகளை அள்ளிக்கொண்டு போக அவர் வந்திருக்கிறார்.

நம் நாட்டைச் சார்ந்த திபெத்திலுள்ள இலக்கியப் பொக்கிஷங்களின் அருமை ரோம் நகருக்குத் தெரியும். நம் துரைத்தனத்தாருக்கோ, நம் இந்திய கலாசாலைகளுக்கோ தெரியாது. ஏதோ, பீகார் கவர்ண்மெண்டாரின் உதவியைக்கொண்டும், காலஞ்சென்ற ஜயஸ்வால் என்ற ஆராய்ச்சியாளரின் உத்ஸாஹத்தினாலும், பாட்னா ஆராய்ச்சிச் சங்கத்திற்காக ராஹுள ஸாங்க்ரித்யாயனர் என்ற பௌத்த ஆராய்ச்சியாளர் திபெத்தினுள் புகுந்து சில சுவடிகளை ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

திபெத்திலுள்ள இந்திய சித்ரமும், சில்பமும்.

மேற்சொன்ன திபெத்து தேசத்தின் குஜே ராஜர்களின் ஆஸ்தானத்தில் 32 காச்மீர சில்பிகள் தங்கியிருந்தனராம். திபெத்தில் புத்தக்கோயில்களைக் கட்டுவதும் அவற்றில் சில்பவேலைகளைச் செய்வதும் அவர்களுடைய வேலை. கி. பி. 10, 11வது நூற்றாண்டுகளில் திபெத்தில் ஏற்பட்ட புத்தமடங்களில் இந்திய சில்பிகள் செய்த சிலைகளும், ஓவியங்களும் இருக்கின்றன. 11வது நூற்றாண்டில் மங்னங் மடத்தில் காச்மீர சித்திரக்காரர்கள் செய்த சித்திரங்கள் காணப்படுகின்றன. இச்சித்திரங்கள் அஜந்தாவில் காணப்படும் சித்திரங்களை ஒத்திருக்கின்றன.

நர்தங் என்ற இடத்திலுள்ள மடத்திலும் பழைய ஓவியங்கள் இருக்கின்றன. இவ்வோவியங்கள் நேபாளத்தைச் சேர்ந்த சித்திரக்காரர்களால் கி. பி. 13 ஆவது நூற்றாண்டில் வரையப்பட்டனவென்று தோன்றுகிறது.

இது போலவே போக்கங் என்ற மடத்தில் கி. பி. 15 ஆவது நூற்றாண்டில் த்வஜ படங்களில், அதாவது கொடித் துணிகளில், எழுதப்பட்ட சித்திரங்கள் 150 இருக்கின்றன. இந்திய ஆசிரியரான வஜ்ரபாணி என்பவர் திபெத்துக்கு கி. பி. 13 ஆவது நூற்றாண்டில் சென்ற போது, இந்த மடம் ஏற்படுத்தப்பட்டது. இதைத் தவிர இம் மடத்தில் இந்தியாவிலிருந்து கி. பி. 120 இல் திபெத்துக்கு சாக்கியஸ்ரீபத்ரர் என்ற ஆசாரியர் சென்றார்; அவருடைய காஷாயம், கபாலம், பாதரக்ஷை முதலியன மேற்சொன்ன மடத்தில் இன்றும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சாக்கியஸ்ரீபத்ரர் என்பவர் இந்தியாவில் விக்ரமசிலா என்ற மடத்தின் தலைவராயிருந்தவர். இவருடைய உருவமொன்று ஸுதையினால் செய்து போக்கங் மடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

(186-ம் பக்கத் தொடர்ச்சி)

கடோத்கசன்:—தாத்தாவின் கட்டளையை மீறமாட்டேன். ஸந்தேசம் அனுப்பியவர்களுக்கு என்ன பதில்?

துர்யோதனன்:—எவனுக்கடா, நான் பதில் சொல்வது? ஸரி இருக்கட்டும், இம்மாதிரி சொல்: "வீண்பேச்சில் என்ன பிரயோஜனம்? நீ யுத்தத்திற்கு வந்தால் யுத்தகளத்தில் பாணங்களின் மூலமாக உனக்கும் அந்தப் பாண்டவர்களுக்கும் தக்க பதில் அளிக்கிறேன்" என்று.

கடோத்கசன் :—தாத்தா, போய் வருகிறேன்.

திருதராஷ்டிரன்:—குழந்தாய், போய் வா

கடோத்கசன்.—[வெளியே போய்க்கொண்டு] ஏ அரசர்களே! ஸ்ரீகிருஷ்ணபகவான் உங்களுக்கு அறிவிக்கிறார் :—"நீங்கள் செய்ய நினைத்திருக்கும் நல்ல காரியங்களை இன்றே செய்துவிடுங்கள். ஏனெனில், நாளை சூரியோதயத்துடன் பாண்டவர்கள் என்ற பெயர் பூண்டு யமன் உங்களிடம் வரப்போகிறான்". என்று.

(எல்லோரும் போகிறார்கள்)

முற்றிற்று.

அனுஷ்டானப் பகுதி.

அந்தி வணக்கம்

(கௌசிகன் எழுதியது)

தெய்வ வழிபாட்டிலே இரண்டு வகை உண்டு. ஒன்று, தனியே தெய்வசிந்தனையிலே ஆழ்ந்திருப்பது; மற்றொன்று, மக்கள் ஒன்று கூடி தெய்வத்தைப் பிரார்த்திப்பது. தனித்து வழிபடுவதால், மனதைச் சுலபமாய் தெய்வத்தினிடத்துச் செலுத்த இயலுகின்றது; எளிதில் மனச்சாந்தி உண்டாகின்றது; தெய்விக சக்திகளும் அதிசீக்கிரத்திலே உண்டாகின்றன; வழிபாட்டின் பயனாக தெய்வ சான்னித்தியத்தையும் திருவருளையும் பெறுவது எளிதாகின்றது.

சமூக வழிபாட்டிலோ வேறு சில சௌகரியங்கள் இருக்கின்றன. பிறர் மனமெல்லாம் தெய்வத் தியானத்திலே ஈடுபடுவதைக் காணும்போது, நம்முடைய மனமும் அவ்வழியே செல்கின்றது. அவர்களை வென்று நாமே முன்பு தெய்வகிருபைக்குப் பாத்திரமாக வேண்டுமென்ற ஆசை எழுகின்றது. நம்முடைய தீய குணங்களும் தீய பழக்கங்களுமே பிறர் கண்ணிலே பட நாணிக் குன்றி நாசமடைகின்றன. வழிபடும்போது, பிறரிடம் நாம் சுமுகமாகவும் இனிமையாகவும் நடந்து கொள்ள முயல்வதால், போலியன்பிலே தொடங்கினாலும், அது உண்மைப் பிரேமையாக மாறிவிடுகின்றது.

ஆனால், தனிவழிபாட்டிலே சில தோஷங்கள் இருக்கின்றன. 'நானே தனிப்பட்ட பக்தன்; பிறருக்கு என்னளவு பக்தி இராது' என்ற அகம்பாவம் பிறக்க இடமுண்டு. பகவத்பிரீதியைப் பெற்றாலும், அவ்வின்பத்தைத் தனியே அனுபவிப்பானாய், பிறருடன் பகுத்து அனுபவிப்பதாலுண்டாம் பேரின்பத்தை இழந்து விடுகிறான். இது போலவே, சமூக வழிபாட்டிலும் சில குறைகள் உண்டு. மனமும் இந்திரியங்களும் பகிர்முகமாகவே செல்லப் பழகியவையாதலால், தனிப்பட இருந்தாலொழிய மனதை ஒருமுகப்படுத்த இயலாது. பிறரைக் காணுங்கால் நமக்குப் பெருமையோ பொறாமையோ ஏற்படுவது எளிது; பெருமை பொறாமை இரண்டும் வழிபாட்டுக்கு இடையூறுகள்.

எனவே, இவ்விரண்டு வழிபாட்டுமுறைகளையும் ஆராய்ந்து, மூன்றாவதான முறையொன்றினைக் கண்டு பிடித்தனர் நம்முன்னோர். குறிப்பிட்ட வேளைகளிலே, நாம் அனைவரும் தனித்தனியாக இருந்து கடவுளைத் தியானிக்க வேண்டும். ஆனால் 'நான் தனியே கடவுளைத்

தியானிக்கிறேன்' என்ற உணர்ச்சியை நீக்கி, 'நாம் எல்லோருமாய் உலகமாகிய ஒரு பெருங் கோயிலிலே ஒன்றுகூடி கடவுளை வேண்டுகின்றோம்' என்ற ஐக்கிய வுணர்ச்சியோடு தெய்வத்தைப் போற்றவேண்டும். இவ்வுணர்ச்சி எழுவதற்கு, 'ஏக காலத்திலே தியானம் செய்தல்' என்பது அனுகூலமாகின்றது; மானிட வர்க்கம் மட்டுமே யன்றி, ஸ்தாவர ஜங்கமங்களாகிற ஸகல ஜீவராசிகளும் அமைதியாயிருக்கும் முச்சந்தி வேளைகளையும் பொறுக்கியெடுத்துதவி, இவ் வேளைகளிலே தெய்வவழிபாட்டினை இப்புதிய முறையிலே நடத்துங்கள் என்று நியமித்தார்கள் நம் முன்னோர்கள்; அனுஷ்டித்தும் காட்டினார்கள்; அதனாலே தான் இவ் வழிபாட்டை அனுஷ்டானம் என்று சொல்கிறோம். இவ்வாறு வழிபடும் போது, ஸகல ஜீவர்களுக்கும் அறிவு அளித்து உயிரளிக்கும் ஒரு தனிக் கடவுளை சூர்ய மண்டலத்திலே தியானித்து, 'செங்கதிர்ச் செல்வன் சிறந்த வொளியினைத் தேர்கின்றோம், அவன் எங்கள் அறிவினை ஏவி நடத்துதல் வேண்டியே' என்ற பொருளுடைய மந்திரத்தால் வழிபடவேண்டு மென்று விதித்தார்கள். இவ்விதியினை ஏற்றுக்கொண்டு நடந்தால், சமூகப்பிரார்த்தனை தனித்தியானம் ஆகிய இருவகை வழிபாட்டினாலும் உண்டாகும் சகல நன்மைகளையும் பெறக் கூடுமல்லவா?

மாசி பங்குனி அனுஷ்டானங்கள்.

(டாக்டர் வே. ராகவன் எழுதியது.)

திருக்கணித பஞ்சாங்கத்தை எடுத்தேன். பின்வருமாறு போட்டிருந்தது:

மாசி 21உ பௌர்ணமீ—ஹோளிகா,
காம தகனம்.
" 22உ ப்ரதமை-ஆம்ரகுஸுமாசனம்.
பங்குனி 10உ ஆந்தோளன திருதீயை,
ஸௌபாக்ய கௌரீ விரதம்.
" 20உ மதனத்ரயோதசி,
தமன சதுர்தசி

இவையெல்லாம் என்ன வென்று பலர் அறிய விரும்பலாம்.

மாசி பௌர்ணமியன்று தென்னாடுகளில் கிராமங்களில் தெருத்தெருவாய் நாலு சிறு கம்பங்களை நட்டு, அவற்றை தோரணத்தால் சுற்றி யலங்கரித்து, நடுவே ஒரு சிறு கம்பில் ஒரு வரட்டி கட்டித் தொங்கும் காட்சியைக் காணலாம். இது, காமண்டி யென்றும் காம தகனம் என்றும், காமதேவன் சிவனால் எரிக்கப்பட்டதைக் கொண்டாடும் விழா. இவ் விழாவில் காமன் எரிந்தானென்றும், எரியவில்லை யென்றும் மஹாராஷ்டிர மெட்டான லாவணியில் இரு வகுப்பாய் வாதம் செய்து பாடுவது வழக்கம். 'எரிந்த கட்சி லாவணி, எரியாத கட்சி லாவணி' யென்று புஸ்தகங்கள் இருக்கின்றன; எரியாதகட்சி லாவணியென்ற ஒரு நூலின் முகப்பில் பின்வருமாறு காமண்டி வர்ணிக்கப்பட்டிருக்கிறது:

"காமன் பண்டிகையென்று வருடந்
தோறும்
காணும் மாசிப்பிறை கண்டவுடனே
நீங்கள்
ஆமணக்கு பேய்க்கரும்பு கட்டைக்
கொண்டு
அருமையுடன் நட்டு வைக்கோற் பிரியைச்
சுற்றி
பாமரர்கள் ராட்டி ஒன்றை தொங்கவிட்டு
பங்குனிமாதப் பருவமட்டு மங்கே
நேமமதாய் கடலை மொச்சை தேங்காயிட்டு
நெறியாகக் கொளுத்தச் சொன்ன புராணம்
காட்டே"

இது காமன் பண்டிகையில் எரியாத கட்சியின் கேள்வி. இதன் பதிலில் இது பொங்கல் தீபாவளிபோல் ஆதாரமுடைய விழாவல்ல; ஆனால்—

“ஓலிப்பண்டிகை யென்றன்னாளில் வட
தேசத்தா-
ருகந்துமே செய்தார்
புகழ்ந்துமே மிக
மகிழ்ந்துமே அதை
யோத்துக்கஞ்சனார் பஞ்சாங்கத்திலுமி
ருக்கப் பார்த்-
துள்ளோமே உண்மை சோல்வோமே”

என்றும், ‘இதை தஞ்சையில் மராட்டியரும் லாலாக்களும் செய்து வந்தனர்; அதில் இரண்டு கட்சியாய் அவர் ஆனார்; அதைக்கண்டு நாமும் தமிழர் காமன் பண்டிகையை கைக்கொண்டு நடத்த வாரம்பித்தோம்’ என்று பதில் பாட்டு தெரிவிக்கிறது.

“கோஞ்ச காலமாயிது தஞ்சையிலேற்பட்ட
கோலமே — ”

‘இம்மாசிப் பிறை’ முதல் ‘பங்குனிப்பருவம்’ வரையில் லாவணிகள் பாடப்படும்போல் இருக்கிறது. லாவணியில் போட்டா போட்டியாய் காமன் எரிந்தானென்றும், எரியவில்லை யென்றும் அவரவர் பாட்டுகள் செய்து கொண்டு வருவார்கள் போலிருக்கிறது. எரியாக்கட்சி ஸாஹித்யமொன்றில் காமன், சிவன் இவர்களுடைய புராணக்கதைகள் முழுதும் அலசப்பட்டு, இறுதியில் ‘காமனை எரித்துவிட்டதாய்ச் சொல்லும் சிவனே சக்தியுடன் யோனி (ஆவுடை)லிங்க உருவமாய் இருக்கும் போது, காமன் எப்படி எரிந்ததாய்ச் சொல்வது’ என்று முடிக்கப்பட்டிருக்கிறது. இது தஞ்சையிலேயே நம் தமிழருக்கு மராட்டியரும், லாலாக்களும் கொடுத்த விழாவாயிருந்தாலும், இதன்மூலம் ஏற்பட்ட பாடல் முதலிய விஸ்தாரங்கள் தமிழர்களே செய்து கொண்டதுபோல் தோன்றுகிறது.

இது காமன் எரிந்ததைக் குறித்த விழாவாய் எப்படி ஆயிற்று? மேற்சொன்ன பாட்டிலிருந்து இது வடக்கிருந்து வந்த ஹோளீ பண்டிகை யென்று நன்றாய் தெரிகிறது. ஹோளீ அல்லது ஹோளிகா என்பது மிகப் பழமைகொண்ட விழா. வாத்ஸ்யாயனர் தம் காமஸூத்ரத்தில் அதைச் சொல்லியிருக்கிறார். இன்றும் அதை வடநாடுகள் முழுதும் கொண்டாடி வருகின்றன. முக்கியமாய் ஒரு சொக்கப்பானை யொன்றை அவ்வடநாட்டார் செய்வதைப் பார்க்கிறோம்; அவ்வட்டமான நெருப்பை அவர் சுற்றி வந்து ஏதோ புலம்புகின்றனர்; எல்லோரும் ஒருவர்மேல் ஒருவர் சிவப்பு நீரை வாரி இறைத்துக் கொள்ளுகிறார்கள். வங்காளத்தில் இவ்விழா சில ரஸாபாஸமான ஸ்வரூபங்களை அடைந்திருக்கிறது. அதில் எப்படியோ காதல் நிகழ்ச்சிகளும், மக்கள் வரம்பற்று இன்புற்றிருக்கும் ஸந்தர்ப்பங்களும் நேர்ந்திருக்கின்றன வங்காளத்தில். ஆகையால், இந்த ஹோளீ என்ற பண்டிகையுடன் காமதேவன் ஸம்பந்தமான பழம் விழா வொன்றும் கலந்திருக்கிறது என்றும் ஊஹிக்கலாம்.

பவிஷ்யோத்தர புராணத்தில் ஹோளியின் கதை காணப்படுகிறது. முன் ரகு மஹாராஜன் அரசு புரிந்து கொண்டிருக்கும்போது, ‘ஹோளீ’, ‘டேண்டா’, ‘அடாடா’ என்று வழங்கப்பட்ட அரக்கியொருத்தி முக்கியமாய் குழந்தைகளைப் பிடித்து வந்தாள். அவளுடைய விருத்தாந்தத்தை வஸிஷ்டர் தெரிவிக்கிறார்: இவ்வரக்கி சிவனிடம் சாகா வரம் பெற்றும், பைத்தியங்கள், குழந்தைகள் இவ்விரண்டு பேரிடம் மட்டும் பயப்படுவாளாம். இந்தப் பயத்தால் குழந்தைகளிடம் பகை கொண்டு, அவர்களைத் தெரியாமல் அணுகி, அவர்களை துன்புறுத்தி வந்தாளாம். ப்ரஜைகள் ரகுவிடம் வந்து அலறினார்கள்; வஸிஷ்டர் டேண்டாவை ஒழிக்கும் வழியைச்சொன்னார்: “குழந்தைகளெல்லாம் மரத்துண்டுகளை ஆயுதமாய்க்கொண்டு வீரர்கள் போல சாரைசாரையாய் வெளிவரட்டும்; மரத்துண்டுகளையும் இதரப் பொருள்களையும் போட்டு பெருந்தீயொன்றை எழுப்பட்டும்; தங்கள் வாயில் வந்த ஆபாஸமான வசவுகளை யெல்லாம் சொல்லி, அத்தீயைச் சுற்றி கூத்தாடட்டும்.” ரகுவும் ஜனங்களை அப்படியே செய்யச்சொன்னான். அந்தத்தீயில் வெக்கை தாங்காமல் டேண்டா தானாய் விழுந்து மாண்டாளாம். இதற்கு

முந்திய இரவில், குழந்தைகளை பத்ரமாய்ப் பார்த்துக்கொண்டு, அவர்களுக்கு தித்தித்த பக்ஷணங்களைக் கொடுக்க வேண்டுமாம். இது தான் புராணத்தில் காணப்படும் ஹோளீ; இதுதான் வடநாட்டார் கொண்டாடும் ஹோளீ.

மேற்சொன்ன புராணக் கதையினால் இவ் விழா முழுதும் தெளிவடைந்ததாய்த் தெரிய வில்லை. டேண்டா என்பது குழந்தைகளை முக்கியமாய் பாதிக்கும் குளிர்காலப் பேய் என்று நாம் வைத்துக் கொள்ளலாம். ஹோளி யுடன் குளிர் நீங்குதலைக் குறித்து, சொக்கப் பானை நடத்தப் படுகிறதோவென்று தோன்று கிறது.

ஆம்ர குஸுமாசனம்.

ஹோளியுடன் காமதேவனின் விழா வொன்று கலந்திருத்தல் கூடுமென்று முன் சொன்னேன். அது உண்மை என்று ஹோளிக்குப் பிறகு பஞ்சாங்கத்தில் குறித் திருக்கும் அனுஷ்டானமான 'ஆம்ரகுஸுமாசன'த்திலிருந்து தெரிகிறது. இதையும் நம் பவிஷ்ய புராணத்தில் ஹோளியுடன் சேர்த்து வர்ணிக்கப்பட்டிருக்கிறதைக் காண் கிறோம்.

ஹோளியான மறுநாள்; பிரதமை; அகங் கள் எல்லாம் சுத்தஞ் செய்யப்பட வேண்டும். பழைய பொருள்கள், அதாவது, தோட்டங் களில் விழுந்த பழம் இலைகள், வீட்டிற்குள் குவிந்த பழம் குப்பை கூளங்கள், கிழிந்த ஆடைகள் எல்லாம் ஹோளியில் ஹோமமா யின. குளிர் காலம் முற்றிற்று. வஸந்தகா லம் ஆரம்பமாயிற்று. சூரிய வெப்பம் அதி கரிக்க ஆரம்பிக்கிறது. கோடையையும் வஸந்த ருதுவையும் நாம் கழிக்கும்போது, நமக்கு முக்கிய ஸாதனமாயிருப்பது சந்தனம். மன்மதனுக்கு முக்கியமான அஸ்திரம் மாம் பூ, அதாவது, ஆம்ரகுஸுமம். ஆகையால் இவ்விரண்டையும் குறித்து ஒரு விழா; வஸந் தாரம்பத்தில் நாம் காமதேவனையும், வஸந்த ருதுவையும் குறித்து, நமது போக ஸாத னங்களில் முக்கியமான சந்தனத்தைக் கொஞ் சமாய் மாம்பூக்களோடு சேர்த்துப் பருக வேண்டும்.

கூடத்தில் தரையைத் துலக்கி, பல வர்ண மான மாவினாலும் அரிசியாலும் விசித்ரமான கோலங்கள் போட்டு, அதன் நடுவில் பூர்ண கலசம் ஒன்றை வைக்கவேண்டும். கலசத்தின் வாயில் புதிதாய் துளிர்த்த மாங்கொத்து வைக்கப்பட வேண்டும். பூர்ணகலசத்திற்கு முன் ஒரு ஜோடி பாதரக்ஷையும், மெல்லிய வஸ்திரமொன்றும் வைக்கப்பட வேண்டும். பாதரக்ஷையும், மெல்லிய வஸ்திரமும் குளிர் காலம் முடிந்து வெப்பமதிகரிக்கும் காலத் தைக் குறிக்கும் போலும். தம்பதிகள் தம் மை அலங்கரித்துக்கொள்ள வேண்டும்; முக் கியமாய் அவர்கள்மேல் உடல் முழுதும் நன் றாய் சந்தனத்தைப் பூசிக்கொள்ள வேண்டும்.

நம் நாடு சூரியனின் அனுக்ரஹத்தைப் பூர்ணமாய் பெற்ற நாடு. வெப்பத்தைத் தணித்துக்கொள்ள நாம் ஏற்படுத்திக்கொண்ட ஸாதனங்களில் சந்தனக்காப்பு முக்கியமானது. ஆனால் இப்பொழுதோ, மேல்நாட்டு நாகரீகம் பரவ, நம்மில் பலர் வெற்றிலையும் போடமாட் டார்; சந்தனம் பூசிக்கொண்டாலும் பட்டிக் காடு என்று நினைப்பர்.

இப்படி சந்தனம் பூசிக்கொண்டு, பூர்ண கலசத்தின் முன்வந்து கொஞ்சம் சந்தனக் குழம்பையும், சில மாம்பூக்களையும் எடுத்து தம்பதிகள் பருகவேண்டும். இவ் வனுஷ்டா னத்தால் மன்மதனை வழிபட்டதாகும். தம் பதிகளுக்கு மனதிலுள்ள காமமும் கைகூடும். இந்த சந்தன மாம்பூ பிராசனத்தின் பிறகு விருந்துண்ண வேண்டும்.

ஆந்தோளன திருதீயை, ஸௌபாக்ய கௌரீ விரதம்.

பங்குனி 10உ; திருதீயைத் திதி; இன்று ஆந்தோளன திருதீயை, ஸௌபாக்ய கௌரீ விரதம் என்று இரண்டு அனுஷ்டானங்களைக் காண்கிறோம். இவை என்ன?

பங்குனியில் அனேகமாய் கோயில்களில் வருஷ உத்ஸவம், அதாவது ப்ரம்மோத்ஸவம் ஆரம்பமாகிவிடும். இப்படி உத்ஸவங்களை நாம் நம் வீடுகளிலும் முன்பு நடத்தி வந்ததாகத்

தெரிகிறது. ஆந்தோளன திருதீயை என்பது பங்குனி மாதம் சுக்ல திருதீயை யன்று நாம் தேவியை சிவனுடன் ஊஞ்சலில் வைத்துக் கொண்டாடுவது. இரவு கண் விழித்து, மறு நாட்காலை ஊஞ்சலில் வைத்த சிவனையும் உமையையும் போன்ற விக்ரஹங்களை தானஞ் செய்ய வேண்டும். இப்படி ஆதி தம்பதிகளான சிவனையும் உமையையும் சேர்த்துக் கொண்டாடும் நாள், கணவன் மனைவி இவ்விருவருடைய மாங்கல்யத்திற்கு அனுகூலமானது. ஆகையால்தான் அன்று ஸௌபாக்ய கௌரீ விரதம் என்றும் போடப்பட்டிருக்கிறது. வராஹபுராணத்தில் தம்பதிகள் தம்மிருவருடைய காதலின் காப்புக்காக சிவன் உமை இருவருடைய விக்ரஹங்களைத் தயாரித்து, முன்னிரவு பட்டினியிருந்து, பூஜை செய்துவிட்டு, கோதுமையாலான உணவு மட்டும் சாப்பிடவேண்டும் என்று சொல்லப்படுகிறது. கருட புராணத்தின்படி, இந்த கோதுமைவுணவில் உப்பு கலக்கக் கூடாது.

மதன த்ரயோதசி.

மதன த்ரயோதசி யென்பது ஒவ்வொரு மாதமும் நடத்தலாம். திரயோதசி திதி மன்மதனுக்கு விசேஷமானது. அந்த திதியில் முன் காமதேவன் சிவனைப் பூஜை செய்து ஸௌந்தர்யத்தை அடைந்தான். ஆகையால் தமக்கு ரூபலாவண்யங்கள் அதிகப்படவேண்டுமென்று விரும்புவோர் இந்த அனுஷ்டானத்தைச் செய்வார்கள். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புஷ்பத்தையும் நிவேதனத்தையும் கொண்டு சிவனைத் திரயோதசியன்று பூஜை செய்து பங்குனியில் முடிக்கலாம். பங்குனி மாதத்தில் வரும் மதனத்ரயோதசியில் மட்டுமாவது சிவனைப் பூஜை செய்யலாம்.

தமன சதுர்தசி.

தமன சதுர்தசி பங்குனியில் சதுர்தசியில் வருகிறது. தமனம், தமனகம் என்பது ஒரு வகைச் செடியோ, மரமோ. பங்குனியில் இது பூக்கும் போலிருக்கிறது. இப்பூவைக் கொண்டு சைத்ர சுக்ல சதுர்தசி யன்று (இது பங்குனி சுக்ல சதுர்தசி என்றும் சொல்லப்படுகிறது) சிவனைப் பூஜைசெய்து, விருந்தளித்து, முடிந்தால் சிவனுக்கு ரதோத்ஸவமும் நடத்தி வைக்கவேண்டும். இது ஸ்கந்த புராணத்திலும், பத்மபுராணத்திலும் சொல்லியிருக்கிறது. சிவனுக்கு மட்டுமல்லாமல், இதர தைவங்களுக்கும் பங்குனியில் தமன பூஜைகள் உண்டென்று தெரிகிறது.

நாட்டியப் பகுதி

சில அபிநயக் கதைகள்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை ஆடி அபிநயிப்பது பெரியோர் வழக்கம். அவ்வழக்கத்தை யொட்டி எழுந்த சில கதைகள் சில பாசுரங்களுக்குச் சிறந்த வியாக்கியானங்களாக அமைந்துள்ளன. அவை இங்கு எழுதப்படும். "பிடித்தேன் பிறவிக்கெடுத்தேன் பிணிசாரேன்" என்று தொடங்கும் திருவாய்மொழிப் பாட்டினை ஸ்ரீராமானுஜர் தனியே ஓரறையிலே அபிநயித்துக்கொண்டிருந்தார். அவ்வறையின் கதவு தாளிடப்பட்டிருந்தது; அவருடைய சிஷ்யருள் முக்கியரான பிள்ளான் என்பவர் கதவின் இடுக்காலே பார்த்து, "என்ன, 'பிடித்தேன்' பாசுரமோ" என்று கேட்டாராம். அதைக் கேட்ட ஸ்ரீராமானுஜர் "யாரது? பிள்ளானோ?" என்றுக் கதவைத் திறந்து பார்த்து, "நீயே திருவாய்மொழிக்கு உரையிடத் தகுந்த யோக்கியதையுடையவன்" என்று கொண்டாடினாராம்.

"அகப்பட்டேன் வாசுதேவன் வலையுளே" என்று வரும் திருவாய்மொழியை ஸ்ரீரங்கத்துக் கோயிலிலே ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் அபிநயித்துப் பாடும்போது வலையாக அபிநயித்தாராம்; அப்பொழுது கோஷ்டியின் முன்னணியிலே நின்ற ஸ்ரீராமானுஜர் "திருக்கண்களைக் காட்டியருளினர்". 'வாசுதேவன் வலையென்பது அவனுடைய 'திருக்கண்களே' என்பது ஸ்ரீராமானுஜர் அபிநயித்துக் காட்டிய உரை. ஈட்டிலே இவ்வுரைக்கு ஆதாரமாக "கமலக்கண் என்னும் நெடுங்கயிறு" என்ற ஆண்டாள் வாக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இக்கருத்தினை விஸ்தரித்து ஆறுயிரப்படி உரைகாரரும் "ஸ்வரூப ரூப குண சேஷ்டிதங்களாகிற வலையுள்ளே" என்று பொருள் கூறியுள்ளார்.

பெருமாள்திருமொழியிலே ஒரு இளவாய்ச்சி கண்ணனோடு ஊடி எள்கி யுரைப்பதாகப் பாடிய பாடல்களுள் ஒன்றிலே, "நீ இன்று போதியேலும் இன்னம் என் கையகத்து ஈங்கு ஒருநாள் வருதியேல், என் சினம் தீர்வன்" என்றுள்ளது. இப்பாடலை ஸ்ரீராமானுஜருடைய சகோதரரான எம்பார் முன்னிலையிலே உஞ்சப்பிள்ளை என்னும் பெரியார் அபிநயித்துப் பாடும்போது, 'என் சினம் தீர்வன்' என்பதற்கு அபிநயமாகக் காலாலே பாய்ந்து தள்ளுவதாகக் காட்டினாராம். அதை கண்ட எம்பார், "கெடுவாய்! அங்ஙனே செய்தாளாகில் அவனுக்குப் பொல்லாதோ? அவனுக்கு அதன்மேற் தேட்டம்? அங்ஙன் அன்று காணும்" என்று கையை இட்டு முகத்தை மறைத்து திரிய வைத்தருளிக் காட்டினாராம். "நாயகி தன் திருமுகத்தைத் திருப்பிக் கொண்டு நாயகனைக் காணாதிருப்பதே ஊடலின் பாற்படும்; அவனைக் காலால் உதைப்பது அவனுக்கு அபிமதமான செயலாகி விடும்" என்பது எம்பார் அருளிய அபிநய வுரை.

புஸ்தக விமர்சனம்

நவமணிமாலை. (இனிய கதைக்கொத்து.) ஸ்ரீமதி எஸ். ஆர். ஜெயலக்ஷ்மி (மிஸஸ் கே. ஸ்ரீனிவாஸன்) எழுதியது. லோத்ரா பிரஸ், ராயப்பேட்டை. [விலை அணா 6.]

பாஷையை ஒரு மரமாக உருவகப்படுத்திய வர்ணனை ஒன்று உண்டு. இலக்கணம் அவ்விருக்ஷத்தின் வேர்; அடிமரமும், கிளைகளும் பேச்சில் வழங்கும் சொற்கள்; பல வகைப்பட்ட வசன நூல்கள் இலைகள்; அரிய காவியங்கள் பழங்கள்; கற்றவருக்கும், கல்லாதவருக்கும் மகிழ்ச்சி தரும் சிறு கதைகள், பூக்களை ஒத்தவை போலும்.

தொன்றுதொட்டு நம் நாட்டில் சிறுகதைகள் வழங்கி வந்தன. 'பல பாஷைச் சிறு கதைகள்' என்ற புஸ்தகத்தில், ஹிதோபதேசக் கதைகள் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. மேல் நாட்டார், முதலில் சிறுகதை எழுதும் வழியை இந்தியக் கதைகளிலிருந்து தான் கற்றுக்கொண்டார்களென்பது ஒரு கொள்கை. ஆனால், தற்காலத்தில் மேனாட்டில் வழங்கும் சிறுகதைகளுக்கும், ஹிதோபதேசக் கதைகளுக்கும் முக்கிய வித்தியாசங்கள் உண்டு; அவை வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவை.

ஒவ்வொரு சிறு கதையும், கற்பனையிலும் நடையிலும் தனிச்சிறப்பு வாய்ந்திருக்க வேண்டும் என்பதே தற்காலக் கதை இலக்கணம். 'ஒன்றைப்போல ஒன்றாய்ப் பல இலைகள் துளிர்ப்பது போல, ஒரு கதையின் போக்கை ஒட்டிப் பிறகதைகள் எழுதிப் பயனில்லை' என்பதே தற்காலத் துணிபு. புதிய கற்பனைகள் சிலருக்கே அபூர்வமாகத் தோன்றுமாதலால், மேனாட்டார் கொள்கைப்படி பாராட்டத்தக்க சிறு கதைகள், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் வெகு சிலவே உள்ளன. வருஷந்தோறும் ஆயிரக்கணக்காக வெளிவரும் சிறு கதைகள், வீண்பொழுது போக்கத் தான் ஏற்றவை; அத்தனை சாவியில் ஒரு மணி அகப்படுவது கூட அரிதுதான்.

நம் நாட்டில் இந்தக் கஷ்டமும் போட்டியும் கிடையாது. அநேக கதைகள், பிறபாஷைக் கதைகளின் மொழிபெயர்ப்பாயிருப்பதால், சுயமாக எழுதுவதே ஒரு பெருமை; அதிலும், மற்றக் கதைகளை 'ஒட்டியோ வெட்டியோ' எழுதாமல், நடைமட்டுமன்று, கதையும் புதிதாக இருந்துவிட்டால், அதைப் பாராட்டாமலிருப்பது பெரும் குறையேயாகும். அன்றியும் 'ஒரு ஸ்திரீ ஸ்திரீகளுக்காக எழுதியது; உயர்ந்த நோக்கங்களுடன் எழுதியது' என்றெல்லாம் யோசித்துப் பார்த்தால், 'நவமணி மாலை' யைப் புகழ்வது தகும். இந்த யோசனைகளை ஒதுக்கிவிட்டு, புஸ்தகத்தின் சாரத்தைப்பற்றி மட்டும் சொல்வதாயிருந்தாலும், புஸ்தகம் 12 அணா கொடுத்து எல்லோரும் வாங்கி வாசிக்கத் தக்கதே என்று சொல்லலாம். இதிலுள்ள கதைகளின் போக்கும் நடையும் அனாயாசமாய்ப் படிக்கத் தக்கவை. கதாநாயகிகள் அனைவரும், ரம்பையைப் பழிக்கத்தக்க அழகு வாய்ந்தவராயும், அவர்கள் விரும்பாத 'வரன்'கள் அனைவரும் குரூபிகளாகவும் இருப்பதும், ஒவ்வொரு கதையும் 'சுபமாய்' முடிவதும், வாழ்க்கையை ஒட்டா விட்டாலும், நாம் சில வேளைகளில் பகற்கனவில் பாவிக்கும் சந்தர்ப்பங்களை ஒத்து, நமக்கு ஒருவகை எளிய மகிழ்ச்சி தரக்கூடியவையாயிருக்கின்றன. நடையில், பேச்சுப் பிரயோகங்களும் ஆங்கிலப் பதங்களும் விரவியிருப்பதும், கதைகளில் நவ நாகரிகச் சின்னங்கள் பல விவரிக்கப்பட்டிருப்பதும், 'இவை தற்காலத்தியக் கதைகள்' என்ற சாரத்தைத் தருகின்றன. தமிழ்ச் சொல்லுக்கு அர்த்த புஷ்டி குறைவாயிருப்பதாகத் தோன்றினால், அதனருகில் ஒரு ஆங்கிலப் பிரதி

பதத்தையும் உபயோகிக்கும் வழக்கம் இப்புஸ்தகத்தில் வேண்டியபடி கையாளப்பட்டிருக்கிறது. அதை அநுசரித்து, இக்கதைகளின் விசேஷ குணத்தையும், குற்றத்தையும் ஒரே வார்த்தையால் குறிப்பிடலாம்; அதாவது, ஒருவித 'நிஷ்கபடம்' (Naivete) இக்கதைகளில் பொலிந்து வாசகர்களுக்கு சில வேளை மகிழ்ச்சியும் சிலவேளை சிரிப்பும் உண்டாக்குகிறது.

இப்புஸ்தகத்துக்கு, ஸ்ரீ: எஸ். சத்தியமூர்த்தி அவர்களும், ஸ்ரீ. ஸர். எஸ். சிவசாமி அய்யர் அவர்களும் சிறப்புரை எழுதியிருக்கிறார்கள்.

லக்ஷ்மி.

கமால் அத்தா தூர்க்: பிரபஞ்சஜோதி பிரசுரம்: சுடர் 6. விலை 1—8—0

பாலஸ்தீனம்: பிரபஞ்சஜோதி பிரசுரம்: சுடர் 7: விலை 0—8—0 :

கிடைக்குமிடம்: பாரத பந்தர், புஸ்தக வியாபாரிகள் 47, 31-வது வீதி, ரங்கூன்.

'பிரபஞ்ச ஜோதி' பிரசுராலயத்தில் இப்பொழுது எழு குழந்தைகள் தவழ்ந்து விளையாடுகின்றன. ஆனால் இதைக் கண்டு இந்த ஆலயத்தின் 'கொத்தனே', நாமோ மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை; திருப்தியும் அடையமாட்டோம். ஏன்?' என்று வார்த்தை பேசுகிறார்கள் இப்பிரசுராலய கர்த்தர்கள். உலகத்திலே தற்காலத்தில் நிகழும் செய்திகளையும் அவற்றை நிகழ்விக்கும் பெரியோர்களையும் பற்றிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய உலக மொழிகளிலே வந்துள்ளன. ஆங்கிலமறியாத தமிழ் மக்களுக்கும் இவ்வுலக நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவு அத்யாவசியமல்லவா? இந்த "அறிவுப்பசியை விரைவில் தணிக்கவேண்டுமென்ற ஆவல் எமக்கு அதிகமாயிருக்கிறபோது, இந்த எழு குழந்தைகளைக் கண்டு மட்டும் நாம் எப்படி திருப்தியடைய முடியும்" என்று நினைக்கிறார்கள் இச்சுடர்களைத் தோற்றுவித்த பிரபஞ்ச ஜோதியார். பெற்றுக் கொடுத்தவர்களுக்குத் திருப்தி யில்லா விட்டாலும், இக்குழந்தைகளை உலக ஸேவைக்கென்று உதவியவர்களிடம் தமிழ் மக்கள் அனைவரும் நன்றி செலுத்தாதிருக்க இயலாது.

இந்தக் குடும்பத்திலே கடைசிப் பிள்ளைகளாகிய 6வது, 7வது சுடர்களைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

கமால் அத்தாதூர்க் துருக்கி நாட்டின் தலைவராகப் பதினைந்து வருஷம் இருந்து சென்ற நவம்பர் மாதந் தான் காலகதியடைந்தார். இன்று (4-3-1939) துருக்கியை ஆண்டுவந்த கடைசிக் காலிபா தலைநகரினின்று வெளிச்சென்று 15 வருஷங்கள் ஆகின்றன. இவர் வெளிச் செல்வதற்கும் துருக்கியை நெடுங்காலமாய்ப் பீடித்து வந்த சம்பிரதாயம் மூட நம்பிக்கை முதலிய நோய்களைத் தீர்த்து அழியாத இளமையை அளிப்பதற்கும் முக்கிய காரணமாயிருந்ததாலே, 'கமால்' என்னும் பெரியார் 'அத்தா தூர்க்' அதாவது 'துருக்கியின் தந்தையர்' என்று போற்றப் பெற்றார். இவர் செய்த சீர்திருத்தங்களையும் தேச நன்மைக்காக இவர் பாடுபட்ட முறைகளையும் நம்மவர் அறிந்து அவற்றை நமது நாட்டுக்குப் பொருந்தியவாறு மாற்றி அமைத்துக் கொண்டு முன்னேற்றமடைய முயல்வதற்கு இந்நூல் பெரிதும் உதவக் கூடும். இதற்கெனவே, 'தெரிந்து கொள்ள வேண்டிய தென்ன?' என்றொரு அனுபந்தத்தையும் ஆசிரியர் இதனிறுதியிலே சேர்த்துள்ளார்.

'பாலஸ்தீனம்' இப்பொழுது சமாசாரப் பத்திரிகைகளிலே பெரிதும் அடிபடுகிறது. இப் புனித பூமிக்குரிய புராதன கௌரவம் ஒருபுறமிருக்க, இப்பொழுது இது பல ஆகாச

மார்க்கங்களும் ஸமுத்திர மார்க்கங்களும் சந்திக்கும் இடமாக இருப்பதாலும், மண்ணெண்ணெய் முதலிய சரக்குகள் இங்கே கிடைப்பதாலும், ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இதன் மேல் திருஷ்டி. மஹாயுத்தத்திற்குப் பிறகு இது துருக்கியின் ஆதிக்கத்தினின்றும் நீக்கப்பட்டு, பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் பாதுகாவலில் ஒரு 'ஹை கமிஷனரால்' பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ளவர்கள் பெரும்பான்மையோர் அரபியரும் யூதரும்; சிறுபான்மையோர் கிறுஸ்தவர்கள். இவர்களுள் அரபியரும் யூதரும் தேசீய இயக்கங்களைத் தொடங்கி மும்முரமாக நடத்தி வருகிறார்கள். இருதிறத்தாரின் முயற்சிகளையும் அவை சம்பந்தமாக பிரிட்டிஷார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளையும் எளிய நடையிலே தெளிவாகக் கூறுகிறது இந்நூல்.

இவ்விரு நூல்களையும் எழுதி யுதவியவர் வெ. சாமிநாத சர்மா என்னும் பிரபல எழுத்தாளர் ஆவர்.

மும்மொழியாளன்.

நாரத பக்திஸூத்ரம், பஜகோவிந்தம், ஆத்மாநுஸந்தானக் கிரமம் (மூலத்துடன் தமிழ் மொழி பெயர்ப்பு.) குகதாஸ் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. (கிடைக்குமிடம்:--- காரியதரிசி, குகாலயம், சேங்காலிபுரம், தஞ்சாவூர் ஜில்லா.) 1938. விலை அணு 12.

மேற்கண்ட நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்தவர் சேங்காலிபுரம் நடராஜையர் என்னும் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய பக்தர். பக்தியினது பெருமையைக் கூறும் எட்டு திருவாக்குகள் தலைப்பிலே கொடுக்கப்பட்டுள்ளன. காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியரவர்களின் ஸ்ரீமுகத்திலே இம்மொழி பெயர்ப்புகள் ஸர்வஜநோபகாரமானவை என்று கூறி அவை நிரர்களமான பிரசாரத்தை அடையும்படியும் ஆசீர்வதிக்கிறார்கள். ஸூத்ரம் சுலோகம் முதலிய மூலங்களை நாகரம் கிரந்தம் தமிழ் ஆகிய மூன்று லிபிகளிலும் கொடுத்திருப்பது நாகர கிரந்த லிபிகள் தெரியாதவர்க்குப் பேருபகாரமாகும். தமிழை பக்தி மார்க்கத்துக்குரிய பாஷையென்று சொல்லலாம். தாய்ப் பாஷையாலே மனது உருகி பரவசப்படும். பக்தியின் ஸ்வரூபத்தையும் ஸாதனங்களையும் விளக்கும் நாரத ஸூத்திரங்களைத் தமிழ் மட்டும் அறிந்தோருக்கும் தெளிவாகக் கூறுவது இம்மொழி பெயர்ப்பு. "பஜகோவிந்தம்" சுலோகங்கள் அளவிற் சிறியன; ஆனால் தத்துவங்களால் நிறைந்தன. இவற்றை அர்த்தஞானத்தோடு பாராயணஞ் செய்து மனனஞ் செய்வதற்கு இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு உதவி புரிகின்றது. உபநிஷத்து வாக்கியங்களும் ஆசாரியர்களின் உபதேச மொழிகளும் மந்திரங்களும் தமிழ் மக்களுக்குப் பயனளிக்கவேண்டுமானால் அவற்றின் பொருளைத் தமிழிலே கூறவேண்டுமென்ற கொள்கைப்படி, 'குகதாஸன்' ஆத்மாநுஸந்தானக் கிரமத்தையும் தமிழிலே அமைத்திருக்கிறார். பக்தி மார்க்கத்தை அவலம்பிக்குஞ் சாதுக்களுக்கு இந்நூல் விசேஷ நன்மையைத் தரக்கூடும்.

அகஸ்தியதாஸன்

மாதக் குறிப்புகள்.

படோதா மஹாராஜா ஸாயாஜீராவ் காலஞ் சென்றதைக் குறித்து 'சில்பஸ்ரீ' மிகவும் துக்கம் பாராட்டுகிறது. காலஞ்சென்ற மஹாராஜா தென்னாட்டிலிருந்து தஞ்சை பரதநாட்டிய கோஷ்டி யொன்றை தம் ஆஸ்தானத்திற்கு வரவழைத்து ஆதரித்துக் கொண்டிருந்தார். ஸங்கீத மஹா நாட்டைக் கூட்டி நடத்தினர். இந்தியா சம்பந்தமான வித்தைகளின் அபிவிருத்திக்காக இரண்டு வருஷத்திற்கு ஒரு தரம் பற்பல தலைநகர்களில் கூடும் அகில இந்திய ப்ராச்ய வித்யா ஸம்மேளனத்தை தம் ராஜதானிக்கு வரவழைத்து நடத்திவைத்தார். இவர் ஏற்படுத்திய ஏட்டுச் சுவடிப் புஸ்தகாலயத்தில் 20,000 சுவடிகள் இருக்கின்றன. இப் புஸ்தகாலயத்தை இவராதரவில் ஏற்படுத்தி உழைத்தது நம் தமிழ் நாட்டு வித்வான் ஒருவர். இன்றும் அப் புஸ்தகாலயத்தில் தமிழ் நாட்டு வித்வான்கள் உழைத்து வருகின்றனர். இப் புஸ்தகாலயங்களில் சுவடிகளைப் பூட்டி வைக்காமல் இப் புஸ்தகங்களில் முக்கியமானவற்றை அவ்வப்போது அச்சிட்டு வெளியிடும்படி ஏற்படுத்தினர். இப்படி 144 சிறந்த நூல்கள் அழகான அச்சில் அரிய முன்னுரைகளுடன் படோதாவிலிருந்து புலவருலகுக்கு அளிக்கப் பட்டிருக்கின்றன. இந்நூல்களில் 'சில்பஸ்ரீ' யின் அபிமானத்திற்குக் காரணமான நாரதருடைய 'ஸங்கீத மகரந்தம்' என்ற ஸங்கீத நூலும், பரதமஹர்ஷி செய்த நாட்டிய சாஸ்திரமும் அதன்மேல் அபிநவகுப்தர் செய் உரையும் வெளியிடப்பட்டிருப்பது மிகவும் உயரிய கலைத் தொண்டாகும்.

வே. ரா.

* * * *

மஹாமஹோபாத்திய ஐயரவர்களின் 85-வது ஆண்டு நிறைவு விழா 6-3-1939 திங்கட்கிழமை யன்று சென்னை திருவல்லிக்கேணியிலும் திருச்சிராப்பள்ளியிலும் ஐயரவர்கள் பிறந்த ஊராகிய உத்தமதானபுரத்திலும் கொண்டாடப் பெற்றது. சென்னையிலே நடந்த விழாவிற்கு வந்து நேரிற் கலந்து கொள்ள இயலாதவர்களான திருப்பனந்தாள் மடாதிபதிகள், ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், மஹாமஹோபாத்யாய பாஷாபாரத துரந்தர மணலூர். வி. ராமானுஜாசாரியார், எச். ஏ. பாப்புலி துரை, முதலான பிரமுகர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தார்கள். காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரியாரவர்கள் சாலுவைகள் அனுப்பியிருந்தார்கள். தமிழ் மாணவர் சபையின் சார்பாக அபிநந்தனப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. பிறகு ராவ் சாகிப் எம். ராகவையங்கார், ஸ்ரீ ஆர். பி. சேதுப்பிள்ளை, ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் முதலியோர் பலர் ஐயரவர்களின் அரும் பெருந் தொண்டினைப் புகழ்ந்து கூறினர்கள். சதாபிஷேகக் கொண்டாட்டத்திற்குப் பிறகு நான்கு ஆண்டுகளில் 19 புது நூல்களைப் பதிப்பித்ததோடு பல அரிய கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு ஐயரவர்கள் உதவியுள்ளார்கள் என்றும் பழந்தமிழை உலகிற்கு உதவிய பெருமையோடு புதுத் தமிழ் நடைக்கும் வழிகாட்டிய பெருமையினையும் படைத்தவர்கள் என்றும் சிந்தாமணி எழுதிய அவரது திருக்கரம் சிறு கதையும் எழுதுகிறது என்றும் அன்று தமிழுக்கு இலக்கணம் அருளிய அகஸ்தியர் இன்று தமிழுக்குப் புது இலக்கியத்தைத் தந்தருளுவதைக் கண்கூடாகக் காண்கிறோம் என்றும் பேசப்பட்டது. பின்பு, ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் பேசும் போது, ஐயரவர்கள் தமிழ் நடைக்கு மார்க்க தர்சிகளாவார்கள் என்றும் அவர்களுக்கு ஒரு உருவச்சிலை பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் கூறினர்கள்.

ஐயரவர்கள் பதிலளிக்கையிலே, தாம் இவ்வாறு விழாக் கொண்டாடுவதை எதிர்பார்க்கவில்லை என்றும் எல்லா மதத்தினரும் எல்லாச் சாதியினரும் சேர்ந்து தம்மைக் கௌரவித்ததைத் தமிழைப் போற்றியதாகவே தாம் கொள்வதாகவும் முன்னாளிலே படித்தவர்கள் தமிழை அலட்சியம் செய்தது மாறி,

இவ்வாறு தமிழ் மொழியிலும் தமிழ் நூல்களிலும் பொது மக்கள் ஊக்கங்கொள்வதைக் கண்டு தாம் ப்ரம திருப்தி யடைவதாகவும் தாம் பல பழைய நூல்களைத் தேடிப் பதிப்பிக்க பலரும் பல வகையாலும் உதவினார்கள் என்றும் நாளுக்கு நாள் தமிழ் மக்களுக்குத் தமிழிலே பற்று மிகுந்து வருவதைக் கண்டால் தமிழின் வருங்கால நிலைமையைப்பற்றித் தமக்கு யாதொரு ஸந்தேகமுமில்லை என்றும் மூப்புக்கும் நோய்க்கும் தாம் மனமுடையவில்லை யென்றும் தாம் தொடங்கிய பதிப்பு வேலைகளெல்லாம் முற்றுப்பெற வேண்டுமென்ற கவலையே தம்மைப் பீடிப்பதாகவும் இக்கவலையை இதுகாறும் தீர்த்து வைத்ததைவிட இன்னுமதிகமாக முயன்று, தமிழ் மக்கள் தம்மைக் கிருதகிருத்தியாக்குவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்கள்.

வே. நா.

* * * *

மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் இந்தப் பகுதியிலே பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் என்னும் ஸங்கீத வித்வானைப்பற்றி எழுதியுதவினார்கள். அவர்களுடைய பூர்ண ஆதரவு 'சில்பஸ்ரீ'க்குக் கிடைத்துள்ளதை மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்.